Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
T.P - 0212225969
E.Mail - info@cityhoteljaffna.com
Web - www.Cityhoteljaffna.com

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 மாசி 12 ஞாயிற்றுக்கிழமை (24.02.2013) பக்கங்கள் 20 ஓசை – 147
















# பாதுகாப்பை வலுப்படுத்த தயாராகிறது அரசாங்கம்

அடுத்த சில வாரங்களுக்கு நாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்த அரசாங்கம் தயாராகிவருகிறது. இதன் ஒரு கட்டமாக புலனாய்வுப் பிரிவினர் உடனடியாக செயற்பாட்டுக்கு வரும் வகையில் நேரடியாக களத்தில் இறக்கிவிடப்பட்டுள்ளனர்.

முக்கியமாக எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமை பேரவையின் கூட்டத்தின் போது, இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட சில இடங்களில் குழப்பத்தை ஏற்படுத்தி அதன் மூலம் இலங்கையின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்த சில உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் முயற்சித்து வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதை அடுத்து அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இவ்வாறான குழப்பத்தை ஏற்படுத்தும் தகவல்களைக் கண்டுப்பிடிப்பதற்காக விசேட அதிகாரிகள் குழு 24 மணி நேரமும் செயற்படும் வகையில் பணிகளில் ஈடுபடுத்தப்பட்

19 ஆம் பக்கம் பார்க்க

## எரிபொருள் மானியம் வழங்கப்படமாட்டாது

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்ட போதிலும் நாட்டின் தற்போதை பொருளாதார நிலைமையின் கீழ் எரிபொருள் மானியத்தை வழங்க முடியாது எனப் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா, நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 89 மில்லியன் ரூபா நட்டத்தை எதிர்நோக்கியிருந்ததாக அமைச்சர் குறிப்பிட்

19 ஆம் பக்கம் பார்க்க

## முச்சக்கர வண்டி கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், முச்சக்கர வண்டிகளின் கட்டணங்களையும் அதிகரிக்க முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. இந்த நடைமுறை நாளை முதல் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய, முதல் கிலோ மீற்றருக்கான கட்டணத்தை 40 ரூபாவாக அதிகரி

19 ஆம் பக்கம் பார்க்க

## பிளாஸ்ரிக் பந்தை விழுங்கிய பெண் குழந்தை மயக்கம்

(யாழ்ப்பாணம்)

பிளாஸ்ரிக்கினாலான சிறிய விளையாட்டுப் பந்து ஒன்றை எடுத்து விழுங்கிய ஒரு வயதுப் பெண் குழந்தை மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று கிசிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைச் சேர்ந்த கோமகன் ரக்ஷனா என்ற ஒரு வயதுக்குழந்தையே இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, நேற்றுக்காலை 7.00 மணியளவில் குறித்த குழந்தையின் தாயார் சமையல் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் விளையாடிக் கொண்டிருந்த குறித்த பெண் குழந்தை விளையாட்டிற்கு வைக்கப்பட்டிருந்த பிளாஸ்ரிக்கினாலான

19 ஆம் பக்கம் பார்க்க

## ஆறாயிரம் ஏக்கர் காணியில் விரைவில் மீள்குடியேற்றம்

### தளபதி ஹத்துருசிங்க தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை, கோப்பாய் பிரதேச செயலகங்களின் தகவலின் அடிப்படையில் ஆறாயிரம் ஏக்கர் காணிகளில் மக்கள் விரைவில் மீள்குடியமர்த்தப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

பலாலி பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

போர்க்குற்றப் படங்கள் என போலியான புகைப்படங்களை வெளியிட்டு சனல் - 4 தொலைக்காட்சி நிறுவனம் இலங்கையை விலை பேசுகின்றது.

யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினர் காணிகளை அபகரிப்பதாக மக்களை பயப்படுத்தி போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்கின்றார்கள். அமைதி இருக்கவேண்டுமா

19 ஆம் பக்கம் பார்க்க

## பாலச்சந்திரனின் புகைப்படங்களை அரசாங்கம் நிராகரிப்பது கடினம்



விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் கொல்லப்பட்ட புகைப்படங்களை அரசாங்கம் நிராகரிப்பது கடினமான காரியமாக இருக்கும் என்று டி.பி.எஸ். ஜெயராஜின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது இந்தப்புகைப்படங்களில் பாலச்சந்திரன் உயிருடன் உள்ளமையும் பின்னர் கொல்லப்பட்ட காட்சிகளும உள்ளன. இந்தப் புகைப்படங்களில், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையின் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்களால், சனல் -4 தொலைக்காட்சியின் 'நோ பயர் சோன்' தயாரிப்பாளர் கலும் மெக்ரேக்கு கிடைத்துள்ளது. இதனையடுத்து 'நோ பயர் சோன்' ஆவணப்படம் எதிர்வரும் ஜெனிவா அமர்வின்

19 ஆம் பக்கம் பார்க்க

## 13ஆவது திருத்த அமுலாக்கம் வாக்கெடுப்பு நடத்த வேண்டும்

### பாதுகாப்புச் செயலர்

(கொழும்பு)

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தை தொடர்ந்தும் அமுல்படுத்த வேண்டுமா இல்லையா என்பதை அறிய மக்கள் மத்தியில் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ஆட்சி நடைபெறும் நாட்டில் பெரும்பான்மையான மக்களின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது வழமை

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் கட்சியாக கூட்டமைப்பை பதிவு செய்வதற்கு இணக்கம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை அரசியல் கட்சியாக பதிவுசெய்வதற்கும் அதன் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் வகையில் உயர்பீடம் ஒன்றை அமைப்பதென்றும் முடிவு காணப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளின் தலைவர்க ளின் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமசந்திரன்

19 ஆம் பக்கம் பார்க்க

## தமிழர் உணர்வைப் பிரதிபலிக்காத இந்திய ஜனாதிபதியின் உரை

### ஆதங்கப்படுகிறார் கருணாநிதி



இலங்கைப் பிரச்சினை தொடர்பாக இந்திய ஜனாதிபதி, பிரணாப் முகர்ஜி நாடாளுமன்றத்தில் கூறிய விடயங்கள் தமிழர்களின் இதய வேதனையை எதிரொலிப்பதாக இல்லை என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

உலக நாடுகள் ராஜபக்ஷ ஒரு சர்வதேசப் போர்க்குற்றவாளி என்று கடுமையாகக் கண்டிக்கவும் தண்டிக்கவும் முற்படுகின்ற வேளையில், இந்திய அரசு மட்டும் அவரைப் பற்றிய உண்மை விவகாரங்களை இன்னமும் புரிந்து கொள்ளாமல், இலங்கையுடனான உறவு மேம்பட்டு வருகிறது என்று குடியரசுத் தலைவரின் உரையில் குறிப்பிட்டிருப்பது ஏன் என்று புரியவில்லை என்று கேட்டுள்ளார் முன்னாள் தமிழக முதல்வர் கருணாநிதி. இலங்கை அதிபர் ராஜபக்ஷ ஈழத் தமிழர்கள்பால் அக்கறை கொண்டவரைப் போல இந்திய அரசிடம் காட்டிக் கொண்டு, இந்திய

19 ஆம் பக்கம் பார்க்க

## நாட்டிற்கு எதிரான சூழ்ச்சிகளை ஜெனிவாவில் முறியடிக்கத் தயார்

### அமைச்சர் சமரசிங்க கூளுரை

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் நாட்டுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சூழ்ச்சித் திட்டங்ளை முறியடிக்கத் தயார் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். நாட்டுக்கு எதிராக எவ்வாறான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் அதனை வெற்றிகொள்ளத் தயார். நாட்டின் உண்மை

19 ஆம் பக்கம் பார்க்க

# சின்னஞ்சிறு செய்திகள்

## பேருந்து சேவை விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பாடசாலை பேருந்து சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு மேற்கு நெழுவிழிப்பிள்ளையார் ஆலயம் வரை இதுவரை காலமும் சென்று திரும்பிவந்த பாடசாலை பேருந்து ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட எம்.பி. சில்வேஸ்திரி அலன்ரினின் முயற்சி காரணமாக நாளை முதல் நெடுந்தீவு மேற்கு புதுக்கடை வரை சென்று வரவுள்ளது.

## ஒத்திவைக்கப்பட்டது அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் அமைக்கப்படவுள்ள கைத்தொழிற் பேட்டைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்றைய தினம் பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறவிருந்த நிலையில், தவிர்க்கமுடியாத காரணத்தால் அந்நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதாகவும், அடிக்கல் நாட்டும் நிகழ்வுக்கான திகதி விரைவில் அறிவிக்கப்படுமெனவும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வி. சிவஞானசோதி அறிவித்துள்ளார்.

## சுயதொழில் உதவிக்கு பயனாளி தெரிவு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் இருந்து சுயதொழில் உதவிகோரி விண்ணப்பித்த கைதடியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் நிருபராணி என்பவருக்கான உதவு தொகை மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயனாளி குடும்ப அட்டை தேசிய அடையாள அட்டை சகிதம், தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவை பிரிவுக்கு சமூகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளார். (11)

## தொடரும் டெங்குத் தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றும் இருவர் டெங்குத் தொற்றிற்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து ஒருவரும், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து ஒருவருமாக இருவரே இவ்வாறு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (பா)

## கொடுப்பனவு


(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்டோருக்கான பெப்ரவரி மாத ஆயிரம் ரூபா கொடுப்பனவு அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்பட்டுவருகின்றன.

உரியவர்கள் மார்ச் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

# இந்தியக் கலைக்கூடத்தில் பயில்வதற்கு யாழ்.மாணவர்களின் ஆர்வத்தால் மகிழ்ச்சி

## – என்கிறார் இந்தியத் தூதுவர் அசோக்கே காந்தா



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தில் இயங்கி வரும் இந்தியக் கலைக்கூடத்தில் பயில்வதற்கு யாழ்.மாணவர்கள் ஆர்வமாக இருப்பது தமக்கு மகிழ்ச்சியைத் தருவதாக இந்தியத் தூதுவர் அசோக்கே காந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் யாழ். மருதடி வீதியில் அமைந்துள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் அமைந்துள்ள இந்திய கோணரை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைத்து சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்தியத் துணைத்தூதரகம் அமைக்கப்பட்ட போது இந்திய கலைக்கூடத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கான அனுமதியை துணைத்தூதர் மாகாலிங்கம் கேட்டிருந்தார். எனினும் பொருத்தமான இடவசதி இல்லாததன் காரணமாக அது கைகூடவில்லை. ஆனால் தற்சமயம் துணைத்தூதரகம் அமைந்திருக்கும் இடத்தில் இதற்கென இடம் ஒன்று ஒதுக்கப்பட்டு கடநத ஜனவரியில் இருந்து இந்தியக் கலைக்கூடம் இயங்கிவருகிறது.

இதில் 27 யாழ்.மாணவர்கள் இசை, யோகாசனம், இந்தி மொழி ஆகியவற்றை பயில்கின்றனர். அத்துடன் மேலும் 40 வரையான மாணவர்கள் பயில்வதற்கு காத்திருக்கின்றனர். இதையிட்டு நாம் பெருமகிழ்வடைகின்றேன்.

எதிர்காலத்தில் இந்த இந்திய கலைக்கூடம் பாரிய விசாலமான கலைக்கூடமாக அமையும். கொழும்பில் உள்ள இந்தியக் கலைக்கூடத்திற்கும் இங்குள்ள இந்திய கலைக்கூடத்திற்கும் டில்லியில் இருக்கும் இந்தியக் கலைக்கூடம் சகல வழிகளிலும் உதவிபுரிந்துவருகிறது.

மேலும் மன்னார் - திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதற்கென இந்தியாவில் இருந்து தொல்பொருளியலாளர்களும் வரவளைக்கப்பட்டுள்ளனர். மேலும் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு இந்தியா - இலங்கை மாணவர்களுக்கு குறிப்பாக வட பகுதி மாணவர்களுக்கு வழங்கும் புலமைப்பரிசில்களை அதிகரித் திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இந்திய கோணரின் நினைவுக்கல்லை தூதுவர் அசோக்கே காந்தா திரைநீக்கம் செய்து வைத்து தொழிற்பாட்டை ஆரம்பித்து வைத்ததுடன் வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலைப் புத்தகங்களையும் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப்பைகள் என்பவற்றையும் சம்பிரதாய பூர்வமாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் கையளித்தார்.

மேலும் யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கல்லூரி மாணவர்களுக்கான ஒரு தொகுதி இசைப்பாட நூல்களை பேராசிரியர் சத்தியசீலனிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் திருமதி அசோக்கே காந்தா இந்தியத் துணைத் தூதர் வி.மகாலிங்கம், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் இந்தியத் தூதரக அதிகாரிகள், பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் பல்துறைசார்ந்தரவர்கள் கலந்து கொணடனர். (பா)

## மண்டபத்திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஊடக மையத்தின் ஊடக அமைய மண்டபத் திறப்பு விழாவும், வாழ்நாள் ஊடக சாதனையாளர்கள் கௌரவிப்பும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.இராசாவின் தோட்ட வீதியில் உள்ள யாழ். ஊடக அமையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் விரிவுரையாளர் ஆ.சபேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஊடகத்துறை சார்ந்த சாதனையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

## பயிற்சி செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள ஆய்வு நிலையத்தின் ஏற்பாட்டில் விஞ்ஞான ஆசிரியர்களுக்கான பயிற்சி செயலமர்வு இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நாடளாவிய ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 60 தமிழ், சிங்கள, முஸ்லிம், விஞ்ஞான பாட ஆசிரியர்கள் கலந்துகொள்ளவுள்ள இப்பயிற்சி செயலமர்வு இலங்கை பறவைகள் கண்காணிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த வளவாளர்களால் நடாத்தப்படவுள்ளது.

பறவைகளின் வாழ்க்கை முறைமை மற்றும் கடல் நீரேரி ஆய்வுகள் சம்பந்தமான விரிவுரைகள் இடம்பெறவுள்ளன.

கடந்த 30 ஆண்டு இடைவெளியின்பின் யாழ்ப்பாணத்தில் இவ்வாறான பயிற்சி இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

தொண்டைமானாறுப் பகுதியில் இயங்கி வந்த வெளிக்கள நிலையம் கடந்தகால யுத்த சூழ்நிலையில் மிக மோசமாக சேதமடைந்திருந்தும், அமைச்சர் டக்ளஸ் தேவதனந்தாவின் முயற்சி காரணமாக சந்நிதியான் ஆலயச்சூழலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (109,116)

## இலவச திருமணப்பதிவு

(கரவெட்டி)

கரவெட்டி - துன்னாலை பகுதியில் இதுவரை திருமணப் பதிவு செய்யாத 50 குடும்பங்களுக்கான காலங்கடந்த திருமணப்பதிவு வடமராட்சி லயன்ஸ் கழக ஏற்பாட்டில் துன்னாலை கலிகை கந்தன் மண்டபத்தில் இன்று காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ, சிறப்பு விருந்தினர்களாக துன்னாலை மேற்கு மற்றும் கிழக்கு, தெற்கு கிராம அலுவலர்களான ஐ.சிறிரங்கநாதன், ப.லலித் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (116)

## மாற்றுத்திறனாளிகளுக்கு விசேட கொடுப்பனவு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு ஜனவரி மாதக்கொடுப்பனவு தேசிய அங்கவீனர்ளுக்கான செயலகத்தினால் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இக்கொடுப்பனவைப் பெறும் 33 பயனாளிகளும் தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா இவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. (11)

## பொதுக்கூட்டம்

(கோப்பாய்)

செம்மணி இந்துமயான அபிவிருத்திச்சபையின் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இந்துமயான அபிவிருத்திச் சபையின் தலைவர் சி.இலட்சுமிகாந்தன் தலைமையில் செம்மணி இந்துமயான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு இடம்பெறவிருப்பதால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் தணிகைநாதன் அறிவித்துள்ளார். (08)

## செலவுப்படி அதிகரிப்பு

(கோப்பாய்)

சகல மத்தியஸ்தர் உறுப்பினர்களுக்கும் ஒரு கூட்டமொன்றுக்கு வழங்கப்பட்டு வந்த நூறு ரூபா பிரயாணச் செலவுப்படி 500 ரூபா வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மாதமொன்றுக்கு ஆகக் கூடியது 2000 ரூபாவெனவும் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவால் மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. (08)

## சேவைநலன் பாராட்டு

(முழங்காவில்)

முழங்காவில் பகுதி கிராம சேவை அலுவலராக கடமையாற்றிய திருமதி நடேசமூர்த்தி வாசுகியின் சேவையை பாராட்டும் நிகழ்வு இன்று காலை முழங்காவில் கிருஷ்ணாநகர் ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் கிருஷ்ணர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

காலை விசேட பூசை ஆராதனைகளுடன் ஆரம்பித்து பின்னர் கிராம அலுவலர்களுக்கான பாராட்டும் கௌரவிப்பும் இடம் பெறும். அதனைத்தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறவுள்ளது. இப்பாராட்டு நிகழ்வினை முழங்காவில் கிராம மக்கள் ஏற்பாடு செய்துள்ளனர். (09)



இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் அமைந்துள்ள கச்சதீவில் அமைந்துள்ள புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா இன்று நடைபெறவுள்ள நிலையில் இரு நாடுகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் படகுகள் மற்றும் கப்பல்கள் மூலம் தீவுக்கு வந்தவண்ணம் உள்ளனர். திருவிழாவை முன்னிட்டு நேற்று மாலை இடம்பெற்ற விசேட ஆராதனைகளையும் பக்தர்கள் தீவை வந்தடைவதையும் காணலாம்.



573 ஆவது படைப்பிரிவின் ஒழுங்கமைப்பில் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பரந்தன் கிராம அலுவலர் பிரிவில் உள்ள மக்களில் மிகவும் வறுமை நிலையில் வாழும் மக்களுக்கு 50 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது, உரோமிலிருந்து வருகை தந்த மதகுரு மங்கள விளக்கேற்றுவதையும், இராணுவ அதிகாரி உரையாற்றுவதையும், பயனாளிகளுடன் பிரதிநிதிகள் நிற்பதையும் காணலாம். (77)

# பாரதியின் கனவை நனவாக்கியவர் தமிழ்தூது தனிநாயகம் அடிகளார்

## கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டலுவலர் அருள்சந்திரன்

(கிளிநொச்சி)

தேமதுரத்தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற பாரதியாரின் கனவை நனவாக்கிய பெருமை கொண்டவர் தமிழ்தூது தனிநாயகம் அடிகளார் ஆவார் என கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டலுவலர் மா.அருள்சந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்ற தமிழ்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு தொடக்க விழாவிலும் பரிசில் வழங்கல் நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணத்தில் அடிகளார் கல்வி கற்றகாலம் மொழியுரிமைக்காகப் போராட வேண்டிய தாய்மொழியாக ஆங்கிலத்தினை ஏற்றுக்கொண்ட காலமாகும் தமிழில் பேசினால் தண்டப்பணம் செலுத்தவேண்டிய காலத்தில், ஆங்கிலத்தில் கற்றுத் தேறி இறையியலிலும் கல்வியியலிலும் கலாநிதிப்பட்டங்களைப் பெற்று யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற பொது விதிக்கமைவாக உலக மக்கள் மத்தியில் தமிழின் பெருமையையும் தமிழ்ப்பண்பாட்டின் மகத்துவத்தினையும் தமது சொற்பொழிவுகள் மூலம் எடுத்துரைத்து தமிழ்தூது சென்றவர்.

அவர் இனம், மதம், சாதி அமைப்புகளுக்கு அப்பாற்பட்ட அனைத்து மக்களதும் அறிவுச்சுடராகத்திகழ்கின்றார் எனத் தெரிவித்தார்.

தமிழ்ச்சங்கத்தின் செயலாளர் வே.இறைபிள்ளை தலைமையில் நடைபெற்ற விழாவில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆசியுரையும், கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி திரேசா பெண்கள் கல்லூரிகளின் அதிபர்களது வ்ாழ்த்துரைகள் இடம்பெற்றன.

கரைச்சி கல்விக்கோட்டத்தில் திருக்குறள் மனனப்போட்டியில் வெற்றி பெற்ற 140 மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (142)

## புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத்திணைக்கள கூட்டுறவுச்சிக்கன கடனுதவிச் சங்கம் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்களை வழங்க விண்ணப்பம் கோரியுள்ளது.

தமது சங்கத்தில் குறைந்தது ஒரு வருட காலத்தின் மேல் அங்கத்துவத்தைப்பெற்றுள்ள அங்கத்தவர்களின் பிள்ளைகள் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலோ, க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவானாலோ இப்புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும் என அறிவித்துள்ளது.

விண்ணப்பங்களை இம்மாதம் 28 ஆம்திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் சுகாதாரத்திணைக்களத்தின் கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்கம் 37/36, பன்சலவீதி, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு அனுப்புமாறு அறிவித்துள்ளது. (இ)

## விழிப்புணர்வுச் செயலமர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் செ.சிறிநிவாசன் தலைமையில் ஐ.ஓ.எம். நிறுவனத்தால் சட்டவிரோத வெளிநாட்டுப் பயணங்களின் தீங்கு தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு நடைபெற்றது.

இந் நிகழ்வில் உதவித் திட்டப் பணிப்பாளர்கள். சமூக சேவைகள் அதிகாரிகள், கிராம அபிவிருத்தி அதிகாரிகள் , நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சட்ட விரோத வெளிநாட்டுப் பயணங்களினால் ஏற்படும் விளைவுகள் பற்றி விரிவான விளக்கமான தகவல்கள் வழங்கப்பட்டன. சட்டபூர்வ பயணங்களை மேற்கொள்ளக்கூடிய வழிவகைகள் பற்றியும் இதில் ஐ.ஓ.எம் அதிகாரிகளால் கூறப்பட்டது. மாவட்டத்தின் வெளிக்கள நிலையில் கடமை புரியும் அலுவலர்கள் தமது வெளிக்கள கடமைகளின்போது இவ்விடயத்தைப் பொது மககளிடம் கொண்டு செல்வுள்ளனர். (90)

## மீள்நியமனம்

(ஆனைக்கோட்டை)

கிராம உத்தியோகத்தர்களாக பணிபுரிந்து ஓய்வுபெற்ற பின்வரும் 3 கிராமசேவையாளர்களுக்கு மீண்டும் இவ்வருடம் டிசம்பர் 31 ஆம் திகதி வரை மீள் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சாவற்கட்டு ஜே/31 வை. சந்திரராசா, இளவாலை ஜே/155 ந.நாகராசா, சண்டிலிப்பாய் வடக்கு ஜே/141 இ.நித்தியானந்தம் ஆகியோரே மீள் நியமனம் பெற்றவர்களாவர். (104)

## வீதியில் பரவியுள்ள கற்களால் சிரமத்துக்குள்ளாகும் மக்கள்

இராச வீதியின் சில பகுதிகளில் சல்லிக்கற்கள் வீதியில் பரவிவிடப் பட்டுள்ளதனால், பாதசாரிகள் உட்பட வாகன சாரதிகளும் பயணம் செய்வதில் பல சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக தெரிய வருவதாவது,

நீர்வேலி, முடமாவடி, கோப்பாய், அச்சுவேலி தோப்பு பகுதிகளில் வீதி செப்பனிடுவதற்காக கற்கள் பரவி விடப்பட்டுள்ளதால் வாகனங்களின் ரயர்கள் பழுதடைவதுடன் வாகனங்கள் செல்லும் போது கூரிய கற்கள் தெறித்து பறந்து நடந்து செல்பவர்கள் மீது காயங்களை ஏற்படுத்துவதுடன் தெறிக்கும் கற்களால் கடைக் கண்ணாடிகளும் உடைவதாக வீதியோர கடைக்காரர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே செப்பனிடவேண்டிய வீதிகள் தொடர்பாக கவனத்தில் கொண்டு மக்களுக்கு உரிய போக்குவரத்தினை ஏற்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றனர். (15)

## மாசி மகம்

நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானம் அளவெட்டி மேற்கு ஆலயத்தில் திங்கட்கிழமை மாசிமக அனுஷ்டான பூசை பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிசேக ஆராதனைகளுடன் பூசை ஆரம்பமாகும். முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து அலங்காரத்தண்டிகையில் சுவாமி வீதியுலா எழுந்தருள்வார். மதியம் 12 மணிக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும். (68)

## திதொரா நிறுவனத்தினால் யாழில் நாடக ஆற்றுகை

(கொழும்புத்துறை)

மாற்று வலுவுள்ள பிள்ளைகளுடன் நாடக அரங்குசார் பயிற்சி நெறியூடாக பணியாற்றி வரும் கொழும்பு THIDORA (திதொரா) நிறுவனத்தின் ஏற்பாட்டில் வலிகாம கல்வி வலய ஒழுங்கமைப்பின் கீழ் நாடக ஆற்றுகை நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 -11 மணிவரை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் பாடசாலையின் அதிபர் ஞா.கேதீஸ்வரன் தலைமையிலும், அன்றைய தினம் 12.00 தொடக்கம் 1.00 மணிவரை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் அதிபர் சி.தனஞ்சயன் தலைமையிலும் இடம்பெறவுள்ளது.

இந்த இரு பாடசாலைகளில் இடம்பெறும் ஆற்றுகை நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக THIDORA (திதொரா) நிறுவனத்தின் ஸ்தாபகரும் அரங்குசார் வளவாளருமான கலாசூரி ரோகண தேவா மற்றும் சிறப்பு விருந்தினராக யாழ். நீதவான் நீதிமன்ற சட்டத்தரணி மதுரநாயகம் ஜொனி, வலிகாம விசேட கல்வித்திட்ட அதிகாரி த.முருகானந்தன் மற்றும் இணுவில் வாழ்வகத்தின் தலைவர் ஆ.ரவீந்திரன் மேலும் யாழ் திருக்குடும்ப கன்னியர் சபையின் அருட்சகோதரி சாந்தினி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். தொடர்ந்து கலைநிகழ்வுகளாக கோலாட்டம், முயல்நடனம், பாடல்கள் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (52)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் சர்வதேச மார்க்சிய குழுவின் ஏற்பாட்டில் வடபுலத்து இடதுசாரி இயக்க முன்னோடி தோழர் சண்முகதாசன் நினைவாக சமகால அரசியல் பற்றிய ஓர் கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு டி.எம்.ஐ. தனியார் கல்விநிறுவனத்தில் ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

## திருமஞ்சத் திருவிழா வானொலியில் அஞ்சல்

(திருநெல்வேலி)

சங்கானை நிகரை அருள்மிகு ஸ்ரீஞானவைரவப் பெருமான் ஆலயத்தில் நடைபெற்றுவரும் அலங்காரத்திருவிழாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை விசேட அபிசேக ஆராதனை வழிபாடுகள் இடம்பெற்று மாலை 6 மணிக்கு திருமஞ்சப்பெருவிழா நிகழ்வுகள் வசந்த மண்டபப்பூசையுடன் ஆரம்பமாகவுள்ளது.

திருமஞ்ச விழாவையொட்டி இன்றைதினம் ஆசைப்பிள்ளை அன் சன்ஸ் நகைமாட உரிமையாளர்களின் ஏற்பாட்டில் வான வேடிக்கை நிகழ்வுகள் வான வெளிச்சக் கூடுகளின் பவனி மற்றும் நாகம்ஸ் இன்னிசை கலைஞர்களின் இசைநிகழ்வுகள் ஆகியன இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்ச்சிகள் யாவும் இன்று மாலை 7 மணிமுதல் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன யாழ். எவ்.எம். அலைவரிசையூடாக நேரடியாக அஞ்சல் செய்யப்படவுள்ளது. (60)

காற்றாடி காற்றை எதிர்த்தே உயரச் செல்கிறது் காற்றுடன் அல்ல - *வின்ஸ்ட்டன் சர்ச்சில*


தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU



இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
**Online : www.thinamurasu.net**


## நம்பிக்கை பலிதமானால் நல்லது!

உழைப்பே கடவுள் என்றுதான் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. உழைப்பை நாம் வணங்கவே செய்கிறோம். உழைக்காவிட்டால் குற்ற உணர்ச்சிகொள்கிறோம். உழைப்பு, வேலை, முன்னேற்ற இலக்குகள் என்று ஓடிக்கொண்டிருக்கிறோம். இதுதான் மனித இயல்பாக முன்வைக்கப்படுகிறது. ஆனால் இது செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட திணிப்பு. மனித குலத்தின் இயல்பு இதுவல்ல என்கிறார் சமூகவியல் அறிஞரான ஜோன் செர்சான்.

அவர் அங்கம் வகிக்கும் “உழைப்பு, வேலை, பிரதிநிதித்துவம் மற்றும் நாகரிகத்துக்கு எதிரான தெற்காசிய கூட்டமைப்பு” இந்த இயல்பை கேள்விக்குள்ளாக்குகிறது. 50 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மாணவன் பரீட்சையில் 50% புள்ளிகள் எடுத்தால் அது பெரிய சாதனையாக கருதப்பட்டது. ஆனால் இன்று 100% புள்ளிகள் எடுத்தாலும் பெரிய செய்தியாக இல்லை.

ஐம்பதுகளில் குடும்பத்தில் ஒரு உறுப்பினர் வேலைக்குச் சென்றால் பலர் அடங்கிய பெரிய குடும்பத்தைக் காப்பாற்றமுடியும். ஆனால் இன்று கணவன், மனைவி இருவரும் தலா 12 மணிநேரம், பிற உறுப்பினர்கள் சுமார் 6 மணிநேரம் என ஒரு நாளைக்கு 30 மணிநேரம் இன்று வேலை செய்கிறோம்.

ஏன் இப்படி உழைப்புக்கு அடிமையாகிவிட்டோம்? தனிப்பட்ட சமூக வாழ்க்கைக்கு மனிதனுக்கு இன்று நேரமே இல்லை. கூடி மகிழ்தல், விளையாட்டு, விருந்தோம்பல் ஆகிய மனித இயல்புகளுக்கு இன்று இடமில்லாமல் போய்விட்டது. தொழில்நுட்பம் என்பது மனிதனுடைய வேலையைக் குறைப்பதற்காக உருவானது. ஆனால் நடந்தது என்ன?

இன்று மனிதன் வேலைநேரம் போக படுக்கையிலும், கழிப்பறையிலும்கூட வேலை செய்யும் நிலை வந்துவிட்டது. கீழ் நோக்கி வீழ்ந்துவிடுவோமோ என்ற அச்சத்தால் உயர் நடுத் தர வர்க்கம் பீடிக்கப்பட்டு, மேலும் மேலும் உழைத்துக் கொண்டிருக்கிறது.

நமக்கு முந்தைய சமூகம் இதைப் பற்றி கேள்வி எழுப்பாத தன் சுமையை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நமது எதிர்கால சமூகத்துக்காக இந்த உழைப்பை கேள்விக்குள்ளாக்க வேண்டும் என்கிறது இந்தக் கூட்டமைப்பு.

வினோதமான புதிய புதிய தொழில்நுட்பங்கள் எல்லாம் வருகின்றன. ஒரு புதிய கார் வருகிறது. ஒரு பொத்தானை அழுத்தினால் தன்னால் ஓடுகிறது. குழந்தை அழும்போது அது ஏன் அழுகிறது என்று சொல்ல ஓர் எந்திரம். இதெல்லாம் எதற்கு? நாம் நம்முடைய திறன்களை, லட்சக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்த உணர்வுகளை இழந்து கொண்டிருக்கிறோம்.

1980களுக்குப் பிறகு நண்பர்களே இல்லாத மனிதர்கள் எண்ணிக்கை மூன்று மடங்காக உயர்ந்துள்ளதாக ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. இந்தக் காலகட்டத்தில்தான் எல்லோரிடமும் செல்போன் வந்து சேர்ந்தது. உலகமே ஒரே குடும்பமாக, ஒரே கிராமமாக மாறிவிட்டது. ஆனால் இது உண்மையா? இதற்கு மிகவும் நேரெதிராக இருக்கிறது உண்மை நிலவரம். நாம் மேலும் மேலும் தனிமைப்பட்டுக்கொண்டே இருக்கிறோம். நமக்கு பேஸ்புக்கில் நண்பர்கள் இருக்கிறார்கள். ஆனால் நேரடி நண்பர்களை இழந்துவிட்டோம்.

நாம் அனைவரும் தொழில்நுட்பத்தால் மூழ்கடிக்கப்பட்டுள்ளோம். மக்கள் தங்கள் செல்போன்களைப் பார்த்த வண்ணம் பிணங்களைப் போல நடந்து கொண்டிருக்கிறார்கள். இது எல்லாவற்றையும் தூக்கியெறியுங்கள் என்று சொல்வது, இப்போது சுலபமல்ல என்பது தெரிகிறது.

மக்கள் விரைவில் இந்த செயற்கையான தனிமனித வாழ்வில் வெறுப்படைந்து விடுவார்கள். வேறுபட்ட அணுகுமுறைகளுக்கும் வேறுபட்ட அரசியலுக்கும் அவர்கள் மாறுவார்கள் என்ற செர்சான் அவர்களது நம்பிக்கை பலிதமானால் நல்லது தான்.

- *ஆசிரியர்*

# யுத்தகால குற்றச்செயல்கள்
# ஐ.நா.வுக்கு அரசு விளக்கம்

(ஜெனிவா)

யுத்தகுற்றச்செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து அரசு மீதான ஐ.நா.சபையின் குற்றச்சாட்டுக்களுக்கு, இலங்கையின் பதில் அறிக்கை தயாராகி விட்டது. இப்பதில் அறிக்கை ஏற்கனவே ஐ.நா.சபையிடம் உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூனிடம், அரசாங்கம் பதில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது. இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி டாக்டர் பாலித கொஹணவினால் இந்த அறிக்கை பான் கீ மூனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கைக்கு எதிராக அறிக்கை ஒன்றை தயாரித்துள்ளார்.

இந்த அறிக்கையின் நகலப் பிரதி இலங்கை அரசாங்கத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பதில் அறிக்கையானது ஏனைய நாடுகளின் இராஜதந்திரிகளுக் கும் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அரியாலைகிழக்கு நோக்கி மேலதிக பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு - பூம்புகார் கிராமம் வரை காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை நான்கு பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை யாழ். சாலை முகாமையாளர் செல்வத்துரை குணபால செல்வம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் இப்பகுதிக்கு இதுவரை காலமும் பிற்பகல் 2.10 மணிவரை மூன்று பேருந்து சேவைகள் மட்டும் இடம்பெற்று வந்தன. தமக்குரிய சேவையை மாலைவரை அதிகரிக்குமாறு அப்பகு திக்கு விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானநதாவிடம் மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கமைய நாளை 25 ஆம் திகதி முதல் இப்பகுதிக்கான புதிய மாலை நேரச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாலை 6.00 மணிக்கு யாழ். பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் பேருந்து அரியாலை கிழக்கு பூம்புகார் வரை சென்று அங்கு 15 நிமிடங்கள் தரித்திருந்து மீண்டும் அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு சேவையில் ஈடுபடும்.

இதேபோன்று ஏற்கனவே இடம் பெறும் சேவைகளாகிய காலை 6.00 மணி, முற்பகல் 10.00 மணி, பிற்பகல் 2.10 மணி ஆகிய நேரங்களில் சேவையில் ஈடுபட்டபேருந்து சேவைகளும் வழமை போன்று தமது சேவையில் ஈடுபடும் இதற்கு மேலதிகமாக நாளை முதல் மாலை 6.00 மணிக்கு இந்தப்புதிய சேவை ஆரம்பிக்கின்றது. எனவே இதன் மூலம் இப்பகுதி மக்கள் பெரும் நன்மை அடைவர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# “ஹெலி” இறங்குதளம் சிவனொளிபாதமலையில்

(கொழும்பு)

சிவனொளிபாதமலையில் ஹெலி இறங்குதளம் ஒன்றை நிர்மாணிப்பது தொடர்பில் ஆலோசனை செய்யப்பட்டு வருகின்றது. சிவனொளிபாதமலை - மாமடுவைக்கு சில கிலோமீற்றர் தூரத்தில் ஹெலிகொப்டர் இறங்கும் வகையிலேயே இந்த இறங்கு தளத்தை நிர்மாணிப்பது தொடர்பில் கலந்துரையாடப்படுகின்றது.

சிவனொளிபாதமலைக்கு தரிசனத்திற்கு செல்கின்ற அதி முக்கிய பிரமுகர்கள் மற்றும் சுற்றுலாத் துறையினரை கவனத்தில் கொண்டே இந்தத் தளத்தை அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மியன்மார் அகதிகள் மீட்பு; கடற்படைக்கு கிடைத்தது பாராட்டு

கடற்படையினரின் நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் பாராட்டியுள்ளது. நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த மியன்மார் படகுப் பயணிகளை மீட்டு அவர்களுக்கு தேவையான அவசர முதலுதவிகளை வழங்கியமை பாராட்டுக்குரியது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியா நோக்கிப் படகில் பயணிக்க முயற்சித்த குறித்த மியன்மார் பிரஜைகளில் 90இற்கும் மேற்பட்டவர்கள் பட்டினி மற்றும் ஏனைய நோய்களாலும் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கைக் கடற்பரப்பிற்குள் நிர்க்கதியான நிலையில் காணப்பட்ட மியன்மார் பிரஜைகளை அவசரமாக மீட்டு அவர்களுக்கு தேவையான முதலுதவிகளை கடற்படையினர் வழங்கியுள்ளனர்.

இவ்வாறான பணிகளின் போது இலங்கைக்கு முழுமையான ஆதரவினை வழங்கத் தயார் என ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தின் பேச்சாளர் அன்ட்ரிஜ் மாசீக் தெரிவித்துள்ளார்.

# கல்மடு மகாவித்தியாலய மாணவர்கள் முன்னிலை

(வவுனியா)

வவுனியா கல்மடு மகாவித்தியாலய மாணவர்கள் கடந்த வருடம் இடம்பெற்ற க.பொ.த.உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர் என அப் பாடசாலையின் அதிபர் கணபதிப்பிள்ளை செல்வதேவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

நவோதய பாடசாலையான கல்மடு மகாவித்தியாலயத்தில் இருந்து கலைத்துறையில் 43 மாணவர்கள் தோற்றியதாகவும் அவர்களில் 37 பேர் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்துள்ளதுடன் ஒருவர் மாவட்ட மட்டத்தில் 3 ஆம் இடத்தினையும் பெற்றுள்ளார்.

இவர்களில் 10 பேர் பல்கலைக்கழகத்திற்கு செல்லும் நிலையில் உள்ளனர். இந்துநாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களில் 100 வீத சித்தியை பாடசாலை மாணவர்கள் பெற்றுள்ளனர்.

இதன் நிமித்தம் 89 வீதமான மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதுடன் இது வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் சிறந்த பெறுபேறாகவுமுள்ளதென அவர் தெரிவித்தார். (160)

# மாலைதீவு ஊடகவியலாளருக்கு கொழும்பில் விசேட சிகிச்சை

மாலைதீவில் குண்டர்குழுவொன்றின் தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளர் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மாலைதீவு தலைநகர் மாலை பகுதியில் இப்ராஹிம் அஸ்வட் வஹீட் என்பர் குண்டர் குழுவால் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத நபர்கள் இரும்பு, பொல்லுகளால் ஊடகவியலாளரின் தலையில் தாக்கியுள்ளனர். இதன்போது படுகாயமடைந்து மயக்கமுற்ற ஊடகவியலாளர் மாலைதீவில் ஏ.டி.கே. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாலைதீவு எதிர்க் கட்சி ஆதரவு ஊடக நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய குறித்த ஊடகவியலாளர் மீதான தாக்குதலை கண்டித்து நேற்று முன்தினம் எதிர்க் கட்சிகள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

# கூட்டமைப்புத் தலைவர்களின் வர்க்க முகம் வெளிப்படுகின்றது

**இனப்பிச்சினைக்கான அரசியல் தீர்வில் கூட்டமைப்புக்குச் சிறிதளவேனும் அக்கறை இல்லை. இந்த அக்கறை இன்மையை மக்களிடமிருந்து மறைப்பதற்கு ஏதேனும் நிகழ்வுகளை நடத்திக் கொண்டிருக்க வேண்டிய தேவை இருக்கின்றது. மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுள் ஏதாவதொன்றை முன்வைத்து ஆர்ப்பாட்டம், சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம் என்று எதையாவது நடத்திக் கொண்டிருப்பார்கள். மக்கள் ஆணை வழங்கிய அரசியல் தீர்வு முயற்சியிலிருந்து ஒதுங்கி நின்றுகொண்டு தங்கள் அரசியல் இருப்பை உறுதிப்படுத்துவதற்கு இவை தேவைப்படுகின்றன.**

■ சங்கர சிவன்

தெல்லிப்பளையில் நடைபெற்ற உண்ணாவிரதம் தொடர்பான நிகழ்வுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் எங்கே செல்கின்றது என்ற கேள்வியை எழுப்புகின்றது. வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் ஏற்பாடு செய்ததெனக் கூறிய போதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டதே அந்த உண்ணாவிரதம்.

பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த இடங்களில் மீண்டும் குடியேறுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்ற வலிகாமம் வடக்கு மக்களின் கோரிக்கையிலுள்ள நியாயத்தை எவரும் மறுதலிக்க முடியாது. கட்டங் கட்டமாக அரசியல் தீர்வை அடைவதற்கான முயற்சிக்கூடாக இம் மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற முடியும். ஆனால், கூட்டமைப்பு அதற்குத் தயாராக இல்லை. மக்கள் தங்கள் சொந்த இடங்களில் குடியேறுவதிலும் பார்க்க, இந்தப் பிரச்சினை மூலம் கிடைக்கும் அரசியல் ஆதாயமே கூட்டமைப்புக்கு முக்கியமானது.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் கூட்டமைப்புக்குச் சிறிதளவேனும் அக்கறை இல்லை. இந்த அக்கறையின்மையை மக்களிடமிருந்து மறைப்பதற்கு ஏதேனும் நிகழ்வுகளை நடத்திக்கொண்டிருக்க வேண்டிய தேவை இருக்கின்றது. மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுள் ஏதாவதொன்றை முன்வைத்து ஆர்ப்பாட்டம், சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம் என்று எதையாவது நடத்திக்கொண்டிருப்பார்கள். மக்கள் ஆணை வழங்கிய அரசியல் தீர்வு முயற்சியிலிருந்து ஒதுங்கி நின்றுகொண்டு தங்கள் அரசியல் இருப்பை உறுதிப்படுத்துவதற்கு இவை தேவைப்படுகின்றன. இந்த வகையில் ஏற்பாடு செய்யப்பட்டதே தெல்லிப்பளை உண்ணாவிரதம்.

இந்த உண்ணாவிரதத்தில் இடம்பெற்ற குழப்பம் கூட்டமைப்புக்கு வரப்பிரசாதமாக அமைந்துவிட்டது. இப்படியான குழப்பச் செயல்களில் ஈடுபடுபவர்கள் கூட்டமைப்பை வளர்ப்பதற்கு முயற்சிக்கின்றார்களா என்று கேட்கத் தோன்றுகின்றது. குறைந்தது ஆறு மாதங்களுக்குக் கிளர்ச்சி அரசியல் செய்வதற்கு கூட்டமைப்புக்கு இந்த சம்பவம் போதுமானது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பிரதான அரசியலைக் கிடப்பில் போட்டுவிட்டு, மக்களை உணர்ச்சிவச நிலையில் வைத்திருப்பதற்கு இது போதுமானது.

உண்ணாவிரதத்துக்கு ரணிலையும் அவர் தலைமை வகிக்கும் எதிரணிக் கூட்டின் ஏனைய தலைவர்களையும் கொண்டு வந்தமை கூட்டமைப்பின் பின்னோக்கிய பயணத்தின் வெளிப்பாடு. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு என்ற கூட்டணியில் இணைந்ததோடு, கூட்டமைப்பின் பின்னோக்கிய பயணம் ஆரம்பித்துவிட்டது.

ரணிலின் தலைமையிலான எதிரணிக் கூட்டு இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஆலோசனைகள் எதையும் முன்வைக்கவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் பொது அணி எத்தகைய கருத்துகளைக் கொண்டிருக்கின்றது என்பது இதுவரை வெளிப்படையாக அறிவிக்கப்படவில்லை என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியதை இங்கு குறிப்பிடலாம். இனப்பிரச்சினை தொடர்பாக இந்தப் பொது அணி ஏதாவது நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றது என்றால், அது பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பான நிலைப்பாடு. எவ்வித அதிகாரக் குறைப்பும் இல்லாமல் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டுமென மனோ கணேசன் முன்வைத்த ஆலோசனையை ஐக்கிய தேசியக் கட்சி உட்படக் கூட்டணியின் ஐந்து பங்காளிக் கட்சிகள் நிராகரித்துவிட்டன. பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குப் பொது எதிரணி எதிரானது என்பதே இதன் அர்த்தம். சமஷ்டி அடிப்படையிலான தீர்வையும் நிராகரித்து, அதனிலும் கூடிய அரசியல் தீர்வைக் கோரிய கூட்டமைப்பு, பதின்மூன்றாவது திருத்தத்தையே ஏற்காத பொது எதிரணிக் கூட்டில் இணைவது பின்னோக்கிய பயணத்தின் ஆரம்பம்தானே.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஒரே தலைவர் ரணில் என்று கூட்டமைப்பின் சுமந்திரன் கூறினார். இப்போது கூட்டமைப்பு அவரை உண்ணாவிரதத்துக்கு அழைத்து வந்திருக்கின்றது. ரணில் பற்றிய நம்பிக்கையைத் தமிழ் மக்களிடம் வளர்ப்பதே இவற்றின் நோக்கம். ஆனால், ரணிலின் நிகழ்ச்சி நிரல் தமிழ் மக்களுக்குச் சாதகமானதல்ல.

ரணில் தெல்லிப்பளை உண்ணாவிரதத்தில் பங்குபற்றிய அதே வேளை, தெற்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கத் தலைவர்கள் கிளைச் சங்க மட்டத்தில் பொது பல சேனாவுக்கு ஆதரவுத் தளங்களை உருவாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்று 'கொழும்பு ரெலிகிராப்' இணையத்தில் 20-02-2013 ஆம் திகதி எழுதிய கட்டுரையில் குசல் பெரேரா கூறுகின்றார். பல இடங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் பொது பல சேனைக்கு ஆதரவாகச் செயற்படுவதாகவும் அவர் அக் கட்டுரையில் கூறியிருக்கின்றார். பொது பல சேனா என்பது முஸ்லிம்களுக்கு எதிராகப் பகிரங்கமாகச் செயற்படுகின்ற பௌத்த-சிங்களக் கடுங்கோட்பாட்டு அமைப்பு. ஐக்கிய தேசியக் கட்சியினர் இந்த அமைப்புக்கு ஆதரவாகச் செயற்படுவது ரணிலின் நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்ட செயற்பாடே.

தனது வழமையான வாக்கு வங்கி வரண்டு போன நிலையில், தீவிர சிங்கள வாக்குகளின் பக்கம் ரணில் திரும்பியிருக்கின்றார். சிறுபான்மையினருக்குச் சார்பாக மேலோட்டமாகப் பேசுகின்ற அதேவேளை,தீவிர சிங்கள வாக்குகளிலேயே பிரதான கவனம் செலுத்துகின்றார். ஐக்கிய தேசியக் கட்சி பேரினவாதப் பாரம்பரியத்தைக் கொண்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மையினருக்குப் பாதகமாக இன விகிதாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில், குடியேற்றத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியதும் பண்டா-செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராக இனவாதப் பிரசாரத்தில் ஈடுபட்டதும் யாழ்ப்பாண நூலக எரிப்பும் கறுப்பு ஜுலை இனச் சங்காரமும் ஐக்கிய தேசியக் கட்சியின் பேரினவாதத்துக்குச் சில உதாரணங்கள். இந்தப் பாரம்பரியத்திலேயே ரணிலும் இன்று செயற்படுகின்றார். தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தும் உரைகளை வடக்கில் அவர் நிகழ்த்துகின்ற அதேவேளை, அவரது சீடர்கள் பௌத்த - சிங்களக் கடுங்கோட்பாட்டுச் செயற்பாடுகளுக்குப் பலமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள்.

இப்படியான ரணில்மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்புகின்றது. இதற்குப் பிரதானமாக இரண்டு காரணங்களைக் கூறலாம். இனப்பிரச்சினைக்குத் தீர்வு வருவதைக் கூட்டமைப்பு விரும்பாதது ஒரு காரணம். இனப்பிரச்சினை இருக்கும் வரை அதைச் சொல்லியே அரசியல் செய்யலாம். தமிழ்மக்கள் மத்தியிலுள்ள சுரண்டல்காரரையும் சுரண்டப்படுபவர்களையும் ஒரே நேரத்தில் அரவணைத்துத் தங்கள் அரசியல் இருப்பை உறுதிப்படுத்துவதற்கு இனப்பிரச்சினைதான் கூட்டமைப்பினருக்குக் கைகொடுக்கின்றது. இனப்பிரச்சினை தீர்ந்துவிட்டால் மக்களின் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளே அரசியலில் பிரதான பேசுபொருள் ஆகிவிடும். அது இவர்களுக்குச் சிரமமான அரசியல். இனப்பிரச்சினை தீராமலிருக்கின்ற அதேவேளை, தங்கள் வர்க்க நலனையும் பேணவேண்டும் என்பது இரண்டாவது காரணம்.

தமிழ்க் காங்கிரஸ் காலத்திலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரை தலைவர்கள் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரியர்கள். மேட்டுக்குடிச் சிந்தனையாளர்கள். ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கொண்டு வராது என்பதும், அக் கட்சியின் ஆட்சியில் தங்கள் வர்க்க நலன் பேணப்படும் என்பதும் தமிழ்த் தலைவர்களுக்குத் தெரியும். அதனால், ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காக அல்லது அதன் ஆட்சியைத் தக்கவைப்பதற்காகத் தங்கள் கொள்கைகளைக் கிடப்பில் போடவும் இவர்கள் தயங்க மாட்டார்கள். தனிநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றியவர்கள் அக்கோரிக்கையைக் கிடப்பில் போட்டுவிட்டு மாவட்ட சபையை ஏற்றுக்கொண்டதும், சமஷ்டித் தீர்வு என்று வாய் கிழியக் கத்தியவர்கள் அப்படியான தீர்வு முன்வைக்கப்பட்டபோது அதை நிராகரித்ததும் ஐக்கிய தேசியக் கட்சியின் நலனுக்காகவே.

கூட்டமைப்புத் தலைவர்கள் இப்போது ரணில் விக்கிரமசிங்கவை முன்னிலைப்படுத்தி அவரது அணியில் இணைந்து செயற்படுவதன் மூலம் நேற்றுவரை வலியுறுத்திய கொள்கைகளையெல்லாம் மூலையில் போட்டுவிட்டு ரணிலின் தீர்வை ஏற்கத் தயாராகின்றார்கள். தனது தீர்வு எது என்பதை ரணில் தெல்லிப்பளையில் தெளிவாகக் கூறிவிட்டார். பதவிக்கு வந்ததும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்தப் போவதாக அங்கு அவர் கூறினார். தீவிர சிங்கள வாக்கு வங்கியிலிருந்து அழுத்தம் ஏற்பட்டால் இந்தத் தீர்வையும் கைவிட அவர் தயங்க மாட்டார்.

எது நடந்தாலும், கூட்டமைப்பினருக்குத் திருப்தியாகவே இருக்கும். இனப்பிரச்சினையின் தீர்வையும் தவிர்க்கலாம். வர்க்க நலனையும் பாதுகாக்கலாம்.

ரணிலுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும், உண்ணாவிரதங்களும் நடத்தப்போவதில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் ஆவேசப் பேச்சுகளும் எதிர்ப்பு அரசியலும், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் நம்பிக்கையூட்டும் பேச்சுகளும் அரவணைப்பு அரசியலும்.



# இராணுவ அதிகாரிகளுக்கு நெருக்கடி;

# அரசு மீது கணை தொடுக்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

மனித உரிமைகளைப் பேணுவதற்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அரசு தவறியமையாலேயே பல இராணுவ அதிகாரிகளுக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டது என்று அரசு மீது ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை தனது அறிக்கையில் இலங்கையின் மனித உரிமைகள் மீறல்கள் பற்றி படுமோசமாக சித்திரிப்பதனால் அது பக்கசார்பான அறிக்கையாகும் என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.


நவநீதம்பிள்ளை நிலைமையை மிகைப்படுத்தி கூறியுள்ளதனால், இந்த அறிக்கை நீதியானது அல்ல என்றும் அக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சி மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தின் இறுதி நாட்கள் பற்றி முறையான விசாரணைகள் இடம்பெறாதது இலங்கையின் பிழை எனவும் அரசாங்கம் சர்வதேச சமுதாயத்துக்கு வழங்கியிருந்த உறுதியை நிறைவேற்றவில்லை என்றும் கூறியுள்ளது.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் 285 இல் 133 மட்டுமே மனித உரிமைகள் வேலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இதனால் இந்த வேலைத்திட்டத்தை ஏற்க சர்வதேச சமுதாயம் மறுத்துவிட்டது என்றும் கூறியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் இவ்வருட அமர்வின் போது இலங்கை மிகவும் கஷ்டமான நிலைமையை எதிர்கொள்ளும்.



மனித உரிமை பேரவையில் தனது எதிர் நடவடிக்கைகள் யாவற்றையும் அரசாங்கம் கை விட்டது போல தெரிகின்றது.

அரசாங்கம் உரிய நேரத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், மனித உரிமைகளைப் பேணவும் தவறியதால் முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா உட்பட பலர் உயர் இராணுவ அதிகாரிகள் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நடந்தவற்றுக்கு இவர்களே பொறுப்பாக்கப்படுவர் என்றும் கூறியுள்ளது.

# எரிபொருள் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

90, 95 ஒக்டைன் பெற்றோல்களின் விலை 3 ரூபாவினாலும் சாதாரண டீசலின் விலை 6 ரூபாவினாலும் சுப்பர் டீசலின் விலை 3 ரூபாவினாலும், மண்ணெண்ணெய்யின் விலை 4 ரூபாவினாலும் நேற்று முதல் அதிகரிப்பதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதிகரிக்கப்பட்டுள்ள விலையின் படி - 90 ஒக்ரைன் பெற்றோலின் புதிய விலை ரூபா 162, 95 ஒக்ரைன் பெற்றோலின் புதிய விலை ரூபா 170, டீசலின் புதிய விலை ரூபா 121, சுப்பர் டீசலின் புதிய விலை ரூபா 145 ஆகும்.

# உள்ளூராட்சி உறுப்பினர்களின் வெற்றிடத்தை நிரப்புவது எப்படி?

## விளக்கம் கோருகிறார் தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளில் ஏற்படுகின்ற உறுப்பினர் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல் குறித்து தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய மீண்டும் சட்டமா அதிபரின் ஆலோசனையை கோரியுள்ளார்.


இந்த வெற்றிடங்களை பழைய முறைப்படி நிரப்ப முடியும் என்று சட்டமா அதிபர் திணைக்களம் முன்னதாக அறிவித்திருந்தது. புதிய உள்ளூராட்சி சட்டத்தின் படி நகர முதல்வர், உபமுதலவர் அடங்கலான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான முறைமை பரிந்துரைக்கப்பட்டிருக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து இந்த சிக்கல் ஏற்பட்டது.

இந்த நிலையில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைப்படி பழைய முறையின் கீழ் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்ற பட்சத்தில், புதிய சட்டத்தின் அதிகார பத்திரம் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்களில் மாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

இதன் காரணமாகவே தேர்தல்கள் ஆணையாளர் மீண்டும் சட்ட மா அதிபரின் ஆலோசனையை கோரியுள்ளார்.

# பள்ளிவாசல் மீது தாக்குதல் விசாரணைகள் துரிதம்



(கொழும்பு)

காலி -ஹிரும்புரை முஹிதீன் ஜுஆம்ப் பள்ளிவாசல் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து காலி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். ஹிரும்புரை முஹிதீன் ஜுஆம்ப் பள்ளிவாசல் மீது நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணியளவில் இனந்தெரியாத குழு ஒன்று தாக்குதலை மேற்கொண்டது.

இக்குழுவினர் கற்களை எறிந்து ஜன்னல் கண்ணாடிகளை சேதப்படுத்தியுள்ளனர்.

வீசப்பட்ட கற்கள் பள்ளியினுள் வீழ்ந்து சிதறிக் காணப்பட்டன. இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

# சர்ச்சை கிளப்பும் 'கலால்' விவகாரம்; இனமுரண்பாட்டுக்குத் தூபமிடுகிறதா?

(கொழும்பு)

நாட்டின் தென்பகுதியில் தலைவிரித்தாடும் 'கலால்' விவகாரம் தற்போது இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் சூழ்நிலையைத் ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்த புதிய நடைமுறைகளை ஜாதிக ஹெல உறுமய கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

ஹலால் முத்திரை குத்தப்பட்ட பொருட்கள் , ஹலால் முத்திரை பொறிக்கப்படாத பொருட்கள் என்று பாகுபடுத்துவது நடைமுறைக்கு சாத்தியமற்றதாகும்.

அகில இலங்கை ஜயமத்துல் உலமா சபை எடுத்துள்ள தீர்மானமானது ஹலால் சான்றிதழ் தொடர்பான செயற்பாட்டு விதிகளுக்கே முரணானதாகும் என்று அரசாங்கத்தின் பங்காளி கட்சிகளில் ஒன்றான ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அகில இலங்கை ஜயமத்துல் உலமா சபையின் ஹலால் சான்றிதழ் தொடர்பான வழிகாட்டி கையேட்டில் ஹலால் உற்பத்திப் பொருட்களோடு இணைந்ததாக ஹலால் அற்ற பொருட்கள் தயாரிக்கப்பட முடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இவ்வாறான நிலையில் முஸ்லிம்களுக்கு வேறாகவும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு வேறாகவும் பொருட்களை தயாரிக்குமாறு கோருவது நடைமுறைக்கு எந்தவகையிலும் ஒத்துவராது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமூகத்தில் இவ்வாறான வேறுபாடுகளை தோற்றுவிப்பதை நாம் ஒருபோதும் விரும்பவில்லை என்பதுடன், ஹலால் முத்திரை பொறிக்கப்பட்ட பொருட்கள் ஹலால் முத்திரை பொறிக்கப்படாத பொருட்கள் என்பது நடைமுறைக்கு சாத்தியமற்றதாகும் என்றும் சுட்டிக் காட்டிய அவர், ஹலால் பொருட்கள் ஒரு நிறுவனத்தில் தயாரிக்கப்படுமாயின் அதே நிறுவனத்தில் ஹலால் அல்லாத பொருட்களைத் தயாரிக்க வேண்டுமாயின் இரண்டு நிறங்களில் தயாரிக்க வேண்டும் என்று அந்த வழிகாட்டியிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

# புலிகளை முறியடிக்க உதவிய யுத்த இரகசியங்கள் என்ன?

## அமெரிக்காவில் இராணுவப் பேருரை



(வோஷிங்டன்)

வடக்கின் யுத்த இரகசியங்கள் குறித்து அமெரிக்கப்படை அதிகாரிகள் மத்தியில் பேருரை ஒனறை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

புலிகளை முறியடிக்க உதவிய தந்திரோபாயங்கள் குறித்து இந்த பேருரையில் விளக்கமளிக்கப்படவுள்ளது. பயங்கரவாதத்தை எவ்வாறு வெற்றி கொள்வது என்பது தொடர்பில் அமெரிக்க கடற்படையினருக்கு ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதி, பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவினால் பயிற்சிக் கருத்தரங்கொன்று அளிக்கப்பட்டுள்ளது.

"பயங்கரவாதத்தை எதிர்க் கொள்வது" என்ற தலைப்பில் அமெரிக்காவிலுள்ள கடற்படை பயிற்சிப் பல்கலைக்கழகத்தில் இந்த பயிற்சிக் கருத்தரங்கு நடததப்பட்டுள்ளது.


# எரிபொருள் விநியோகத்தில் தொடர்கிறது மோசடி

(கொழும்பு)

எரிபொருள் விநியோகத்தர்கள் புரியும் சில ஊழல் வியாபாரம் தொடர்பில் தகவல் கசிந்துள்ளதென கனிய வள அமைச்சு தெரிவித்துள்ளது.

எரிபொருள் கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் எரிபொருள், வேறு தனியார் நிறுவனங்களுக்கு விற்கப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளதென அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

குறித்த தனியார் நிறுவனங்களில் எரிபொருள் கூட்டுத்தாபனத்தை விட அதிக விலை வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



அதன்மூலம் ஒரு லீறறர் டீசலுக்கு 6 ரூபா ஊழல் செய்ய முடியும் என கனிய வள அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## கிளிநொச்சி மாவட்டத்தில்
# யுத்தகாலத்தில் அமைக்கப்பட்ட மண் அணைகளை அகற்ற ஏற்பாடு



(கிளிநொச்சி)

கடந்த யுத்த காலத்தில் அமைக்கப்பட்ட மண் அணைகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை அகற்றப்படாத 43 கிலோமீற்றர் வரையான மண் அணைகளை அகற்றுவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மண் அணைகளை அகற்றுவது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதிகேதீஸ்வரனின் தலைமையில் நடைபெற்றது.

ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் நடவடிக்கையைத் தொடர்ந்து இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை சுமார் 43 கிலோமீற்றர் வரையான மண்அணைகள் அகற்றப்படாத நிலையில் காணப்படுகின்றன.

அதாவது கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 20 கிலோமீற்றர்களும், கண்டாவளையில் ஒரு கிலோமீற்றரும் பச்சிலைப்பள்ளியில் 14.5 கிலோமீற்றர்களும் பூநகரியில் 8.5 கிலோமீற்றர்களுமாக மண்அணைகள் அமைந்துள்ளன. குறித்தபகுதியில், வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளபோதும், இதுவரை இம் மண் அணைகள் அகற்றப்படவில்லை. இதனால் மக்கள் பெரும் அவலங்களுக்கு உள்ளாகியிருந்தனர். இந்நிலையில் அவற்றை அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் காமினி எட்டியாராச்சி குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக விளக்கமளித்ததுடன், இதற்கான நிதியினைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் ஆய்வுகளை மேற்கொண்டார்.

இதில் கருத்து தெரிவித்த அனர்த்த முகாமைத்துவப்பிரிவின் பணிப்பாளர் நாயகம், இப்பகுதியில் அமைந்துள்ள மண் அணைகளை அகற்றுவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், இவ்விடயத்தை அவர் நாடாளுமன்றத்திலும் குறிப்பிட்டுள்ளார் எனவும், அவரின் ஏற்பாட்டுக்கமைவாகவே நாம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளோம் எனவும் அத்தோடு இத்திட்டத்திற்கான நிதியினை பெறுவதற்கு முயற்சித்து வருவதாகவும் விரைவில் செயற்பாடுகள் நடைமுறைக்கு வரும் எனவும் அவர் குறிப்பிட்டார். இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறீனிவாசன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவின் பிரதித்திட்டப்பணிப்பாளர் சுகுணதாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# துரிதகதியில் இடம்பெறும் வீதி அகலமாக்கும் பணிகள்

(பருத்தித்துறை)

மந்திகை சிலையடியிலிருந்து பருத்தித்துறை வரையான வீதி அகலமாக்கும் பணிகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே இருந்த வீதியில் இருந்து 6 அடி அகலத்திற்கு பைகோ இயந்திரம் மூலம் கிண்டி, அந்த மணலை உடனுக்குடன் ரிப்பர் மூலம் ஒப்பந்தகாரர்கள் ஏற்றிச் செல்வதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இவ்வாறு எடுக்கப்படும் மணலைப் பொது இடங்களில் பறிக்காது, தனியாரின் பள்ளமான காணிகளுக்கு விலைக்குப் பறிக்கப்படுவதாக புகார் தெரிவிக்கும் மக்கள், பள்ளமான வீதிகளுக்கு போட்டு நிரப்பினால் சீரான போக்குவரத்து இடம்பெற வசதியாக இருக்கும் எனத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இவ்வீதி அகலிப்பு பணிகள் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் முடிவடைந்துவிடும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (109)

# நோயாளர்களைப் பார்வையிடும் நுழைவாயில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனாவைத்தியசாலையில் விடுதிகளில் தங்கியுள்ளோரைப் பார்வையிடச் செல்வோருக்கான நுழைவாயில் மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நோயாளிகளை பார்வையிடச் செல்லும் பொதுமக்கள், முன்னர் மின்சார நிலைய வீதியிலுள்ள நுழைவாயிலையே பயன்படுத்தி வந்துள்ளனர். தற்போது அப்பாதையில் உள்ள கழிவுநீர் வாய்க்காலின் திருத்தப்பணிகள் இடம்பெறுவதனால் அப்பாதை மூடப்பட்டுள்ளது. எனவே நோயாளர்களைப் பார்வையிட வருவோருக்காக வைத்தியசாலையின் பின்பக்க வீதியான விக்ரோரியா வீதியிலுள்ள நுழைவாயிலைப் பயன்படுத்தப்படுவதாகவும் இதனையே தற்காலிகமாக பயன்படுத்துமாறும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வெளிநோயாளர் நுழைவாயினூடாக பார்வையாளர்கள் உள்நுழைவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் இவ்வறிவித்தலின்படி சிரமங்களைத் தவிர்த்து நோயாளர்களைப் பார்வையிட முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# நாய்கள் தொல்லை

(அச்சுவேலி)

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் கட்டாக்காலி நாய்கள், பூனைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாக நோயாளிகள் விசனம் தெரிவிக்கின்றனர். இரவு - பகல் என்று இவைகளின் நடமாட்டத்தால் மருந்து பெற வரும் நோயாளிகள் அச்சத்துடன் காணப்படுவதுடன், நோய்த்தொற்று பரவ இவை ஏதுவாக காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரவு வேளையில் விடுதிக்குள் நுழையும் இவை, நோயாளிகளின் உணவுப்பொருட்களையும் எடுத்து செல்வதுடன், உடைமைகளையும் சேதமாக்குகின்றன. எனவே, இவற்றைக் கட்டுப்படுத்த வைத்தியசாலை நிர்வாகம் முன்வர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (15)


# டெங்கு விழிப்புணர்வு தெருவெளிநாடகம்

(வவுனியா)

வவுனியா நகரசபைக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்குக் காய்ச்சல் தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கோடு, தெருவெளி நாடகம் இடம்பெற்று வருகின்றது. சேவாலங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் சுகாதாரத் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வில், டெங்கு நோயினால் ஏற்படும் தாக்கங்கள், அதனைக் கட்டுப்படுத்தும் வழிவகைகள் தொடர்பிலும் விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

நகரப்பகுதியில் உள்ள முக்கிய சந்திகளில் இந்நாடகம் மக்களுக்கு காண்பிக்கப்பட்டு வருவதுடன், டெங்கை கட்டப்படுத்தாதோருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பிலும் சுகாதார பகுதியினரால் விளக்கம் அளிக்கப்பட்டு வருகின்றது.

# பொய்யுள்



மூலபாரதி

## குற்றச்சாட்டு

தமிழர் பகுதி அபிவிருத்தியை
தடுக்கிறது ஸ்ரீலங்கா அரசு
உமிழ்ந்து கொட்டும் தமிழர்
உரிமைக்குப் போராடும் கூட்டமைப்பு!

ஐம்பதுகோடி ஐம்பது லட்சம்
இம்மண் வீதிகள் அபிவிருத்திக்கு
எம்மட்டும் காத்துக் கிடந்ததாம்
ஏகியது திரும்பத் திறைசேரிக்கு!

கூட்டமைப்பு பிரதேச சபைகளாலே
கூடவில்லை செயற்படுத்த என்னும்
நீட்டறிக்கை திறைசேரி தன்னால்
நேற்றே விடுக்கப்பட்ட தறிவீர்!

# முரசின் இன்றைய பலன்

(24.02.2013 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் மாசி 13 ஆம் திகதி. நட்சத்திரம் ஆயிலியம். பின்னிரவு 02.01 வரை. திதி சதுர்த்தசி பின்னிரவு 02.43 வரை. இராகுகாலம் 04.59 - 06.29 வரை. சுபநேரம் 09.29 - 10.59 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பிறர் நலனில் அக்கறை. நல்லவர்களின் அறிமுகம் மகிழ்ச்சி தரும். தொழில், பலம் பெறும். சராசரி பண வரவு. எதிர்ப்பாளர் தொல்லை விலகும். புதிய பதவி அனுகூலம். பக்தி. |
| ரிஷபம் | பிறரை விமர்சிக்க வேண்டாம். வேலைச்சுமை இருக்கும். தொழில் மந்தம். சேமிப்பு செலவுக்கு பயன்படும். வாகன பயணத்தில் கவனம். உறவுகள் உதவி. குடும்பத்தினர் பாசம். |
| மிதுனம் | பய உணர்வு. பேச்சு, செயலில் நிதானம் வேண்டும். குடும்பம் ஆதரவு. தொழில், அதிக பணி. ஆதாய பணவரவு. வீட்டுப்பொருள் வாங்குவீர்கள். அதிகாரிகளால் அலைக்கழிவு. |
| கடகம் | சுயகௌரவம் சோதனைக்குள்ளாகும். வேலையில் கவனம், சிரமம் தவிர்க்கும். தொழில், பகையை வெல்ல மாற்று உபாயம். வரவை விட செலவு. ஆரோக்கியத்திற்கு சத்தான உணவு. |
| சிம்மம் | செயல்களில் விவேகமும் உத்வேகமும். அதிக வேலை முடிப்பீர்கள். தொழில், வியத்தகு வளர்ச்சி. தாராள பணவரவு. புதிய நட்பு. இல்லறத்துணை விரும்பியது தருவீர்கள். |
| கன்னி | கலை உணர்வுடன் பேசி மகிழ்வீர்கள். வளம் பெற புதிய வாய்ப்பு. தொழில் இலக்கு பூர்த்தியாகும். இலாபம். அறப்பணி ஈடுபாடு. பாராட்டு கிடைக்கும். புத்திரர் விரும்பியது செய்வீர்கள். |
| துலாம் | நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணிகளில் தொந்தரவு இருக்கும். தொழில், இருப்பதைப் பாதுகாப்பது நல்லது. வரவு செலவுக்காகும். குடும்பத்தினர் அன்பும் மகிழ்ச்சியும். |
| விருச்சிகம் | சமயோசித புத்தியினால் நன்மை. மகிழ்ச்சியும். தன்னம்பிக்கையும். தொழில் இலக்கை அடைவீர்கள். உபரி பணவரவு. கொஞ்சம் தான, தர்மம். செலவு சுப செய்தி வரும். |
| தனுசு | முக்கிய செயல் தாமதம் ஆவதால் சஞ்சலம். தொழில், முன்னேற்றம். உபரி வரவு. சேமிப்பீர்கள். உடல் ஆரோக்கியம். நண்பருடன் சிறு கருத்து வேறுபாடு. பிள்ளைகளால் பெருமை. |
| மகரம் | அடுத்தவர் விவகாரத்தில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில் வளர்ச்சிக்கு முயற்சி. அளவான பண வரவு. ஆரோக்கியம் சீர். எதிர்பார்த்த முடிவுகளில் இழுபறி. நண்பரால் உற்சாகம். |
| கும்பம் | வெற்றி பெற, தகுந்த முன்னேற்பாடு செய்வீர்கள். நண்பரிடமிருந்து உதவி. தொழில் அபரிமித வளர்ச்சி. அதிக வரவில் கொஞ்சம் சேமிப்பு. உத்தியோகத்தர். பாராட்டு, வெகுமதி. |
| மீனம் | மனசாட்சிக்கு முக்கியத்துவம். அவதூறுகளை பொருட்படுத்தாது இன்முகத்தால் வெற்றி. கூடுதல் உழைப்பு. வரவுக்கேற்ப செலவும். பயணத்திட்டத்தில் மாறுதல். இல்லறத்துணை ஆதரவு. |

# வெற்றி–தோல்வியின்றி நிறைவடைந்தது பொன் அணிகளின் போர்














(வட்டுக்கோட்டை)

96ஆவது "பொன் அணிகளின் போர்" கிரிக்கெட் ஆட்டம் வெற்றி-தோல்வியின்றி நிறைவடைந்துள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும், யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்குமிடையில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஆட்டமாக வருடாவருடம் இடம்பெற்று வருகின்றது. இதன் 96ஆவது .பொன் அணிகளின் போர் இரண்டு இனிங்ஸ் கிரிக்கெட்போட்டி நேற்றும்,நேற்று முன் தினமும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி தொடர்ந்தது. வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி அணிக் கப்டன் நிம லேந்திராவின் பந்து வீச்சுக்குத் திண றிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மேலும் 27 ஓட்டங்களைப் பெற்றுக்கொள் வதற்குள் நான்கு விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. எட்டு விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது. இந்நிலையில் ஒன்பதா வது விக்கெட்டுக்காக இணைந்தபிறாங் கிளிங்ரன், தனுஷன் ஜோடி பொறுப் புடன் ஆடி அணியை வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெறவழிவகுத்தனர். இறுதியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக் கெட்டுக்களையும் இழந்து 266 ஓட்டங் களைப் பெற்றது. இதில் பிறாங்கிளிங்ரன் 115 பந்துகளை எதிர் கொண்டு ஒன்பது பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 66 ஓட்டங்களையும், தனுஷன் 55 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற் றனர். ஒன்பதாவது விக்கெட்டுக்காக இந்த ஜோடி 122 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனை படைத்தது. இதற்கு முன்னர் ஒன்பதாவது விக்கெட்டுக்காக 55 ஓட்டங்கள் பெறப்பட்டமை குறிப் பிடத்தக்கது. மற்றும் ரியூடர் 54 ஓட்டங் களைப் பெற்றார். பந்து வீச்சில் கப்டன் நிமலேந்திரா 30 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், சோபிநாத்சுவான் 82 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், நிலக்ஷன் 42 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த் தினர்.

124 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரி அணி, அஜித் டார்வின், லிவிங்ரன் ஆகியோரின் பந்து வீச்சுக்குஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக் களைப் பறிகொடுத்தது. இருப்பினும் மஷன், மாதவரூபன் ஆகியோர் தாக் குப் பிடித்து ஆடினர். இறுதியில் போட்டி நிறைவுக்கு வந்தவேளை, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் மதுஷன் 33, மாதவரூபன் 31 ஓட் டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஜித் டார்வின், லிவிங்ரன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இதன் மூலம் 96ஆவது பொன் அணி களின் போர் வெற்றிதோல்வியின்றி நிறைவடைந்தது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முதல் இனிங்ஸ் 142. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக் கப்டன் ரியூடர், சிறந்த சகல துறை வீரராக வட்டுக்கோட்டையாழ்ப் பாணக் கல்லூரி அணியைச் சேர்ந்த அபிராஜ், சிறந்த பந்து வீச்சாளராக யாழ்ப்பாணக் கல்லூரி அணியைச் சேர்ந்த நிமலேந்திரா, சிறந்த துடுப் பாட்ட வீரராக சென். பற்றிக்ஸ் கல்லூ ரியைச் சேர்ந்த கிளிங்ரன், சிறந்த களத்தடுப்பாளராக யாழ்ப்பாணக் கல்லூரி அணியைச் சேர்ந்த அபி ராஜ், சிறந்த இணைப்பாட்ட வீரர் களாக கிளிங்ரன்,தனுஷன் ஜோடியும் தெரிவானது.

இப்போட்டி நிகழ்வின் பாடசாலை சமூகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட் டியைக் கண்டு களித்தனர். (எஸ்.பி.)

## தென்னாபிரிக்கா முதல் இனிங்ஸ் 409

(செஞ்சூரியன்)

பாகிஸ்தான் அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 409 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

தென்னாபிரிக்க, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி தென்னாபிரிக்காவின் செஞ்சூரியனில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 409 ஓட்டங் களைப் பெற்றது. இதில் டிவில்லியர்ஸ் 121, பிலாண்டர் 74, அம்லா 92 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ராகெற் அலி ஆறு, இஷான் ஆதில் இரண்டு விக்கெட் டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் பாகிஸ்தான் அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் தேநீர் இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட வேளை, ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் அனை-வரும் சொற்ப ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் பிலாண்டர் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

ஏற்கனவே, நடைபெற்ற இரு டெஸ்ட் போட்டிகளிலும் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்று தொடரினை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டது இந்தியா



(சென்னை)

சச்சின், ஹோலி, புஜாரா ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி சரிவிலிருந்து மீண்டுள்ளது.

அவுஸ்ரேலிய, இந்திய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி சென்னையில் நடைபெற்று வருகின்றது.

இதில் 316 ஓட்டங்களைப் பெற்று ஏழு விக்கெட்டுக்களை இழந்த நிலை யில் இரண்டாம் நாள் ஆட்டத்தை அவுஸ்ரேலிய அணி தொடர்ந்தது. மேலும் 64 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸை இழந்தது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 380 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் கிளார்க் 130, வேட் 68, வோனர் 59 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஸ்வின் ஏழு, ஜடேஜா இரண்டு, ஹர்பஜன்சிங் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இந்திய அணி முதலிரு விக்கெட்டுக்களையும் 12 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இழந்து தடுமாறி யது. இதனைத் தொடர்ந்து வந்த சச்சின் டெண்டுல்கர் புஜாராவுடன் இணைந்து பொறுப்பாக ஆடினார். இந்த ஜோடி 93 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது பிரிக்கப்பட்டது. தொடர்ந்து சச்சினுடன் இணைந்த விராட் ஹோலி மிகவும் சிறப்பாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார். இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டவேளை, இந்திய அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சச்சின் 71, ஹோலி 50 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். நான்காவது விக்கெட்டுக்காக இந்த ஜோடி 77 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. மற்றும் புஜாரா 44 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பட்டின்சன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும். ஏழு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இந்திய அணி 198 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சார்லஸ், பிராவோ அதிரடிச்சதம் மே.தீவுகள் பெரு வெற்றி




சார்லஸ், பிராவோ ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் சிம்பாப்வே அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 156 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

மேற்கிந்தியத்தீவுகள், சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று முன்தினம் மேற்கிந்தியத்தீவில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, ஜே. சார்லஸ், பிராவோ ஆகியோரின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 337 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜே. சார்லஸ் 130, டி. பிராவோ ஆட்டமிழக்காது 100, பவள் 79 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 338 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சிம்பாப்வே அணி, ஆரம்பம் முதலே மேற்கிந்தியத்தீவுகள் அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியது. இறுதியில் சிம்பாப்வே அணி 50 ஓவர்கள நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றுப் படுதோல்வியடைந்தது. இதில் எட்வின் 41, வெல்லர் 51 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுனில் நரைன் மூன்று, பிராவோ, ரசல் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக ஜே. சார்லஸ் தெரிவானார். மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.



நூறாவது டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் இந்திய கிரிக்கெட் சபையினால் நேற்று முன்தினம் கௌரவிக்கப்பட்டார். சென்னையில் இடம்பெற்று வரும் அவுஸ்ரேலிய அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர், ஸ்ரீவாசன், ஹர்பஜன்சிங்கிற்கு கேடயம் வழங்கி கௌரவித்தார்.

# சச்சின் ஓய்வு; செத்துவிடும் டெஸ்ட்!

(கொழும்பு)



சச்சின் போன்ற மகத்தான வீரர்கள் ஓய்வு பெற்றால், டெஸ்ட் போட்டிகள் அழிந்து விடும் என இலங்கை அணியின் முன்னாள் கப்டன் ரணதுங்கா தெரிவித்துள்ளார். இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் (வயது– 39). சர்வதேச கிரிக்கெட்டில் சதத்தில் சதம் அடித்தவர். தற்போது நடக்கும் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடருடன், டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவார் என்று நம்பப்படுகிறது.

இது குறித்து ரணதுங்கா மேலும் தெரிவிக்கையில், டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவது கல்வி கற்பது போன்றது. ஒருநாள் மற்றும் ருவென்ரி–20 போட்டிகள் என்பது பொழுது போக்கானது. பொழுது போக்கான போட்டிகளில் இருந்து சச்சின் ஓய்வு பெற்றது மகிழ்ச்சி.

ஆனால், டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து விலகுவது என இவர் முடிவு செய்தால் இப்போட்டியே அழிந்து விடும். சச்சினுக்கு, ஏதாவது ஒரு போட்டி சிறப்பாக அமைந்து விட்டால், இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு எவ்வித தொல்லையும் இல்லாமல் தொடர்வார். இதனால், சச்சின் தொடர்ந்து டெஸ்டில் விளையாடத் தேவையான திறனை கொடுக்கும் படி இறைவனிடம் கேட்டுக் கொள்வேன். இதேவேளை, நடுவர் தீர்ப்பில் ஏற்படும் தவறுகளை சரிசெய்வது எப்படி என கடந்த 20 ஆண்டுகளாக குழப்பமாக இருந்தது. இப்போதுள்ள நடுவர் தீர்ப்பு மறுபரிசீலனை முறை (டி.ஆர்.எஸ்.,) சிறப்பானது.

துடுப்பாட்டம், பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு என, அனைவருக்கும் இது சாதகமானது. இதை அனைத்து நாடுகளிலும் கட்டாயம் நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும். ஆனால், இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) ஏற்க மறுக்கிறது. இதற்காக, பி.சி.சி.ஐ.யை குற்றம் சொல்லவில்லை. சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) மீது தான் தவறு உள்ளது. டி.ஆர்.எஸ்.,விடயத்தில் முடிவெடுக்கும் உரிமையை, தொடரை நடத்தும் அணியின் கையில் கொடுத்திருக்கக் கூடாது. கிரிக்கெட்டை மட்டும் தான் காப்பாற்ற வேண்டும். அதை விட்டுவிட்டு, ஒரு நாட்டினை மட்டும் பாதுகாக்க ஐ.சி.சி. முயற்சிக்கக் கூடாது. ருவென்ரி–20 போட்டிகளில் தேசம் முக்கியமல்ல, பணத்துக்காக மட்டும் தான் விளையாடப்படுகிறது. இதனால், கவாஸ்கர், சச்சின், அசார், ராவிட், கங்குலி மற்றும் லக்ஸ்மன் போன்ற சிறந்த வீரர்கள் உருவாக முடிவதில்லை.

இப்போதுள்ள வீரர்கள் தொழில்நுட்ப ரீதியாக என்பதை விட, அடித்து விளையாடுவதில் தான் ஆர்வமாக உள்ளனர்.இப்படி இருந்தால் டெஸ்ட் கிரிக்கெட்டில் நீடிக்க முடியாது.இந்திய அணியை பொறுத்தவரையில் அதிகமான அதிரடி வீரர்கள் உள்ளனர். இவர்கள் தொழில்நுட்ப முறையில் கவனம் செலுத்த வேண்டும். இதை அவுஸ்ரேலிய தொடரில் செயற்படுத்தினால், அந்த அணியை எளிதாக வீழ்த்தலாம். இப்போதுள்ள நிலையில் இந்திய அணியின் கப்டனாக டோனி தொடர்வதுதான் நல்லது எனத் தெரிவித்தார்.

# தொடரை வென்றது இங்கிலாந்து



(ஒக்லாண்ட்)

நியூசிலாந்து அணிக்கெதிரான இறுதி ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து அணி ஐந்து விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது. இதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை 2 –1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி கைப்பற்றிக்கொண்டது. நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி நேற்று நியூசிலாந்தின் ஒக்லாண்டில் நடைபெற்றது. தொடரை தீர்மானிக்கும் போட்டி என்பதால் இரு அணிகளும் தொடரை வெல்லும் முனைப்புடன் களமிறங்கின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு ஸ்ரீபன்பின்னின் பந்து வீச்சு பெரும் அச்சுறுத்தல் அளிக்கும் வகையில் அமைந்திருந்தது. பின்னின் பந்து வீச்சை எதிர்கொள்ளத் திணறிய நியூசிலாந்து அணி முதல் மூன்று விக்கெட்டுக்களையும் 11 ஓட்டங்களுக்குள் இழந்து தடுமாறியது. இந்நிலையில் கப்டன் மக்கலம் ஒருமுனை தாக்குப்பிடித்த போதும் மறு முனையில் விக்கெட்டுக்களின் சரிவை எவராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. இறுதி யில் நியூசிலாந்து அணி 43.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பொறுப்புடன் ஆடிய கப்டன் மக்கலம் 68 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து சிக்ஸர்கள், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 79 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் ரெய்லர் 28 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஸ்ரீபன் பின் மூன்று, ஸ்வான், ட்ரொட் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 186 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு கப்டன் குக், இயன் பெல் ஆகியோர் சிறப்பான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர். இறுதியில் இங்கிலாந்து அணி 37.3 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதன் மூலம் ஒரு நாள் தொடரை 2 –1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி கைப்பற்றிக் கொண்டது. துடுப்பாட்டத்தில் கப்டன் குக் 46, மோர்கன் 39, ரூத் 28, இயன் பெல் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரிம் சௌத்தி மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்டநாயகனாக ஸ்ரீபன் பின் தெரிவானார். ஏற்கனவே நடைபெற்ற ருவென்ரி–20 தொடரை இழந்த நியூசிலாந்து அணிக்கு சொந்த மண்ணில் மீண்டும் ஒரு நாள்தொடரை இழந்தது பெரும் ஏமாற்றமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை, இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டி களைக் கொண்டடெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி இடம்பெறவுள்ளமைகுறிப்பிடத்தக்கது.



# இல்ல மெய்வல்லுநர் போட்டி

வடமராட்சி-மாதனை மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு மாதனை கண்ணகை அம்மன் மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் க. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சிவலய பதில் கணக்காளர் அ.நவரத்தினம் கலந்துகொள்ளவுள்ளார். (109)

# பல்கலையின் தடகளம் இன்று இறுதி நாள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வருடாந்த தடகளப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று இடம்பெறவுள்ளன.


யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி பிரிவும் விளையாட்டுக்கழக உறுப்பினர்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வு நேற்று பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமானது. இப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று காலை 8.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத் தலைவர் கே.கே. அருள்வேள், சிறப்பு விருந்தினராக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வைத்தி நிபுணர் டாக்டர் ரி. கோபிஷல்டர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.



# உலகின் முதல் அரசு எகிப்து!



உலகத்தில் முதன்முதலாக ஆணுறையைப் பாவித்தவர்கள் யார் தெரியுமா?

எகிப்தியர்கள்.

எகிப்திலிருந்து முதலாவது ஆணுறை எப்படி உருவாகியது? அறிய ஆவலாக இருக்கிறீர்களா?

செம்மறி ஆட்டின் குடலின் வெளிப்பக்கத்தில் உள்ள மெல்லிய லைனிங்கில் இருந்து செய்தது. இந்த குடல் லைனிங்தான் இப்பொழுது சொசேச் செய்வதற்கு பயன்படுகிறது.

சத்திர சிகிச்சை வைத்தியத் துறையில் ஆரம்ப உபகரணங்கள் எகிப்தில் பாவிக்கப்பட்டதாக மருத்துவ சரித்திரம் கூறுகிறது.

எழுத்து வடிவம் பப்பரசி இலையில் எழுதப்பட்டது. பப்பரசி இலைதான் இப்பொழுது பேப்பர் ஆகியது. இந்த பப்பரசி செடிகள் நைல் நதிக் கரையோரம் விளைகின்றன.


உலகத்தின் முதல் நாகரிகம் நைல் நதிக்கரையில் தொடங்கியது எனப் பாடப்புத்தகங்கள் வாயிலாகப் படித்தேன். இதே போல் வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் யூதமக்கள் மோசேயால் எகிப்திய மன்னர் களிடம் இருந்து இறைவனின் கட்டளைப்படி விடுவிக்கப்பட்டார்கள் என்கிறது. இதன்பின்பு குரானைப் படிக்கும்போது அங்கும் எகிப்திய மன்னர்களையும் யூதர்களைப் பற்றியும் அவர்களை அழைத்து சென்ற மோசேயைப் பற்றியும் பல வாக்கியங்கள் பேசப்படுகிறது.

5112 வருடங்களுக்கு முன்பாக வேட்டையாடிய மனித குலம் நிலப்பாரம்பரியத்திற்கு மாறி, தானியங்களை உற்பத்தி செய்ததால் முதலாவதாக உருவாகிய அரசு எகிப்தில் அமைந்தது. நதிக்கரையில் உருவாகிய அந்த அரசு அக்காலத்தில் மூன்று இலட்சம் மக்களைக் கொண்டிருந்ததாகத் தகவல் உள்ளது. அது சாதாரணமான சிறிய அரசாக இருக்காமல் ஆசியா, ஆபிக்கா என்ற இரண்டு கண்டங்களிலும் பரந்து விரிந்தது. கிறிஸ்துவுக்கு முன்பாக் 342 வருடங்கள் வரை உள்நாட்டு மன்னர்களே எகிப்தை ஆண்டார்கள். அவர்கள் கிரேக்கர்கள் போல் சிறிய நகரங்களை ஆளவில்லை. ரோமர்களினைப் போல் பிற்காலத்தில் மற்ற நாடுகளைப் பிடித்து அதன் மூலம் சாம்ராச்சியத்தை உருவாக்கவில்லை.

தற்காலத்து வரவிலக்கணப்படி தேசியம், இனம் என அதற்கான நிலப்பரப்புகளைக் கொண்டு தனக்குரிய மொழியைப் பேசி உருவாகியது. ஆங்கிலத்தில் சொல்லப்படும் நேசன் ஸ்ரேற் (Nation State) உருவாகியது. ஆதிமனிதன் சகாரா பாலைவனத்திற்கு தெற்கே உருவாகினான் என்கிறது அந்திரப்போலஜி. அதேபோல் சகாரா பாலைவனத்தில் முதலாவது அரசு உருவாக்கப்பட்டது. இதனால் ஆபிரிக்க கண்டம்தான், மனிதர்களது தோற்றத்தின் தொட்டில் மட்டுமல்ல, நாகரிகத்தின் தொடக்கப்பாடசாலையும் கூட.

பேரரசர்களான அலெக்சாண்டர், ஜுலியஸ் சீசர் என்பவர்களது பெயர்கள் எகிப்திய தேசத்தோடு கலந்து இருக்கிறது. தானியங்கள் இராணுவ விஸ்தரிப்புக்குத் தேவை. எனவே சுற்றி இருந்த நாட்டு அரசர்கள் எகிப்தின் மேல் படை எடுத்தார்கள். கோதுமை, பருத்தி போன்ற முக்கிய பொருட்களுக்காக ஆரம்பத்தில் கிரேக்கர்களும் பின்பு ரோமர்களும் படையெடுத்து எகிப்தைக் கைப்பற்றினார்கள்.

உலகப் பேரழகிகளாக கருதப்படும் கிளியோபட்ரா, நெபரட்டி(Nefertiti) என்பவர்களை இந்த நைல் நதி தந்ததாக உலக சரித்திரம் கூறுகிறது.



- என்.நடேசன் கட்டுரையிலிருந்து.

# புத்தகம் என்றொரு பண்டம்

அகில உலக அளவில் ஆங்கில ஊடகங்கள் கடந்த ஆண்டின் பிற்பகுதியில் இரு புத்தகங்களைப் பற்றி விவாதித்தன. ஒன்று, சல்மான் ருஷ்டியின் Joseph Anton. The Satanic Verses புத்தகத்துக்காக அயதுல்லா கொமேனியால் மரண தண்டனை விதிக்கப்பட்டு தலைமறைவாக இருந்த காலகட்டம் பற்றிய தன்வரலாற்றுப் புத்தகம். "ருஷ்டியின் வாழ்க்கைக்கு உள்ளே, அவரது தலைக்கு உள்ளே ஈடுருவிச் சென்று பார்க்கக்கூடிய" புத்தகம் இது என்கிறார் ஒரு விமரிசகர். "இதுவரை அவர் எழுதியதிலேயே சிறந்தது இதுதான்" என்கிறார் இன்னொருவர்.

மறைந்து வாழ்ந்த சமயத்தில், ருஷ்டி தனக்குத் தானே சூட்டிக்கொண்ட பெயர்தான் ஜோசப் அன்ரன். தனக்குப் பிடித்த எழுத்தாளர்களான ஜோசப் கான்ராட், அன்ரன் செகோவ் இருவருடைய பெயர்களையும் இணைத்து உருவாக்கிய பெயர் இது என்கிறார் ருஷ்டி.

இரண்டாவது புத்தகம், ஹாரிபோட்டர் புகழ் ஜே.கே. ரவுலிங் எழுதிய The Casual Vacancy. குழந்தைகளுக்காக அல்லாமல், பொதுவான வாசகர்களுக்காக அவரால் எழுதப்பட்ட முதல் நாவல் இது.

அப்பிள் ஐ பாட் போலவே ரவுலிங்கின் புத்தகத்தையும் ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் வரிசையில் நின்று, கடை திறப்பதற்குக் காத்திருந்து வாங்கி சென்றிருக்கிறார்கள். இந்த அளவுக்கு இல்லாவிட்டாலும் ருஷ்டியின் புத்தகத்துக்கும் நல்ல மிக வரவேற்பு கிடைத்தது. கடைக்கு வந்த சில மணி நேரங்களில், ரவுலிங்கின் புத்தகம் அமேசானில் நம்பர் 1 இடத்தைப் பிடித்திருக்கிறது.

மேற்படி புத்தகங்களின் நிறை, குறைகளைத் தாண்டி அவை சந்தைப்படுத்தப்பட்ட முறைதான் அதிகம் விவாதத்துக்கு உள்ளாகியிருக்கிறது. என்னென்ன வழிகளைப் பயன்படுத்தி இந்த அசாத்தியமான விற்பனை நிகழ்ந்திருக்கிறது என்று பார்ப்போம்.

எழுத்தாளர்கள் "பிராண்ட்" போல் சந்தைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

புத்தக வெளியீட்டுக்குச் சில நிமிடங்களுக்கு முன்புவரை கடைகளுக்குப் புத்தகங்கள் அனுப்பப்படவில்லை. ஒருவர் ஒரு புத்தகம் மட்டுமே வாங்கலாம் போன்ற கட்டுப்பாடுகளை விதித்து, செயற்கையான முறையில் பரபரப்பையும் தேவையையும் உருவாக்கியிருக்கிறார்கள்.

புத்தகத்தை விமரிசனம் செய்யும் எழுத்தாளர்களுடன் ஒப்பந்தம் போட்டு கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள். கதையை சொல்லமாட்டேன். புத்தகத்தை யாருக்கும் காண்பிக்கமாட்டேன்




- மருதன் -

என்று நிறைய கட்டுப்பாடுகள். வீடு வாங்கும்போது போட்டதைவிட அதிகக் கையெழுத்து போடவேண்டியிருந்தது என்கிறார் ஒரு விமரிசகர். விதிமுறையை மீறும் விமரிசகர்கள் ருஷ்டியின் பதிப்பாளருக்கு 2 இலட்சம் பவுண் அபராதம் கட்டவேண்டும். இப்படியொரு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது என்பதையே ரவுலிங்கின் புத்தகத்தை விமரிசனம் செய்பவர் வெளியில் சொல்லக்கூடாது.

புத்தகம் வெளிவரும்வரை "விமரிசனம்" செய்யும் விமரிசனங்கள் வெளிவரக்கூடாது.

ரவுலிங்கின் புத்தகம் வெளிவருவதற்கு முன்பே 2 மில்லியன் ஓர்டர்கள் வந்து சேர்ந்துவிட்டனவாம். சந்தேகமில்லாமல் இது ஒரு மார்க்கெட்டிங் வெற்றி. அப்பிள் ஐ பாட் போல் ருஷ்டி அல்லது ரவுலிங்கின் புத்தகமும் ஒரு பண்டம். அந்த வகையில் அதற்கான தேவையை உருவாக்கி, தக்கமுறையில் விளம்பரம் செய்து, ஒப்பந்தம் போட்டு, ஏஜெண்ட்களை நியமித்து, ஓடருக்கு ஏற்றபடி பண்டங்களை கடைகளுக்கு அனுப்பி இலக்கை நிறைவேற்றியிருக்கிறார்கள்.


ஐ பாட், புத்தகம், டிவி என்ற எந்தவொரு பண்டத்தையும் எப்படியும் விளம்பரப்படுத்தலாம், சந்தைப்படுத்தலாம் என்பதே இன்றைய சந்தை விதி. துப்பாக்கி முதல் புத்தகம் வரை அனைத்து பண்டங்களையும், மருத்துவம் தொடங்கி விவாகரத்து வரை அனைத்து சேவைகளையும் இன்று விளம்பரப்படுத்த முடியும்.

மேற்படி புத்தகங்களும் இவ்வாறே விளம்பரப்படுத்தப்பட்டிருக்கின்றன என்றாலும், இதில் ஒரு அடிப்படை வித்தியாசம் இருக்கிறது. ஐ பாட் வாங்கினால் என்னென்ன வசதிகள் அதிலிருக்கும் என்று ஒருவர் தெரிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது. ஆனால், ருஷ்டியின் புத்தகத்தையோ ரவுலிங்கின் புத்தகத்தையோ வாங்கினால் அவற்றில் இருந்து என்ன கிடைக்கும் என்பதைத் தெரிந்துகொள்ளும் உரிமை நுகர்வோருக்கு இல்லை. எந்தவொரு விமரிசனமும் முன்கூட்டியே வெளிவரவிடாமல் தடுத்துவிட்டதன் மூலம், இந்தப் பண்டங்கள் எப்படிப்பட்டவை என்பதை அறியாமலேயே வாங்கி சென்றுவிடுகிறார்கள்.

எச்சரிக்கையாக இருக்கவேண்டியவர்கள் நுகர்வோர்தான். பல வர்ண ஜால விளம்பரங்கள் உங்களைத் தாக்கிக்கொண்டே இருக்கும். வாங்கு, வாங்கு என்று ஆசை மூட்டிக்கொண்டே இருப்பார்கள். வாங்காவிட்டால் அவமானம் என்று நகைப்பார்கள். பெரும் நிறுவனங்களும் பிரபலங்களும் உங்களை நொடிக்கு நொடி நிர்ப்பந்திப்பார்கள். சாத்தானின் அப்பிள் எனக்கு வேண்டாம் என்று மறுக்கும் திடத்தை நீங்கள்தான் பெற்றாகவேண்டும்.

வழக்கத்தைக் காட்டிலும் மேற்படி புத்தகங்கள் கூடுதல் அழுத்தத்துடனும் அநாகரிகமான முறையிலும் திணிக்கப்பட்டதை (இதிலும் ரவுலிங்குக்கே முதலிடம்) அமெரிக்க விமரிசகர்களும் பத்திரிகையாளர்களுமே எதிர்க்கிறார்கள்.

மருத்துவம், கல்வி போல் எழுத்தும் ஒரு வணிகம். புத்தகமும் ஒரு பண்டமே. இதை ருஷ்டியும் ரவுலிங்கும்கூட புன்சிரிப்புடன் ஒப்புக்கொள்வார்கள். இந்த உண்மையைப் புரிந்துகொள்வதுதான் சந்தையைப் புரிந்துகொள்வதற்கான முதல் வழி.



3-(3)

# பத்தாண்டுகளின் பத்து இயக்குனர்கள்


சார்லஸ்

## ஸ்டீவன் ஸோடர்பெர்க்



2000ஆம் ஆண்டின் இரு முக்கிய படங்களை எடுத்ததின் மூலம் நட்சத்திர அந்தஸ்துக்கு உயர்ந்தார் ஸ்டீவன் ஸோடர்பெர்க். ஹொலிவுட்டின் எல்லாத் தயாரிப்பு நிறுவனங்களும் நடிகர்களும் அவ-ரோடு பணியாற்ற விரும்பினார்கள். அவரும் ஏராள-மான படங்களை எடுத்துக் குவித்தார். ஆனால் அவற்றில் சில படங்கள் தவிர்த்து மற்றதெல்லாமே ஏமாற்றமளிப்பவையாகவே இருந்தன. full frontal, bubble, the good german, the girlfriend experience, the infor-mant போன்ற படங்கள் இலக்கற்றவையாகவும், கொஞ்சம் அறிவுஜீவித்தனமாகவும், மனதைத் தொடாத போலியான படங்களாகவும் எனக்குத் தோன்றின. மிகப் பெரிய நட்சத்திரப் பட்டாளத்தைக் குவித்து அவர் எடுத்த வணிகப் படங்களான oceans -11, oceans -12, oceans -13, வரிசை, பொழுதுபோக்குக்குச் சிறந்ததே. ஒரு குழு சேர்ந்து கொள்ளையடிக்கும் பல படங்கள் வந்திருந்தாலும், இவற்றிலிருக்கும் புது அணுகுமுறையை யாரும் உணர முடியும். மட்டுமல்லாமல் ஏராளமான நல்ல நடிகர்களை ஒருசேரத் திரையில் பார்க்கும் அனுபவமும் அலாதியானது.

ஸோடர்பெர்க்-இன் முக்கியமான ஒரு படம், 2002இல் ஜேம்ஸ் கமரூன் தயாரித்து அவர் இயக்கிய "சோலாரிஸ்" எனும் அறிவியல் புனைவு. புகழ்பெற்ற ரஷ்ய இயக்குநர் ஆந்த்ரே தார்கோவ்ஸ்கி-யின் மாஸ்டர் பீஸ்களில் ஒன்றான சோலாரிஸ்-ஐ சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு ஆங்கிலத்தில் ரீமேக் செய்தார்கள்.. ஸோடர்பெர்க் தனது பொறுப்புணர்ந்து சிறப்பாகவே இந்த மறுஆக்கத்தைச் செய்திருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்.




வேற்றுக்கிரகம் ஒன்றில் வாழும் அந்நிய உயிரினத்தை ஆராய்வதற்காகச் சென்ற விண்கலத்தில், சில விவரிக்க முடியாத விநோதங்களும் மர்மங்களும் மரணங்களும் நிகழ்கின்றன. அதைப் பற்றித் தெரிந்துகொள்வதற்காக நாயகன் அங்கு அனுப்பப்படுகிறான். பல வருடங்களுக்கு முன்பு தற்கொலை செய்து இறந்துபோன தன் மனைவியை அவன் அங்கு சந்தித்துத் திகைக்கிறான். அது வேற்றுக்கிரக உயிரினத்தின் வேலை என்று, அங்கு தப்பிப் பிழைத்திருக்கும் இரு விண்வெளி வீரர்கள் சொல்கிறார்கள். அப்படி, விண்கலத்திலிருந்த ஒவ்வொருவருக்குமே, அவர்களது நினைவுகளிலிருந்து, உறவினர்களும் நெருங்கிய நண்பர்களும் ரத்தமும் சதையுமாக உயிர்பெற்று எழுந்து வந்திருக்கிறார்கள். அங்கு இறந்து போய்விட்ட ஒரு விஞ்ஞானியின் மகன், அப்படி உருவாகி வந்து இன்னும் விண்கலத்துக்குள் சுற்றிக்கொண்டிருக்கிறான்.

நினைவுகளிலிருந்து உருவாகி உயிர்பெற்று நடமாடும் அந்த நபர்கள், உண்மையில் நிஜ உறவினர்களும் அல்ல, அவர்களின் பிரதிகள் மட்டுமே. ஒரு பிரதியை அழித்தாலும் இன்னொரு பிரதி வந்துவிடும். அதிலிருந்து திரைக்கதை மேலும் சிக்கலான உளவியல் பிரச்சினைகளுக்குள் நுழைகிறது. இதன் இறுதிக் காட்சிக்கும் இன்செப்ஷன் படத்தின் இறுதிக் காட்சிக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. செமிகிஸ் இயக்கிய கொண்டாக்ட் படத்தின் புகழ்பெற்ற உச்சக் காட்சியும் இதனோடு ஒப்பு நோக்கக் கூடியதே.

கடந்த பத்தாண்டுகளின் பிற்பாதியில், நான் ஸோடர்பெர்க் மீது கிட்டத்தட்ட நம்பிக்கை இழந்திருந்தபோது "சே : பாகம் 1", "சே : பாகம் 2" படங்கள் வந்து, இயக்குநர் மீது மீண்டும் மரியாதையை உண்டாக்கின. என் மனதுக்கு நெருக்கமான படங்களின் வரிசையில் பொதுவாக வாழ்க்கை வரலாறுகளே அதி-கம். "காந்தி", "லோரன்ஸ் ஒப் அரேபியா", "ஸ்பார்டகஸ்", "ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட்", "தி பியானிஸ்ட்" போன்ற பல சிறந்த வாழ்க்கை வரலாற்றுப் படங்கள் இருந்தபோதும், அவையெல்லாவற்றிலும் இல்லாத ஒரு யதார்த்தமும், நம்பகமும் இந்தப் படத்தில் இருக்கிறது. வரலாற்று நாயகர்களை ஒரு சராசரியான படச்சட்டத்துக்குள் அடக்க இயக்குநர்கள் பொதுவாக விரும்புவதில்லை. சூழலையும், படச்சட்டத்தையும், நாடகத் தருணங்களையும் கொஞ்சம் மிகையான அழகுபடுத்தல்களோடும் செம்மையானதாகவுமே அமைப்பார்கள்.


சே குவேரா வாழ்க்கையை வேறு எந்த இயக்குநர் படமாக்கியிருந்தாலும், கொஞ்சம் செயற்கைத்தனத்தோடு அதிமனிதராகவே அவரை சித்தரித்திருப்பார். ஏனென்றால், பொதுவில் அவருக்கு இருக்கும் பிம்பம் அத்தகையது. "சே" புரட்சியின், கட்டுடைத்தலின், எதிர்ப்பின், கலகத்தின் மாபெரும் சின்னமாகவே ஆக்கப்பட்டுவிட்டார். ஆனால் இந்தப் படத்தில் மிகமிக யதார்த்தமாக அவரை வடிவமைத்துக் காட்டியிருக்கிறார்கள் இயக்குநர் ஸோடர்பெர்க்-கும் நடிகர் பெனிசியோ டெல் டோரோ-வும். சமகாலத்தில் உலகின் மிகச்சிறந்த நடிகர்களில் ஒருவர் டெல் டோரோ என்பதை அவர் இந்தப் படத்தில் மீண்டும் நிரூபித்திருக்கிறார். கேண்ஸ் திரைவிழாவில் சிறந்த நடிகருக்கான விருது வழங்கப்பட்டாலும், ஒஸ்கார், கோல்டன் குளோப் போன்றவை ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை. சே குவேரா பாத்திரத்தில் நடித்ததிற்கு அந்த அமெரிக்க விருதுகள் ஏன் வழங்கப்படவில்லை என்பது புரிந்துகொள்ளக் கூடியதே.




அதன் முதல் திரையிடல் கேண்ஸ் திரைப்படவிழாவில்தான் நடந்தது. சுமார் நாலரை மணிநேரம் ஓடும் முழுப் படமும் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டது. பிறகு வெகுஜனப் பார்வைக்கு வெளியிடும்போது இரு பாகங்களாகப் பிரித்து வெளியிடப்பட்டது. முதல் பாகம் சே குவேரா-வின் எழுச்சியையும், இரண்டாம் பாகம் அவரின் வீழ்ச்சியையும் சித்தரிக்கின்றன என்று சுருக்கமாகச் சொல்லலாம். கியூபா புரட்சியை மையமாகக் கொண்டது முதல் பாகம். பொலிவியா நாட்டில் சே நடத்திய கொரில்லா யுத்தத்தை மையமாகக் கொண்டது இரண்டாவது பாகம்.

(தொடரும்)

## ஆதலினால் நீந்துவீர்!



கிடைக்கும் நேரத்தில் கிடைக்கும் உணவு வகைகளை எல்லாம் உண்டு உடல் பெருத்துக் காணப்படும் இளைய சமுதாயத்தினரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நடைப்பயிற்சியுடன் இன்னொரு பயிற்சியையும் மேற்கொண்டால் உடலில் எந்தவித ஆரோக்கியக் குறைபாடும் ஏற்படாது. அதுதான் நீச்சல் பயிற்சி. நீச்சல் பயிற்சிதான் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளையும் ஒரே சமயத்தில் இயங்க வைக்கக் கூடியது.

**பயன்கள்:**

நீச்சலினால் உடலில் உள்ள தேவையற்ற எடை குறைகிறது, தொப்பையையும் கரைக்கிறது.

உடலின் உள்உறுப்புகள், நரம்புகளின் செயல்பாடுகள் சீராகின்றன.

மன அழுத்தம், எதிலும் நாட்டமின்மை போன்ற மனம் சார்ந்த பிரச்சினைகளும் அகலும். எண்ணச் சிதறல்கள் ஏற்படாமல் மனம் ஒரு நிலையையடையும்.

நீச்சல் உடலின் இரத்த ஓட்டத்தைச் சீராக்குகிறது.

இடுப்பு வலி, கழுத்து வலி, தோள்பட்டை வலி ஆகிய வலிகள் காணாமல் போகும்.

சமிபாட்டு சக்தியைத் தூண்டும். அஜீரணக் கோளாறுகளையும் போக்கும்.

நீச்சல் பயிற்சி செய்தால் ஆழ்ந்த உறக்கம் வரும்.

## இஞ்சி மருத்துவம்



இஞ்சிச் சாறுடன் பாலைக் கலந்து உட்கொண்டால் வயிறு சம்பந்தமான நோய்கள் நீங்கும்.

பாலையும் இஞ்சி சாறையும் காய்ச்சிக் கலந்து, வெல்லம், நெய், திப்பிலி பொடி ஆகியவற்றைச் சேர்த்து உட்கொண்டால் கர்ப்பிணிகளுக்கு வரும் வயிற்று, இடுப்பு நோய்கள் நீங்கும்.

இஞ்சியைத் துவையல் செய்து சோற்றில் கலந்து சாப்பிட்டால் மலச்சிக்கல் இருக்காது.

இஞ்சியைப் பச்சடி செய்து உணவுடன் கலந்து சாப்பிட வயிற்றுவலி, கபம், களைப்பு நீங்கும்.

இஞ்சியைச் சிறு துண்டுகளாக நறுக்கி உப்பில் தோய்த்துத் தின்றால், பித்தத்தாலும், கபத்தாலும் தோன்றும் நோய்கள் வருவதில்லை.

('இஞ்சி மருத்துவம்' நூலிலிருந்து...)

# விண்டோஸ் கைப்பேசிகளை பின்தள்ள முன்னேறும் அன்ரோயிட் கைப்பேசிகள்!




ஸ்மார்ட் போன்களில், அதிக எண்ணிக்கையில் பயன்படுத்தப்படும் ஒப்பரேட்டிங் சிஸ்டமாக அன்ட்ரோய்ட் உயர்ந்துள்ளது. விண்டோஸ் தன் நிலையில் இருந்து சரிந்துள்ளது. ஸ்மார்ட் போன்களில் 53.4% போன்கள், அன்ட்ரோய்ட் சிஸ்டத்தினைப் பயன்படுத்தி வருகின்றன. இதனை அடுத்து, அப்பிள் நிறுவனத்தின் ஐ.ஓ.எஸ். சிஸ்டம் 36.3% கொண்டுள்ளது. பிளாக் பெரி மூன்றாவது இடத்தையும், விண்டோஸ் போன் நான்காவது இடத்தையும் கொண்டுள்ளன. விண்டோஸ், முன்பு இருந்த பங்கில், 0.7% குறைந்து 2.9 % மட்டுமே கொண்டுள்ளது இது எதனால் ஏற்பட்டது?

இந்த மந்த நிலைக்குக் காரணம் கூகுள்தான். விண்டோஸ் போன் 8 சிஸ்டத்தில் இயங்கும் வகையில், அப்ளிகேஷன்களைத் தயாரித்து வழங்கப் போவதில்லை என்று அறிவித்து, விண்டோஸ் போன் 8 பயன்படுத்துபவர்கள் அதிக எண்ணிக்கையில் இல்லை எனவும் அறிவித்தது.

இதற்குக் காரணம், மைக்ரோசொப்ட் நிறுவனம், தன் விண்டோஸ் போன் 8 சிஸ்டம், அன்ட்ரோய்ட் மற்றும் ஐ.ஓ.எஸ். சிஸ்டங்களைக் காட்டிலும் திறன் கொண்டது என மக்களிடம் எடுத்துச் சொல்லவில்லை; செல்லவில்லை. எனவே ஸ்மார்ட் போன் சிஸ்டத்திற்கான போட்டியில் அன்ட்ரோய்ட் மற்றும் அப்பிள் நிறுவனத்தின் ஐ.ஓ.எஸ்.6 ஆகியவையே முன்னணியில் ஓடிக் கொண்டிருக்கின்றன.

# அதிகநேரம் ஹெட்போனில் பாட்டுக் கேட்டால் பாதிப்பு வருமா?

ஐபோட் உள்ளிட்ட சாதனங்களில் பாடல்கள் கேட்கும் இளைஞர்கள் வெகுவிரைவில் காது கேட்கும் திறனை இழந்து விடுகின்றனர் என புதிய ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. அமெரிக்கா முழுவதும் இருந்து பலபேர் கலந்துகொண்ட ஆய்வின் முடிவில், ஐபோட் போன்றவற்றில் தொடர்ந்து பாடல்கள் கேட்பதால், இளைஞர்கள் வெகுவிரைவாக கேட்கும் திறனை இழந்து விடுவதாகத் தெரிந்துள்ளது.

அதிக சத்தத்தில் பாடல்கள் கேட்பதுதான் கேட்கும் திறன் குறைவதற்குக் காரணம் என தெரிந்தது. கடந்த 1980ஆம் ஆண்டுகளில் ஹெட்போன்களில் பாடல்கள் கேட்பது என்பது 20 சத விகிதமாக இருந்தது. 1990களில் இன்னும் அதிகரித்து 35 சதவிகிதமானது. இப்போது, செல்போன், ஐபோட், ட்ரோய்ட், பிளாக்பெர்ரி என விதவிதமான சாதனங்கள் பயன்பாட்டில் உள்ளன. இன்றைய இளம் தலைமுறையினர் 24 மணி நேரமும் ஹெட்போன்களில் பாடல்கள் கேட்டபடியே உள்ளனர். இதனால், இளைஞர்கள் வெகு விரைவில் காது கேட்கும் திறனை இழக்கின்றனர்.




# Bluetooth

## புளூடூத் பெயர் வரக் காரணம்

900 ஆண்டுகளில் ஹெரால்ட் புளூடூத் என்ற மன்னர் டென்மார்க்கை ஆண்டு வந்தார். டென்மார்க்கையும் நோர்வே நாட்டின் ஒரு பகுதியையும் இணைத்து பின் கிறிஸ்தவ மதத்தை தன் நாட்டில் அறிமுகப்படுத்தினார். தன்னுடைய பெற்றோர் நினைவாக ஜெல்லிங் ரூன் ஸ்டோன் என்னும் நினைவுச் சின்னத்தினை உருவாக்கினார். பின் 986இல் தன் மகனுடன் ஏற்பட்ட போரில் மரணமடைந்தார். இந்த புளூடூத் தொழில் நுட்பத்தினை நோர்டிக் நாடுகளின் (டென் மார்க்,சுவீடன், நோர்வே மற்றும் பின்லாந்து) விஞ்ஞானிகள் தான் உருவாக்கினர். இவர்களுக்கு அந்த சரித்திர காலத்து அரசன் மீது இருந்த பிரியத்தில், தாங்கள் உருவாக்கிய தொழில் நுட்பத்திற்கு புளூடூத் என்று பெயரிட்டனர். மற்றபடி இத் தொழில் நுட்பம் செயல்படும் விதத்திற்கும் பெயருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.




# மனிதனைத் தாக்கும் கம்யூட்டர் வைரஸ்!




உலகம் முழுவதும் பரவலாக கம்ப்யூட்டர்களில் வைரஸ் பரவுவதை கேட்டிருக்கிறோம். ஆனால் அந்த கம்ப்யூட்டர் வைரஸ் மனிதனையும் தாக்கும் அபாயம் உள்ளது என்பதை கண்டறிந்துள்ளனர் விஞ்ஞானிகள். மார்க் காஸ்சன் என்ற விஞ்ஞானி ஒருவர் கம்ப்யூட்டர்களை தாக்கும் வைரஸ் மனிதர்களுக்கு வைக்கப்படும் மைக்ரோ-சிப்பையும் பாதிக்குமா என்பதை கண்டறிய முனைந்தார். அதனை உறுதி செய்யும் பொருட்டு தனது கையில் வானலை அடையாளம் (radio frequency) சிப்பை தனது கையில் பொருத்திக் கொண்டார்.

வானலை அடையாள (radio frequency) சிப் வெளிக் நாடுகளில் வீட்டில் வளர்க்கப்படும் நாய் மற்றும் பூனை போன்ற விலங்குகளுக்கு பிறந்த உடனே பொருத்தி விடுவர். இதன் மூலம் அதனை மீண்டும் கண்டு பிடிப்பது எளிது. மார்க் காஸ்சன் என்ற விஞ்ஞானி தனது கையில் பொருத்திய சிப்பில் கம்ப்யூட்டர் வைரஸ் பரவச் செய்தார். பின்னர் வைரஸ் பாதிப்புக்கு உள்ளான அந்த மைக்ரோ சிப் அதை தொடர்புகொள்ளும் கம்ப்யூட்டர்களையும் தாக்குகிறது என்பதையும் நிரூபித்துள்ளார். இன்றைய வாழ்வில் மனிதர்களுக்கு இதயத்தில் பொருத்தப்படுவது போன்ற கருவிகள் இந்த வைரஸால் பாதிக்கும் வாய்ப்பு உள்ளதாக தெரிவித்துள்ளார்.

எனவே, மனிதர்களுக்கு பயன்படுத்தப்படும் சிப்கள் போதிய பாதுகாப்பு அம்சங்களுடன் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். ஆனால, இந்த வைரஸ் தாக்குதல் குறித்து கருத்து தெரிவித்துள்ள சோப்ஹோஸ் என்ற வைரஸ் சொப்ட்வேர் நிறுவனம், உடலுக்குள் வைக்கப்பட்டுள்ள மைக்ரோ சிப்பை படிப்பதற்கு ஆர்.எப்.ஐ.டி. ரீடர் வேண்டும். மேலும் அது எளிதான காரியம் இல்லை எனவும் தெரிவித்துள்ளது. ஆனால் மார்க் காஸ்சன், தனது ஆரய்ச்சி தொடரும் என்றும், நாம் போதிய எச்சரிக்கையுடன் இது போன்ற ஆர்.எப்.ஐ.டி. சிப்களை தயாரிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# பேஸ்புக் வலைத்தளம் மீது "ஹேக்கர்கள்" கைவரிசை!





பேஸ்புக் சமூகவலையமைப்பு ஹேக் செய்யப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. கடந்த மாதம் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும் அவர்களால் தகவல்கள் எதனையும் திருடமுடியவில்லையென பேஸ்புக் தெரிவித்துள்ளது. பேஸ்புக் ஊழியர்கள் சிலர் மொபைல் டெவலப்பர் இணையத்தளமொன்றினுள் பிரவேசித்ததாகவும் இதன்போது அத்தளத்தினூடாக நிறுவன மடி கணனிகளில் மல்வெயார் இன்ஸ்டோல் ஆகியுள்ளதாகவும் அந்நிறுவனம் தெரிவிக்கின்றது.

தற்போது தொழிநுட்ப வல்லுநர்களின் உதவியுடன் இதனைத் தொடர்ச்சியாக ஆராய்ந்து வருவதாக பேஸ்புக் தெரிவிக்கின்றது. இதேவேளை டுவிட்டர் தளமும் அண்மையில் ஹேக் செய்யப்பட்டிருந்ததுடன், சுமார் 250,000 பாவனையாளர்களின் கணக்கு விபரங்கள் திருடப்பட்டிருந்தன. அதுமட்டுமன்றி, அமெரிக்க ஊடகங்களான நியூயோர்க் டைம்ஸ் மற்றும் வோஷிங்டன் போஸ்ட் ஊடகங்களின் இணையக்கட்டமைப்பின் மீதும் ஊடுருவல்காரர்கள் தமது கைவரிசையை காட்டியிருந்தனர்.

இவ்விரு நிறுவனங்களும் இத்தாக்குதலுக்கு சீனாவே காரணமென குற்றஞ்சாட்டியிருந்தன. கடந்த சில வருடங்களாக அமெரிக்க நிறுவனங்கள் மீது தொடர்ச்சியாக ஹேக்கிங் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# பேஸ்புக் முதலிடத்தில்




உலக அளவில் அண்மையில் பேஸ்புக் தளப் பதிவாளர் எண்ணிக்கை நூறு கோடியைத் தாண்டியது என்ற தகவல் வெளியானது. பேஸ்புக் தளத்தினைப் பொறுத்தவரை, இந்தியா, பிரேசில் மற்றும் இந்தோனேஷியா நாடுகளில் தான் வாடிக்கையாளர் வளர்ச்சி மிக அதிகமாக உள்ளது. மொத்த வாடிக்கையாளர்களில், 84% பேர் அமெரிக்கா தவிர்த்து மற்ற நாடுகளில் உள்ளனர்.

உலகின் மிகப் பெரிய சமூக இணைய தளமாக இயங்கும் பேஸ்புக் சென்ற டிசம்பர் வரையில், இந்தியாவில் 7 கோடியே 10 இலட்சம் பதிவாளர்களைக் கொண்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் பிரேசில் நாடுகளை அடுத்து, இந்தியாவில்தான் அதிகம் பேர் பேஸ்புக் இணைய தளத்தினைப் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால், அனைத்து நாடுகளிலும், மொபைல் சாதனங்கள் வழியாக பேஸ்புக் தளம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.சென்ற டிசம்பர் முடிவில், இவர்களின் எண்ணிக்கை 15.7 கோடியாகும். வருங்காலங்களில், மொபைல் வழி பேஸ்புக் பயன்படுத்துபவர்களே அதிகமாக இருப்பார்கள் என்று அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

2004இல் தொடங்கப்பட்டு, பெப்ரவரி 4 முதல் தன் ஒன்பதாவது ஆண்டு இயக்கத்தினைத் தொடங்கியுள்ளது பேஸ்புக். ஆர்குட், யாஹூ 360 போன்றவற்றின் வாடிக்கையாளர்கள் படிப்படியாய் குறைந்துவிட, பேஸ்புக் வேகமாக வளர்ந்து, தானே முதல் இட சமூக இணையதளம் என்ற பெயரினைப் பெற்றுள்ளது.

# பரீட்சைப்பெறுபேறுகள் தாமதத்தினால் முகாமைத்துவ உதவியாளர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசசேவையில் இணைந்துகொள்ளும் அனைவரும் தமது சேவையை உறுதிப்படுத்துவதற்கும், பதவி உயர்வுகளுக்கும் பல பரீட்சைகளை சந்திக்கின்றனர். இதில் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான "வினைத்திறமை காண் தடைப்பரீட்சை", தரம் iii இல் இருந்து தரம் ii இற்கு தரம் உயர்த்தும் பரீட்சைகள் நடைபெற்று ஒரு வருடத்தின் பின்னரே பரீட்சை முடிவுகள் வெளியிடப்படுகின்றன.

இச்சந்தர்ப்பத்திலேயே அடுத்த பரீட்சைக்கான விண்ணப்பங்களும் கோரப்படுகின்றன. இதனால் அலுவலர்கள் தமது நிலையினை அறிந்து அடுத்த பரீட்சைக்கு தயார்படுத்த முடியாமல் திண்டாடுகின்றனர்.

பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இப் பரீட்சையில், இலட்சக்கணக்கில் தோற்றும் பாடசாலை மாணவர்களின் ஏனைய பரீட்சைப் பெறுபேறுகள் 3-4 மாதங்களில் வெளியிடப்படும் போது ஏன் ஆயிரக்கணக்கான அலுவலர்களின் பெறுபேறுகள் வருடக்கணக்காக தாமதப்படுகின்றதென பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தரம் iii இல் இருந்து தரம் ii இற்கு தரம்உயர்த்தும் பரீட்சைப்பெறுபேறுகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்படுவதில்லை. சித்தியடைந்தவர்கள் மட்டும் அடுத்த தரத்திற்கு நியமிக்கப்படுகின்றனர்.

ஏனையவர்களுக்கு தமது பரீட்சை முடிவினையோ, தமது பதவி சார்ந்த கல்வி நிலை எத்தரத்தில் உள்ளது என்பதையோ அறியும் உரிமை மறுக்கப்பட்டுள்ளதாகவும் பலரும் தமது கவலையை வெளியிட்டுள்ளனர்.

இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து தமக்கு விமோசனம் கிடைக்க வழி செய்வார்களா எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை தரம் iii இல் இருந்து தரம் ii இற்கு தரம் உயர்த்தும் பரீட்சை நடைபெற்றுள்ளது. இதன் பெறுபேறு எப்போது வெளிவரும்? என பரீட்சார்த்திகள் கேட்கின்றனர். (31)



கிளிநொச்சி மாவட்ட நாச்சிக்குடா ஜும்மா பள்ளிவாசல் மதுரஸாவில் ஜமாலிய்யா அஹதிய்யா பாடசாலை அங்குராப்பணவைபவமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் பள்ளி தலைவர் ஏ.எம்.ரபீயுத்தீன் தலைமையில் இடம்பெற்றபோது, சம்மேளனத்தின் தலைவர் மௌலவி எம்.எஸ்.ஏ.எம்.முபாறக் மௌலவி இர்பான்னுக்கு பரிசு வழங்குவதையும், கலந்துகொண்ட மாணவர்களையும் காணலாம். (105)

# பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் அரச சிறுவர் ஓவியப் போட்டி

(வடமராட்சி)

கலாசார பண்பாட்டலுவல்கள் அமைச்சின் கலாசார அலுவலர்கள் திணைக்களத்தின்கீழ் உள்ள இலங்கை கலைக்கழகத்தின் ஓவிய மற்றும் சிற்பக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள அரச சிறுவர் ஓவிய விழாவை முன்னிட்டு அரச சிறுவர் ஓவியப்போட்டி நடாத்தப்படவுள்ளது.

இப்போட்டி பாலர் பிரிவு (5-6வயது), சிறுவர் பிரிவு (7-9வயது), கனிஷ்டபிரிவு (10-12வயது), சிரேஷ்டபிரிவு (13-15வயது), அதிசிரேஷ்டபிரிவு (16 -18 வயது) ஆகிய பிரிவு ரீதியாக நடைபெறவுள்ளதுடன், போட்டியாளர்கள் விரும்பிய தலைப்பில் விரும்பிய வர்ணங்களில் ஓவியத்தை வரையலாம்.

மேலும் ஓவியம் 18X14 அங்குலத்தை கொண்டிருக்க வேண்டும். அனுப்பப்படும் ஆக்கம் இதற்கு முன்னர் வேறு எந்தப் போட்டிகளிலும் சமர்ப்பிக்காதவையாக இருக்கவேண்டும். அத்துடன் நடுவர்கள் குழுவினாலேயே போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். மாணவர்கள் குறிப்பிட்ட மாவட்டத்தில் போட்டிக்காக தெரிவு செய்யப்படுவார்கள்.

போட்டியாளர்கள் ஆரம்பச் சுற்றுக்கான ஆக்கங்களை எதிர்வரும் மார்ச்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், ஓவிய சிற்பக்குழு, தேசிய கலாபவனம், நெலும்பொக்குண மாவத்தை, கொழும்பு - 7 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அத்துடன் ஓவியத்தின் பின்புறத்தில் பெயர், பிறந்ததிகதி, 01.01.2013ஆம் திகதியில் வயது, போட்டிப்பிரிவு நிரந்தர முகவரி, வதிவிடமாவட்டம், தொலைபேசி இலக்கம் என்பவற்றை தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ அவசியம் குறிப்பிடுதல் வேண்டும். இந்த விடயங்களைப் பூரணப்படுத்தாத ஓவியங்கள் நிராகரிக்கப்படும்.

இப்போட்டியில் மாவட்ட ரீதியாக 150 பேர் தெரிவு செய்யப்படுவதுடன், இரண்டாம் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றமுடியும்.

முதல் சுற்றுப் போட்டியில் வெற்றி பெறும் போட்டியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும். இரண்டாம் சுற்றில் வெற்றி பெறும் போட்டியாளர்களின் ஓவியங்கள் 2013 ஆம் ஆண்டுஅரச சிறுவர் ஓவியவிழாவில் சமர்ப்பிக்கப்படும்.

இவற்றில் வெற்றிபெறும் போட்டியாளர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் எதிர்வரும் ஒக்டோபர்மாதம் முதலாம் திகதி ஜோன் த சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ள உலக சிறுவர் தின நிகழ்வில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (116)

# கரந்தன் - நீர்வேலி வீதி புனரமைக்கப்படுவது எப்போது?

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதி-நீர்வேலி கந்தசுவாமி கோவிலடியில் இருந்து பலாலி வீதி - ஊரெழு அம்மன் கோவிலடி வரையுள்ள கரந்தன்-நீர்வேலி வீதி சேதமடைந்து நீண்ட காலமாக திருத்தப்படாமல் குன்றும், குழியுமாக காணப்படுகின்றது.

நீர்வேலி, சிறுப்பிட்டி, போயிட்டி, அச்செழு போன்ற கிராம விவசாயிகள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என பல்லாயிரக்கணக்கானவர்கள் பயன்படுத்தும் இவ்வீதியானது போக்கு வரத்து செய்யமுடியாத அளவுக்கு சேதமடைந்திருக்கும் நிலையில், இது குறித்து பல தரப்பினரிடம் கோரிக்கை விடப்பட்டும் இதுவரை அதிகாரிகள் கவனம் செலுத்தாதிருப்பது கவலையளிப்பதாகவும், குடாநாட்டில் பல குறுக்கு வீதிகள் திருத்தப்படும் பொழுது இந்தப் பிரதான வீதி ஏன் எவரது கண்ணுக்கும் புலப்படவில்லை எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுன்னாகம், திருநெல்வேலி போன்ற பிரதான சந்தைகளுக்கு விசாயிகள் பொருட்களை சைக்கிளிலும், மோட்டார் சைக்கிளிலும் எடுத்துச்செல்கையில் மிகுந்த சிரமமடைவதோடு பழவகைளும், மரக்கறி வகைகளும் கடும் சேதமுற்று அவர்கள் மிகுந்த நட்டம் அடைவதாக கூறப்படுகிறது.

இவ்வீதி சீரில்லாததினால் இந்த வழியாகப் பயணம்செய்யும் மாணவர்கள் பிரதான வீதியில் தமது பேருந்துகளைத் தவறவிடும் சம்பவங்களும் அடிக்கடி நிகழ்ந்தவண்ணம் உள்ளன.

வலி.கிழக்கு பிரதேசசபை நிர்வாகத்திற்குட்பட்ட இவ்வீதியை உரியவர்கள் கவனம் செலுத்தி புனரமைக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (31)

# பதிவிறக்கப் பெட்டகம்

வாழ்க்கையைப் பற்றி எந்த உறுதியான தீர்மானத்தையும் எழுத்தாளன் எடுத்துக்கொள்ளக் கூடாது என்றும் தொடர்ந்து அவன் வாழ்க்கையை மறுபரிசீலனை செய்துகொண்டே இருக்க வேண்டும் என்றும் நான் நம்புகிறேன்.

– சுந்தர ராமசாமி

கதாபாத்திரத்தின் மனோநிலையை விளக்கமாய் சொல்வதை தவிர்ப்பது நல்லது. மாறாக, மனோநிலையை கதாபாத்திரத்தின் செயல் மூலம் காட்ட வேண்டும். – அன்டன் செகோவ்

நான் எதிர்பாராததைச் சொல்கிற ஒருமை உணர்வுள்ள கதையே நல்ல சிறுகதை என்று சொல்வேன். இலக்கியத்தில் இது ஒரு நியதி – வாசகன் எதிர்பார்ப்பதையே எதிர்பார்க்கிற விதத்தில் சொல்லுகிற எழுத்து வெறும் எழுத்து. அது இலக்கியமாவது எதிர்பாராததை எட்டுகிற போதுதான் – எதிர்பாராத விதமாகச் சொல்லுகிற போதுதான். – க.நா.சு.

ரசனை விமர்சனம் என்பது பார்ப்பனீயத்தன்மை கொண்டது. கலகத்தன்மைக்கு எதிரானது. கலை, அழகியல் போன்ற கருத்துக்களை முன்வைத்து ஓராயிரம் வருட வரலாற்று விஷயங்களை மறைத்து விடுவது, வேர்களைத் தேடும் அடையாளத்தைத் திரிப்பது, போராட்டகுணங்களை மழுங்கடிப்பது, எதையும் யோசிக்கவிடாது அநுபூதித்தன்மையை முன்வைப்பது போன்று நிறையக் கூறுகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். காலங்காலமாக இதுபோன்ற ரசனை விமர்சனத்தை முன்வைத்து பார்ப்பனீயம் தனது ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் கட்டமைத்துக் கொண்டே வந்திருக்கிறது. இந்தப் போக்கை மிகவும் போற்றத்தக்க முறையில் எழுத்து சார்ந்த கலை இலக்கியதளத்தில் விமர்சகர் க.நா.சு. பேணி வளர்த்தார். மேலும் ஒரு கலைக்கண்ணோட்டத்துடன் இதையே வேறு ஒரு புதிய பார்வையைப் போல விமர்சகர் வெ.சா. வழிவமைத்தார். இதன் மூலம் பார்ப்பனீயத் தன்மை கொண்ட கலைப்பார்வை 1970களிலிருந்து 2000கள் வரை கோலோச்சியது. இந்த ரசனை விமர்சனத்தை முதன்முதலில் உடைத்தெறிந்தவராக கவிஞர் பிரமிளைக் குறிப்பிடலாம். அதன் தொடர்ச்சியாக அ.மார்க்ஸ், ரவிக்குமார், ராஜ்கௌதமன் போன்றோரைச் சொல்லலாம்.

– கௌதம சித்தார்த்தன்

பாசிசத்தின் மூலக்கூறு – குடும்பம் என்ற சிறு அலகு. இதனாலேயே குடும்பத்தையும், குடும்ப உறவுகளையும் உயர்த்திப் பிடிக்கும் தமிழின் பெரும்பான்மையான எழுத்துக்கள் பாசிசப் பிரதிகளாக எஞ்சுகின்றன. ஆனால் சீரிய கலை முயற்சி என்பது நடைமுறை மதிப்பீடுகளை ஏற்க மறுத்து மொழி, இன, ஜாதி, தேச அடையாளங்களை ஒதுக்கித் தள்ளுகிறது. இதுதான் கலையின் அடிப்படையான குறைந்த பட்சத் தகுதி. – சாரு நிவேதிதா

இலக்கியம் என்பது பொருள் செறியப்பட்ட மொழி. மொழியில் அர்த்தத்தை சேர்ப்பதுதான் இலக்கியம். – எஸ்ரா பவுண்ட்

உயர்ந்த இலக்கியப் படைப்பு என்பது, ஒவ்வொரு தலைமுறைக்கும் புதுப் புதுப் பொருளையும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அர்த்தத்தையும், ஒருவரே வெவ்வேறு காலத்தில் படிக்கும்போது வெவ்வேறு அர்த்தத்தையும் தருவது.

– ஆடன்

என்னைப் பொறுத்தவரை மனதின் அவசர நிலைகளை, வார்த்தைக்கு அப்பாற்பட்டதை வார்த்தைக்கு மடக்கிக் கொண்டுவர, மொழி கசிந்து உருகுவதையும், எரிந்து கரிவதையும் பார்த்துக்கொண்டு, சாதனையாக நிற்கும் என் சிருஷ்டியைக் கண்டு வாயடைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

– நகுலன்

மொழியினூடான தனது யாத்திரையின் போக்கில் கவிஞன் கண்டடைவது, நனவிலியின் ஆழத்தில் புதைந்து கிடப்பதை மீளக்கொணர்வதின் பரவசத்தையே.

– க.மோகனரங்கன்

நாவல்களை வாசிப்பதன் வழியேதான் மக்கள் பல்வேறு விதமான குணங்களையும் தனித்துவங்களையும் கொண்ட மனிதர்களைப் பரிச்சயம் கொள்கிறார்கள். ஒருவேளை இந்த உலகில் நாவல்களே இல்லாமல் போயிருந்தால் இத்தனை வேறுபட்ட மனிதர்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பு முற்றிலும் இல்லாமல் போயிருக்கும். நாவல் என்பது ஒரு ஆவணக் காப்பகம் போன்றது. அது வாழ்வின் பல நுண்மையான விபரங்களைச் சேகரித்து பாதுகாத்து வைக்கிறது. ஆகவே ஒவ்வொரு நாவலும் நூற்றுக்கணக்கான மனிதர்களைப் பற்றிய உளவியல் குறிப்புகளே. – டோரிஸ் லெசிங்

# வெள்ளத்தில் மூழ்கியது நெல்வயல்கள்;
# பூநகரி விவசாயிகள் துயரத்தில்

## நட்டஈடு கிடைக்காமல் ஏக்கம்

(பூநகரி)

பூநகரிப்பகுதியில் பருவம் தப்பிப் பெய்த மழையின் கொடுமையால் 2000இற்கு மேற்பட்ட ஏக்கர் வயல்களில் நெல் நீரின் கீழ் அமிழ்ந்து வெட்டி எடுக்க முடியாத நிலையில் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தம் பெருங்கவலையைத் தெரிவிக்கின்றனர்.

முற்றி விளைந்த நெல் மணிகள் மீண்டும் முளைத்து சில பயிர்களாக காட்சி அளிக்கும் அவலநிலையை பல இடங்களில் காணமுடிகிறது.

பெரும்பாலான விவசாயிகள் தாம் விவசாயத்துக்காகப் பெற்ற கடனை அடைக்க முடியாத நிலையில் அரசின் நஷ்ட ஈடுகிடைக்குமா என்று அங்கலாய்க்கின்றனர்.

அழிவடைந்த காணிகள் விபரத்தை விவசாயப்பகுதியினர் சேகரித்து தமக்கு நிவாரணம் வழங்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கமக்கார அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதியில் வெள்ளம் தேங்காத வயல்களை வெட்டுவதற்கும் அரிவிவெட்டும் இயந்திரம் இல்லாததால் பலர் கையால் வெட்டும் நிலையைக் காண முடிகிறது.

இப்பகுதியில் உள்ள வெட்டு இயந்திரங்கள் மிக அதிகமாக கூலியாக எண்ணாயிரம் ரூபா வரை கேட்பதால் விவசாயிகள் பெரும் அவல நிலைக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (112)

# ரிசானாவைக் காப்பாற்ற இயன்ற அளவு முயற்சித்தேன்

## இன்னும் தணியாத சோகம்



(கொழும்பு)

ரிசானா நபீக்கை காப்பாற்ற, தான் முடிந்தளவு முயற்சித்ததாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார். ரிசானா நபீக்கை காப்பாற்ற, தான் முயற்சிக்கவில்லை என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை அவர் மறுத்துள்ளார்.

தான் அந்தப் பொறுப்பை வெளிவிவகார அமைச்சுக்கு ஒப்படைத்திருந்தால் கடமை மீறியவனாக கருதப்படலாம் என அவர் கூறியுள்ளார்.

ரிசானா நபீக்கை ஷரியா சட்டத்தின் கீழ் சிரச்சேதம் செய்ய சவுதி ஆட்சியாளர்களுக்கு நேர்ந்ததாக அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். ரிசானா நபீக்கை காப்பாற்றத் தவறியதாகத் தெரிவித்து டிலான் பெரேராவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மகாவலி கங்கையில் மூழ்கி ஐந்து இளைஞர்கள் பலி



(கொழும்பு)

நாவலப்பிட்டி வெலிகம் பொல பாலத்திற்கு அருகில் மகாவலி கங்கையில் நேற்று முன்தினம் நீராடச் சென்ற இளைஞர்கள் ஐவர் நீரில் மூழ்கி பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சிவனொளிபாத மலைக்கு யாத்திரை சென்று கொண்டிருந்த இளைஞர்கள் ஐவரே இவ்வாறு நீரில் மூழ்கி பலியாகினர். உயிரிழந்த ஐந்து இளைஞர்களின் சடலங்களும் மீட்கப்பட்டு நாவலப்பிட்டி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

# புதிய சட்டமூலத்துக்கு வலுவடைகிறது எதிர்ப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்காக அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட புதிய சட்டமூலத்தை பூஜாப்பிட்டிய பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.எம்.கலீல் கிழித்து எறிந்து தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகக்கூறியே அவர் இந்த சட்டமூலத்தைக் கிழித்தெறிந்தார்.

பூஜாப்பிட்டிய பிரதேசசபையின் மாதாந்த கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு எதிர்ப்பினைத் தெரிவித்தார். தனது எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கு முன்னர் உரையாற்றிய அவர், உள்ளூராட்சி மன்றங்களுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச பல அதிகாரங்களை வழங்கி இருந்தார்.

இப் புதிய சட்டத்தின் மூலம் இவ்வதிகாரம் மட்டுப்படுத்தப்படுவதுடன் அதன் தலைவர்களுக்கு இருந்த அதிகாரமும் இல்லாமல் போகின்றது. எனவே இச்சட்டத்தை நாம் எதிர்க்கின்றோம் என்று கூறினார். உள்ளூராட்சி மன்றங்களுக்கான சட்டத்தை எதிர்க்கும் பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் சுனில் கொடுகொடெல்ல வழிமொழிந்து உரையாற்றியதுடன், அந்த பிரேரணை இந்த சபையில் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

# யானைத்தந்தங்கள் யாருக்குச்சொந்தம்

## நீடிக்கிறது குழப்பம்

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் பறிமுதல் செய்யப்பட்ட ஆபிரிக்கயானைத் தந்தங்களின் தொகுதியை கோயில்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளியான ஊகங்களை மறுத்துள்ள அரசாங்கம், இவை பற்றி எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை என நாடாளுமன்றில் வைத்து அறிவித் தது.

இந்த தந்தங்களை பெறுவதற்காக சிறிய, பெரிய அளவிலான ஆபிரிக்க யானைகள் வேட்டையாடப்பட்டுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த விசேட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இது போன்ற பிரச்சினையை கையாள்வதற்காக கடைப்பிடிக்க வேண்டிய சர்வதேச நியமங்கள் நடைமுறையில் உள்ளன.

அதன்படி இவை கென்யாவிலிருந்து வந்ததால் இவற்றை கென்யாவிடமே ஒப்படைக்க வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# பாலைதீவு அந்தோனியார் உற்சவம்

## கோலாகல ஏற்பாடுகள்

(முழங்காவில்)

எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெறும் பாலைதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்திற்கு இம்முறை 25 000இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொள் வார்களென எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், நாச்சிக்குடா, வலைப்பாடு, பள்ளிக்குடா துறைகளில் இருந்து யாத்திரிகர்கள் புறப்படுவதற்கேற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், நேற்றுமுன்தினம் பூநகரி பிரதேச செயலர் பணிமனையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டமேலதிக அரச அதிபர் எஸ்.ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெற்ற ஏற்பாட்டுக்குழுக் கூட்டத்தில் வலைப்பாடு பங்குத் தந்தை ஏ.சில்ஹெஸ்தர்தாஸ், பூநகரி பதில் உதவி அரச அதிபர் சத்தியசீலன், திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் வி.சொக்கநாதன், பிரதேச சபைச்செயலாளர், முப்படைகளின் அதிகாரிகள், சுகாதார சேவைப்பகுதியினர், கிராம சேவையாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். குடிநீர் விநியோகம், மலசல கூட வசதிகள், பாதுகாப்பு சேவைகள் மேற்கொள்ளப்பட்டன. (112)

# வெள்ளத்தில் மூழ்கிய நெல்லை வீதிகளில் உலரவிடும் மக்கள்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை மற்றும் நவாலியின் சில பகுதியில் அறுவடைசெய்த நெல்லை பிரதான வீதிகளில் வெயிலில் உலர வைத்துள்ளனர்.

இங்குள்ள பல வயல்களில் அண்மையில் பெய்த மழையினால் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இந்நிலையில் அங்கு முற்றி விளைந்த நெல்லை, வெள்ளத்தில் நின்று பல கஷ்டத்தின் மத்தியில் அறுவடை செயது அந்த நெல்லை ஈரத்துடன் கொண்டு வந்து பிரதான வீதியில் படங்குகளை விரித்து அதன்மேல் பரப்பி வெயிலில் உலர விட்டுள்ளனர்.

இதனால் இவ்வீதியூடாக செல்வோர் ஓரமாக செல்வதை அவதானிக்க முடிகிறது. (104)




நேற்று யாழ்.இந்தியத்துணைத் தூதரகத்தில் நடைபெற்ற இந்திய தகவல் தொடர்பு மையத்தை திறந்துவைக்கும் நிகழ்வில் யாழ்.இந்திய துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் உரையாற்றுவதையும், பாடசாலை மாணவர்களுக்கான ஒரு தொகுதி பாடநூல்களை இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் கையளிப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (படம் : பார்த்திபன்)


# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
## G.C.E. (O/L) Examination model Paper

**விஞ்ஞானமும், தொழில்நுட்பவியலும்**

ஆசிரியர் : S.T. ஜனார்த்தனன் (B.sc)

**01) கிணற்றிலிருந்து நீரை அள்ளுவதற்குப் பயன்படும் பொறியைப் படம் காட்டுகின்றது.**

CD= 40 cm, AB = 10cm





a) படத்திலுள்ள எளிய பொறியின் பெயர் யாது?

b) இப்பொறியின் வேகவிகிதத்தைக் காண்க.

c) பொறி உராய்வற்றதாக இருப்பின் 200 N நிறையுடைய நீருள்ள வாளியை மேலே உயர்த்தத் தேவைப்படும் இழிவு எத்தனத்தின் அளவு யாது?

II) 2 N நிறையும் 1 m நீளமும் உள்ள AB என்னும் சீரான கோல் ஒன்று படத்தில் உள்ளவாறு கத்தி விளிம்பில் சமநிலையில் உள்ளது.




a) x இன் பெறுமானம் யாது?
b) Y இன் பெறுமானம் யாது?
c) R இன் பெறுமானம் யாது?

**02) ஒலி, ஒளி ஆகியவை சக்தியின் வெவ்வேறு வடிவங்களாகும். இவை அலைகளாகப் பரவுகின்றன. இவ் அலைகளுக்கிடையில் ஒத்த இயல்புகள் சிலவும் வேறுபட்ட இயல்புகள் சிலவும் காணப்படுகின்றன.**

I) a) ஒலி, ஒளி அலைகளுக்கிடையேயுள்ள ஒத்த இயல்பு ஒன்றும், வேறுபட்ட இயல்பு ஒன்றும் தருக.

b) குறுக்கலை ஒன்றை வரைந்து அதில் அலைநீளம்; அலைவீச்சம் ஆகியவற்றைக் குறித்துக் காட்டுக.

c) அலைநீளம், அதிர்வெண், அலையின் வேகம் ஆகியவற்றுக்கிடையேயுள்ள தொடர்பை சமன்பாட்டு வடிவில் தருக.

d) வாள் தகடு ஒன்று 50 Hz அதிர்வெண்ணுடன் அதிர்ந்து ஒலியை உருவாக்குகின்றது. இங்கு உருவாக்கப்படும் ஒலியலையின் அலைநீளம் யாது?
(வளியில் ஒலியின் வேகம் - 330 $ms^{-1}$)


**II) வளி, சவ்வு, இழை ஆகியவற்றை அதிரவைப்பதன் மூலம் இசையொலியை உருவாக்கக்கூடிய அமைப்புக்களை மனிதன் அமைத்துள்ளான்.**

a) இழை ஒன்றிலிருந்து உருவாகும் ஒலியின் சுருதி தங்கியிருக்கும் காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக.

b) பின்வரும் இசைக் கருவிகளில் ஒலியின் சுருதி எவ்வாறு மாற்றப்படுகின்றது.
1) புல்லாங்குழல் 2) மிருதங்கம்

c) மருத்துவத்துறையில் பயன்படுத்தப்படும் சில கருவிகள் ஒலியலைகளின் தொழிற்பாட்டை அடிப்படையாகக் கொண்டவை. அத்தகைய தொழில்நுட்பக் கருவிகள் இரண்டின் பெயர் தருக.

III)
a) சமாந்தர ஒளிக்கதிர்கள் பின்வரும் கருவிகளுக்கூடாக பயணம் செய்யும் போது அவற்றில் ஏற்படும் மாற்றத்தைக் காட்ட கதிர்ப்படம் வரைக.
1) குவிவுவில்லை 2) குவிவாடி
b)




**மேலேயுள்ள படத்தை விடைத்தாளில் வரைந்து பொருளினால் விம்பம் எவ்வாறு உருவாகின்றது என்பதைக் காட்ட கதிர்ப்படம் வரைக.**

c) குறிக்கப்பட்ட (படத்தில்) சந்தர்ப்பத்தில் உருவாகும் விம்பத்தின் இயல்புகள் இரண்டு தருக.

**03) உலோகங்கள், கலப்புலோகங்கள் ஆகியவற்றை மனிதன் தன் தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றான். இயற்கையில் அநேகமான உலோகங்கள் சேர்வைகளாகவே காணப்படுகின்றன.**

I)
a) நாகம் உலோகமாகப் பயன்படும் வீட்டுப் பாவனைப் பொருள் ஒன்றைக் குறிப்பிடுக.

b) நாகம் இயற்கையில் எச்சேர்வை வடிவில் காணப்படுகின்றது.

c) இயற்கையில் கிடைக்கும் நாக சேர்வையிலிருந்து நாக உலோகம் எவ்வாறு பெறப்படுகின்றது என்பதை விளக்குக.

II) அனேக உலோகங்கள் ஐதான அமிலங்கள், நீர், வளி ஆகியவற்றுடன் தாக்கமடைகின்றன. ஆவர்த்தன அட்டவணையில் சோடியம் பின்வருமாறு குறிக்கப்படுகின்றது.

$^{23}_{11}Na$

a) சோடியம் ஆவர்த்தன அட்டவணையில் எத்தனையாம் ஆவர்த்தனத்திலும், எத்தனையாம் குடும்பத்திலும் உள்ளது.

b) சிறிதளவு சோடியத்தை எரி கரண்டியில் எடுத்து வெப்பமாக்கும் போது கிடைக்கும் அவதானங்கள் இரண்டைக் குறிப்பிடுக.


c) சோடியம் வளியில் எரியும்போது நடைபெறும் மாற்றத்தைக் காட்ட ஈடுசெய்த சமன்பாட்டைத் தருக.

d) 2.3 g சோடியம் வளியில் எரியும்போது கிடைக்கும் திண்மவிளைவின் திணிவைக் காண்க.
(Na = 23, O =16)

III)
a) சூடாக்கப்பட்ட இரும்புப்பஞ்சு கொதிநீராவியுடன் தாக்கத்தில் ஈடுபடுகிறதா என அறிவதற்கு நீர் அமைக்கும் பரிசோதனை அமைப்பை வரைந்து பெயரிடுக.

b) தாக்கம் நடைபெற்றிருந்தால் அதற்குச்சான்றாகக் கருதக்கூடிய அவதானங்கள் இரண்டு தருக.

**04) மனிதனின் மைய நரம்புத் தொகுதியின் ஒரு பகுதியின் குறுக்குவெட்டை படம் காட்டுகின்றது.**




I)
a) A,B,C,D அகியவற்றைப் பெயரிடுக.

b) இக்கட்டமைப்பிற்கு பாதுகாப்பு வழங்கும் இரு கட்டமைப்புக்களின் பெயர் தருக.

c) F,E ஆகியவற்றுக்கிடையே காணப்படும் கட்டமைப்பு வேறுபாடு ஒன்றும், தொழில் ரீதியான வேறுபாடு ஒன்றும் தருக.

d) A,B ஆகியவற்றில் நரம்புக்கலத்தின் எப்பகுதிகள் காணப்படுகின்றன.

II) முழங்கால் மூட்டுக்கு மேல் காலில் பொருள் ஒன்றால் தட்டும்போது முழங்கால் தானாக உதறப்படுகின்றது. இது ஒரு தெறிவினையாகும்.

a) தெறிவினை என்பது யாது?
b) தெறிவினை நடைபெறுவதற்கு அவசியமான கட்டமைப்புக்கள் நான்கைப் பெயரிடுக.
c) 1) கண்ணுக்குள் பிரகாசமான ஒளியை செலுத்தும்போது நடைபெறும் தெறிவினை மையம் எது?
2) அப்பொழுது நடைபெறும் அவதானம் யாது?

**III) அகச்சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப உடலில் இயைபாக்கங்கள் நடைபெறுகின்றன. இது நரம்பின்றிய இயைபாக்கம் எனப்படும்.**

a) நரம்பின்றிய இயைபாக்கத்தை ஏற்படுத்துபவை உடலிலுள்ள எந்த அமைப்புகள் ஆகும்.
b) மேலே குறிப்பிட்ட அமைப்புகள் இரண்டின் பெயர் தருக.


c) பின்வரும் ஓமோன்களின் அளவு குறைவாக உருவாக்கப்படுவதால் ஏற்படும் நிலைமைகளைக் குறிப்பிடுக.
1) இன்சுலின்
2) தைரொட்சின்
3) வளர்ச்சி ஓமோன்
4) சிறுநீர் பெருக்க எதிர்ப்பு ஓமோன் (A.D.H)

**05) அங்கிகளின் நிலவுகைக்கு உதவும் செயற்பாடு இனப்பெருக்கமாகும்.**
**I)**
a) அங்கிகளில் நடைபெறும் இருவகை இனப்பெருக்க முறைகளைப் பெயரிடுக.
b) இவ்விருவகை இனப்பெருக்க முறைகளுக்கிடையேயுள்ள பிரதான வேறுபாடுகள் இரண்டு தருக.

c) பின்வரும் தாவரங்கள் இயற்கையில் எவ்வாறு இனப்பெருக்கமடைகின்றன.
1) வல்லாரை
2) இஞ்சி
3) சதைகரைச்சான்
4) ஈரப்பலா

d) மனிதனால் மேற்கொள்ளப்படும் செயற்கை முறை இனப்பெருக்க முறைகள் இரண்டைக் குறிப்பிடுக.

**II) அநேகமான தாவரங்கள் வித்துக்கள் மூலம் இனப்பெருக்கமடை கின்றன. வித்துக்கள் உருவாக பூக்கள் அவசியமாகும். பூவின் கூறுகள் இரண்டின் குறுக்குவெட்டு முகத்தைப் படம் காட்டுகின்றது.**




a) A,B ஆகிய பகுதிகள் பூவின் எப்பகுதிகளிலிருந்து பெறப்பட்டவை.

b) C,D ஆகிய அமைப்புக்களின் தொழில் யாது?

c) A,B தவிர்ந்த பூவின் பிற கூறுகள் இரண்டின் பெயர்கள் தருக.

d) பின்வரும் நிலைமைகளுக்கு அமைவான பூவின் பெயர் ஒவ்வொன்று தருக.
1) A,B ஒரே பூவில் இருத்தல்
2) பகுதி A அல்லது B ஒரு பூவில் இருத்தல்


**III) பூவிலிருந்து கனிகளும், வித்துக்களும் உருவாகின்றன. உருவாகும் வித்துக்கள் பல காரணிகளால் பரம்பலடைகின்றன.**

a) கனி உருவாவதற்கு முன்பு நடைபெறவேண்டிய இரு செயற்பாடு களைக் குறிப்பிடுக.

b) நீர் குறிப்பிட்ட ஒவ்வொரு செயற்பாட்டின்போது நடைபெறுவன வற்றைச் சுருக்கமாக விளக்குக.

c) விலங்குகளால் பரவலடையும் கனி, வித்துக்களில் காணப்படக்கூடிய வேறுபட்ட நான்கு இசைவாக்கங்கள் தருக.

**06)**
**I) வித்தியாசமான சுருதியுடைய ஒலியை உருவாக்கும் விளையாட்டு ஊதியின் அமைப்பை படம் கட்டுகின்றது.**




a) வளி உட்செல்லும் இடத்தையும் வெளியேறும் இடத்தையும் குறிப்பிடுக.


b) எதன் அதிர்வால் ஒலி உருவாக்கப்படுகின்றது.

c) உருவாகும் ஒலி எவ்வகை அலைகளாக பயணம் செய்கின்றன.

d) ஊதும்போது முசலத்தை இடது பக்கமாக அசைத்தால் ஒலியின் சுருதியில் எத்தகைய மாற்றம் ஏற்படும்.

e) இதற்கான காரணத்தை விளக்குக.

**II) 'பறக்கும் தட்டு' என்னும் விளையாட்டு அமைப்பின் படம் கீழே தரப்பட்டுள்ளது.**




**07) சுழலும் அச்சில் உள்ள கப்பியின்மீது தங்கூசி நூல் என்னும் பிளாஸ்ரிக் இழை பல தடவை சுற்றப்பட்டுள்ளது. முடிச்சை இழுப்பதன்மூலம் அச்சை சுழலச்செய்யலாம்.**

a) முடிச்சைப் பிடித்து இழுக்கும்போது இறப்பர் நாடாவிற்கு யாது நிகழும்?

b) மேலேயுள்ள சந்தர்ப்பத்தில் நடைபெறும் சக்திமாற்றம் யாது?

c) இழுக்கப்பட்ட முடிச்சை விடும்போது இறப்பர் நாடாவில் யாது நடைபெறுகின்றது?

d) மேலேயுள்ள சந்தர்ப்பத்தில் நடைபெறும் சக்திமாற்றம் யாது?

e) முடிச்சு இழுக்கப்படும் சந்தர்ப்பத்திலும் தளரவிடும் சந்தர்ப்பத்திலும் தட்டு சுழலும் முறையில் உள்ள வேறுபாட்டைக் குறிப்பிடுக.

f) அச்சை மிகவேகமாக சுழலச் செய்யும்போது தட்டு மேல்நோக்கி எழும்புகிறது. இதற்கான காரணம் யாது?

**08) எவையேனும் ஐந்திற்கு விஞ்ஞான ரீதியான விளக்கம் தருக.**

i) சிறுபிள்ளைகளில் ஏற்படும் வயிற்று உபாதையை நீக்குவதற்கு மகனீசியப்பால் வழங்கப்படுகின்றது.

ii) சிறுகுட்டையில் உள்ள நீரினில் தோன்றிய அருகில் உள்ள மரத்தின் விம்பம் குட்டைக்குள் சிறு கல் விழுந்ததும் மறைந்துபோனது.

iii) தூர இடங்களுக்கு மின்வழங்கப்படும்போது மின்னோட்டம் உயர்ந்த வோற்றளவில் அனுப்பப்படுகின்றது.

iv) வினாகிரிக் கரைசலும், அப்பச்சோடாக் கரைசலும் கொண்ட கலவைக்குப் பூச்சி உருண்டைகள் இடப்பட்டதும் அவை மேலே எழும்புவதும் கீழே செல்வதுமாக உள்ளன.

v) புகையிலைக் கன்றுகளின் நுனி அரும்பை அகற்றியதும் கக்க அரும்புகள் வளர்ச்சி அடைகின்றன.

vi) மிளகாய் தாவரத்தை மிளகாய் வித்திலிருந்து உருவாக்க முடிகிறது. ஆனால் வாழையை அதன் வித்திலிருந்து உருவாக்க முடிவதில்லை.

**09) 'லக்ஸ்பான பற்றரிகள் ஏனைய பற்றரிகளைவிடக் கூடிய ஆயுட்காலம் உடையவை' இது ஒரு விளம்பரம் ஆகும். இக்கூற்றின் வலிமையை ஆய்வுமூலம் பரிசோதிக்க ஒரு மாணவன் முனைந்தான். இரு பற்றரிகளில் தொழிற்படும் இரண்டு மின்சூள்கள் 'எவரெடி' பற்றரிகள், 'லக்ஸ்பான' பற்றரிகள் ஆகியவற்றைச் சேகரித்தான்.**

I)
a) பற்றரி ஒன்றின் ஆயுட்காலம் என்பதன் கருத்து யாது?

b) பற்றரியின் ஆயுட்காலத்தில் பங்களிப்புச் செய்யக்கூடிய ஒரு காரணியைக் குறிப்பிடுக.

c) குறிப்பிட்ட பற்றரி ஒன்றில் 7.5 Ah எனக் குறிக்கப்பட்டுள்ளது. இக்கூற்றின் கருத்து யாது?

d) பரிசோதனையின்போது மின்சூள், மின்கலங்கள் தொடர்பாக கவனத்தில் எடுக்கவேண்டிய விடயங்கள் ஒவ்வொன்று தருக.

e) பரிசோதனைக்காக மாணவனால் முன்வைக்கப்படக்கூடிய கருதுகோள் ஒன்று தருக.

f) இருவகை பற்றரிகளின் ஆயுட்காலத்தை ஒப்பிடுவதற்கு மாணவன் மேற்கொண்ட பரிசோதனையின் படிமுறைகளைத் தருக.

g) பரிசோதனையின்போது மின்சூளில் உள்ள மின்குமிழ் தொடர்ச்சியாக ஒளிர்ந்து கொண்டிருக்கும் நேரம் அவதானிக்கப்பட்டு ஒப்பிடப்பட்டது. மேலேயுள்ள சோதனையில் முன்வைக்கப்படக்கூடிய எடுகோள்கள் இரண்டு தருக.

**II) பச்சை நிற ஒளிக்கதிர்கள், சிவப்பு நிற ஒளிக்கதிர்கள் ஒளித்தொகுப்பு வீதத்தில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை அறிவதற்கு நீர் பரிசோதனையை திட்டமிடும் முறையை சுருக்கமாகக் குறிப்பிடுக.**

# 20 பேரை பலியெடுத்த வெடிகுண்டு; வீட்டில் இலகுவாகத் தயாரிக்கப்பட்டது

## தடயங்கள் சேகரிக்க தகவல்

ஐதராபாத் தொடர் குண்டு வெடிப்பு சம்பவத்தில் 700 கிராம் அளவுக்கு அமோனியம் நைதரேட் பயன்படுத்தப்பட்டுள்ளது தடயவியல் அறிக்கையில் தெரிய வந்துள்ளது.தாமிரக் கம்பிகள் மற்றும் சிறு இரும்பு குண்டுகள் போன்றவையும், குண்டுகளை வெடிக்க வைக்க 3.9 வாட் சக்தி கொண்ட பற்றரியும் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

20 பேரைப் பலிகொண்ட வெடிகுண்டு தாக்குதலுக்கு, I,b எனப்படும் சக்தி வாய்ந்த நவீன வெடிகுண்டுகளை தீவிரவாதிகள் பயன்படுத்தியுள்ளனர்.

ஐந்து வெடிபொருட்களை பயன்படுத்தி, வீட்டிலேயே எளிய முறையில் இந்த வெடிகுண்டு தயாரிக்கப்படுவதாக கூறப்படுகிறது. தென்ஹல்குடா மத்திய சிறையில் உள்ள முந்தைய குண்டு வெடிப்பு சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளிடம் தேசிய புலனாய்வு அமைப்பினர் விசாரணை நடத்தி வருவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளது.

குண்டு வெடிப்பின் பின்னணி தெரிய வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், தீவிரவாதத் தாக்குதல் குறித்து உளவுத்துறை முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்த பின்னரும், அதனை தடுக்க மத்திய, மாநில அரசுகள் தவறிவிட்டதாக பாரதிய ஜனதா குற்றம்சாட்டியுள்ளது. அக்கட்சியின் மூத்த தலைவரான வெங்கையா நாயுடு மாநிலங்களவையில் பேசும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், தீவிரவாதிகள் அப்சல் குரு, கசாப் ஆகியோரை தூக்கிலிட்டதற்கு பழி வாங்குவோம் என்று லஷ்கர்-இ-தொய்பா பகிரங்கமாக எச்சரித்திருந்ததையும் வெங்கையா நாயுடு சுட்டிக் காட்டிப் பேசினார்.




## கிறிஸ்தவ நற்சிந்தனை

# மறுரூபம் தேவை

மறுரூபம் இயேசுவின் வாழ்வில் நிகழ்ந்தது போல எமது வாழ்விலும் நிகழ்தல் அவசியம். சீடர்களும், திருத்தொண்டர்களும் பிற்காலத்தில் மறுரூபமாக்கப்பட்டார்கள்.

அடிப்படைவாதச் சிந்தனையில் மறுரூபம் தேவை. இனவாதச் சிந்தனையில் இருந்து மறுரூப்ம் தேவை. ஆன்மீக மேலாதிக்க சிந்தனையில் இருந்து மறுரூபம் தேவை.

சாதிய, பிரதேச, பாலியல் சார்ந்த மேலாண்மை சிந்தனையில் இருந்து மறுரூபம் தேவை. கடின உள்ளம் கரைந்த உள்ளமாக மாற மறுரூபம் தேவை. பழிவாங்கும் சிந்தனையில் இருந்து பரிவிரக்கம் கொள்ள மறுரூபம் தேவை. இவ்வாறு மறுரூபம் எம் வாழ்வில் ஒவ்வொரு அசைவுகளிலும் தேவை.

இயேசுவோடு சென்ற சீடர்கள் மலையில் தங்கிவிட விரும்பினர். மகிமையில் தொடர்ந்து இருக்க விரும்பினர். துன்பமற்ற அந்த மகிழ்ச்சியை விரும்பினர். ஆனால், இயேசு மறுரூபம் பெற்ற மலையில் இருந்துகொண்டு கொல்கொதா மலையைப் பற்றி சிந்தித்துக் கொண்டு இருந்தார். எருசலேமில் நடக்கவிருக்கின்ற வேள்விப் பலியைப் பற்றி சிந்தித்துக் கொண்டு இருந்தார். இன்று எமது சிந்தனை எவ்வாறு இருக்கின்றது?

-வி.பி.தனேந்திரா,

# பேஸ் புக் எடை குறைப்பு மருந்து; இந்திய மாணவன் லண்டனில் பலி

சமூக வலைத்தளமான பேஸ் புக்கில் வெளியாகும் விளம்பரத்தைப் பார்த்து உடல் எடையை குறைப்பதற்கான மருந்துகளை சாப்பிட்ட இந்திய மாணவர் ஒருவர் லண்டனில் பலியான சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஹைதராபாத்தைச் சேர்ந்த 18 வயது மாணவரான சர்மத் அலாதின், குண்டான தனது உடலில் சதையைக் குறைத்து, உடலைக் கட்டாக வைத்துக் கொள்ள எண்ணி உலகில் பல்வேறு உயிரிழப்புகளுக்குக் காரணமான டி.என்.பி.என்ற வகை மருந்தினைக் கொண்ட மாத்திரைகளை அதிகம் எடுத்துக் கொண்டார். கடந்த புதன்கிழமை இம்மாணவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. மகனின் மரணத்தைக் கேள்விப்பட்டு, ஹைதராபாத்தில் இருந்து அவரது குடும்பம் லண்டனுக்குப் சென்றுள்ளது.

இவரது மருத்துவ அறிக்கை குறித்து தெரிவித்த மருத்துவர்கள், இந்த மாணவர் எடை குறைக்கும் மாத்திரைகளை அதிகம் உட்கொண்டதால், சதையை அது எரித்து உயிரிழப்புக்குக் காரணமாகிவிட்டது என்று கூறியுள்ளனர்.பேஸ்புக் சமூக வலைப்பக்கத்தில் டிஎன்பி என்று கூறப்படும் சதைகுறைப்பு மருந்தினை வாங்கி உட்கொண்டுள்ளார் அலாதீன். இதனை எடுத்துக் கொண்டதும், பேஸ் புக்கில் அவ்வப்போது தனது சதைகள் உருண்டு திரண்டு வருவது போல் முஷ்டியை மடக்கி புகைப்படம் எடுத்து வெளியிட்டுள்ளார். பெர்ன்ஹாம் பல்கலைக்கு அருகே சர்ரேய் என்ற இடத்தில் எப்சம் பகுதியில் வசித்து வந்த இந்த மாணவர், பல்கலை சார்பிலான தங்கும் இடத்தில் இருந்துள்ளார்.

அவரது நண்பர் ஒருவர் இவரின் செயல் குறித்து மிகவும் விமர்சித்துள்ளார். எனினும் அது குறித்து உயிரிழந்த மாணவன்



கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது இவரது நடவடிக்கை குறித்து பல்கலையும் எச்சரிக்கை விடுத்திருந்ததாம். பின்னர் அனைத்து மாணவர்களுக்கும் இந்த மருந்துகள் குறித்து எச்சரிக்கை அறிவிப்பும் அளித்துள்ளது.

# சிம்புவின் பாட்டுக்கு 5 இலட்சம்


## பாடகர் - பாடகிகள் கொதிப்பு



'பசங்க' பாண்டிராஜ் இயக்கும் கேடி பில்லா கில்லாடி ரங்கா படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசை அமைத்து வருகிறார். இதில் சிம்பு ஒரு பாடல் பாடியுள்ளார். இதற்காக அவருக்கு 5 இலட்சம் சம்பளமாக கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு பாடகருக்கு கொடுக்கப்பட்ட அதிக பட்ச சம்பளம் இது என்று கூறப்படுகிறது. இன்று முன்னணியில் உள்ள பாடகர்களே 50 ஆயிரம் முதல் ஒரு இலட்சதிற்குள்தான் சம்பளம் வாங்குகிறார்கள். எஸ்.பி.பாலசுப்பிரமணியம், கே.ஜே.யேசுதாஸ் போன்றவர்களுக்கே ஒரு இலட்சத்திற்கும் குறைவான சம்ளம்தான். உதித் நாராயணன், உன்னி மேனன், உன்னி கிருஷ்ணன், கார்த்தி, சின்மயி, ஆண்ட்ரியா, ஹரிகரன் போன்ற முன்னணி பாடகர்கள் யாருக்குமே ஒரு இலட்சத்திற்குமேல் சம்பளம் இல்லை. ஆனால் சிம்புவுக்கு 5 இலட்சம் கொடுத்திருக்கிறார்கள். இது மற்ற பாடகர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இதுகுறித்து பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு பாடகர் கூறியதாவது; சினிமாவில் பட்ஜெட்டை குறைக்க வேண்டும் என்பதற்காக ஹீரோக்கள் தங்கள் சம்பளத்தை குறைத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ள நிலையில் பாடகரின் சம்பளத்தை லட்சக் கணக்கில் நிர்ணயிப்பது ஆபத்தானது என்றார்.




# உதட்டுமுத்தக்காட்சிக்கு நடுங்கிய அஜ்மல்



உதட்டு முத்தக்காட்சிக்கு நோ சொன்ன அஜ்மல்! பெரும்பாலும் நடிகைகள்தான் உதட்டு முத்தக்காட்சி என்றால் முகம் சுழிப்பார்கள். ஆனால் சமீபகாலமாக நடிகைகளேகூட அந்த விசயத்துக்கு தயராகத்தான் வருகிறார்கள். ஆனால் கருப்பம்பட்டி படத்தில் நடித்துள்ள அஜ்மலோ, உதட்டு முத்தக்காட்சியா? வேண்டவே வேண்டாம் என்று இயக்குநரிடம் மன்றாடியிருக்கிறார். இந்த மாதிரி காட்சிக்காக சில நடிகர்கள் அலையோ அலையென்று அலைகிறார்கள். நீங்கள் என்னடான்னா உதட்டு முத்தம் என்றதும் இப்படி அலறுகிறீர்களே? என்று கேட்டதற்கு, நடிகைகளுடன் நெருக்கமாகவே இப்போதுதான் நான் நடிக்க பழகி வருகிறேன். இந்த நேரத்தில் உதடு கவ்வி முத்தம் கொடுப்பதென்பது எனக்கு நடுக்கத்தை கொடுக்கிறது என்றாராம்.ஆனால் அப்படத்தில் நாயகியாக நடிக்கும் அபர்ணா பாஜ்பாய், முத்தக்காட்சி என்றதும் பல்லால் உதட்டை கடித்துக்கொண்டு, இன்றைக்கு நானா, அஜ்மலான்னு ஒரு கை பாத்துடுவோம் என்று தில்லாக கமரா முன்பு வந்து நின்றாராம். அவரது வேகத்தை தெரிந்து கொண்ட கருப்பம்பட்டி பட இயக்குநர் பிரபு ராஜ சோழன், அவரை அழைத்து, அஜ்மல் முத்தக்காட்சியில் நடிக்க தயங்குகிறார்.

இதனால் நீங்கள் அவரது கன்னத்தில் முத்தம் கொடுப்பது போன்று காட்சியை மாற்றி விட்டேன் என்று சொன்னாராம்.

இதனால் புல் மூடோடு வந்து நின்ற அபர்ணா, வெறுத்து விட்டாராம். அதோடு, முத்தக்காட்சியில் நடிக்க தயங்கிய அஜ்மலை அதன்பிறகு பார்க்கும்போதெல்லாம், புதிதாக வயசுக்கு வந்த பெண்ணை கலாய்ப்பது போல் விரட்டி விரட்டி கலாய்த்தாராம் அபர்ணா பாஜ்பாய்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................

முகவரி : ....................

பிறந்த ஆண்டு : ....................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# கனடாவில் குடியேறுவோரை குறைக்க கடுமையான சட்டம்

கனடாவுக்கு அகதிகளாக வந்து தங்குவோரின் எண்ணிக்கையை அந்நாட்டின் புதிய சட்டங்கள் குறைத்து விடுவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. ஒரு காலத்தில் ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த ரோமா இனத்தவருக்குப் புகலிடமாக இருந்த கனடா இன்று ஒட்டவாத்திட்டம் போன்ற பல்வேறு சீர்திருத்தங்களாலும், புதிய சட்டங்களாலும் அவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிட்டது.

கனடாவின் புதிய புலம்பெயர்வுச் சட்டங்கள் குறித்து சட்டதரணி சாந்தால் தெஸ்லோகெஸ கூறுகையில், கடந்த 2010ஆம் ஆண்டில் ஹங்கேரியினர் 415பேரும், 2011ஆம் ஆண்டில் 374 பேரும், 2012ஆம் ஆண்டில் 353 பேரும் அகதி நிலை வேண்டி விண்ணப்பித்திருந்தனர்.

# 2 மாணவர்களை கொன்றவருக்கு விஷ ஊசி செலுத்தி மரணதண்டனை

அமெரிக்காவின் ஜார்ஜியா மாவட்டத்தில் கடந்த 1995ஆம் ஆண்டு ஜூலியட் ஏரியின் ஓரம் காரில் அமர்ந்தபடி பேசிக்கொண்டிருந்த 2 கல்லூரி மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.இந்த படுகொலை தொடர்பாக ஆண்ட்ரு ஆலன் குக் (வயது - 38) என்பவரைக் கைது செய்த பொலிஸார் அவர் மீது ஜார்ஜியா நீதிமன்றில் வழக்கு தொடுத்தனர். குற்றவாளிக்கு மரண தண்டனை வழங்கி நீதிபதி தீர்ப்பளித்தார்.இந்த தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யப்பட்டது. மேல் முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் ஆண்ட்ரு ஆலன் குக்-கிற்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை தூக்கிலிடும் நடைமுறை கடந்த ஜூலை மாதம் ஒழிக்கப்பட்டது. அதற்கு மாற்றாக, 3 மயக்க மருந்துகளின் கலவையை மரண தண்டனை கைதிகளின் உடலில் ஊசியின் மூலம் செலுத்தி கொல்லும் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# அவசர பொலிஸாரை அழைத்து அம்மாவைக் காப்பாற்றிய குழந்தை

## – ஸ்கொட்லாந்து அரசு விருது




(எடின்பர்க்)

அவசர பொலிஸுக்கு போன் மூலம் தகவல் தெரிவித்து தாயின் உயிரை காப்பாற்றிய இரண்டு வயது குழந்தைக்கு ஸ்கொட்லாந்து பொலிஸார் விருது வழங்கியுள்ளனர். ஸ்கொட்லாந்தின் மெல்ரோஸ் பகுதியில் வசிக்கும், ராபர்ட்-பிரான்சிஸ்கா தம்பதியின் இரண்டு வயது மகள் ரோவன் ரைச்சல்.

கடந்த 2011இல் வீட்டில் மகளுடன் விளையாடிக்கொண்டிருந்த பிரான்சிஸ்கா, சோபாவில் இருந்து வேகமாக எழுந்த போது, மயக்கம் ஏற்பட்டு தரையில் விழுந்தார். உடனே ரைச்சல், அவசர பொலிஸ் எண் 999 இற்கு போன் செய்து, என் தாய் தூங்கிவிட்டார் கண் விழிக்கவில்லை என கூறினாள். ஏதோ அசம்பாவிதம் நிகழ்ந்திருப்பதை உணர்ந்து பொலிஸார், அழைப்பு வந்த எண்ணின் முகவரியை கண்டுபிடித்து, பிரான்சிஸ்காவின் வீட்டுக்கு விரைந்தனர். அங்கு அவர் மயக்கமடைந்த நிலையில், தரையில் கிடப்பதை கண்டதும், மருத்துவனைக்கு அனுப்பி வைத்தனர். சிகிச்சைக்கு பின், மறுநாள் அவர் வீடு திரும்பினார்.

புத்திசாலித்தனத்தால் தாயின் உயிரை காப்பாற்றிய குழந்தைக்கு,ஸ்கொட்லாந்தின், லோதியான் அண்டு பார்டர்ஸ் பொலிஸார், கடந்த 21ஆம் திகதி விருது வழங்கி கௌரவித்தனர். விளையாட்டாக 999 என்ற எண்ணுக்கு ரைச்சல் டயல் செய்வது வழக்கம். அப்படி செய்தால் பொலிஸ் வந்து விடும் என அவளை செல்லமாக கண்டித்தேன். அதை நினைவில் வைத திருந்து, ஆபத்து சமயத்தில் என் உயிரை காப்பாற்றி விட்டாள் என பிரான்சிஸ்கா பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

உலகச் செய்திகள்

# மாலியில் கார் குண்டுவெடிப்பு; ஐந்து பேர் உயிரிழப்பு




ஆபிரிக்கா நாடான மாலியின் ஒரு பகுதியை தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள நிலையில், அவர்களிடமிருந்து இப்பகுதிகளை மீட்க அரச படையினர் தீவிரமாகப் போராடி வருகின்றனர்.இந்நிலையில் வடகிழக்கு மாலியில் உள்ள டெசலிட் நகர் பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடத்தில் ஒரு கார் வெடித்துச் சிதறியுள்ளது.

இதில் தற்கொலைப் படையை சேர்ந்த 2 பேரும், பொதுமக்களில் 3 பேரும் உயிரிழந்துள்ளனர். மேலும் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.


# ஹிலாரி மேடையில் பேச ஒரு கோடி ரூபா சன்மானம்

(வோஷிங்டன்)



மேடையில் பேசுவதற்கு அமெரிக்க முன்னாள் வெளியுறவு துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் 1 கோடி ரூபாய் பெறுகிறார். அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்டனின் மனைவி ஹிலாரி கிளின்டன் அமெரிக்க வெளியுறவு துறை அமைச்சராக, 2009 முதல் பணியாற்றியவர். கடந்த மாதம் அமைச்சர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். பதவி விலகிய பின், பல்வேறு இடங்களில் அவர் சிறப்புரையாற்றி வருகிறார். ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்று உரைநிகழ்த்த, 1 கோடி ரூபாய் அவருக்கு சன்மான மாக வழங்கப்படுகிறது என பஸ்பீல்டு என்ற இணைய தளம் தெரிவித்துள்ளது. வெளியுறவுத்துறை அமைச்சராக பணியாற்றிய போது அவர் வாங்கிய ஒரு மாத சம்பளத்தை விட இந்தத் தொகை ஏழு இலட்ச ரூபாய் அதிகம். தன் கணவர் பில் கிளின்டன், உரை நிகழ்த்த வாங்கிய சன்மானத்தை விட, ஹிலாரி அதிகம் வாங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# திபெத்தியர்களின் வறுமையை இல்லாதொழிக்க சீனா தீவிரம்




சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள திபெத் ப்குதியை விடுவிக்க வேண்டும் என்று புத்தமத தலைவரான தலாய் லாமா மீண்டும் திபெத்துக்கு திரும்ப வேண்டும் என்றும் திபெத்தியர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இக்கோரிக்கையை வலியுறுத்தி துறவிகள் பலர் தீக்குளித்து உயிரை மாய்த்துள்ளனர்.

போராட்டக்காரர்களை தூண்டி விடுவதாக தலாய் லாமா மீது சீனா குற்றம் சாட்டி வருகிறது. அதேசமயம் திபெத் பகுதியை தங்கள் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்து வைத்துக்கொள்ளும் முயற்சியிலும் சீனா தீவிரம் காட்டியுள்ளது. தொடர் தீக்குளிப்பு சம்பவங்களுக்கு மத்தியிலும் திபெத் பகுதி வளர்ச்சி அடைந்திருப்பதாக கூறி வரும் சீனா, வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்ந்த 1.30 இலட்சம் திபெத்தியர்களின் வாழ்க்கைத் தரம் கடந்த ஆண்டு உயர்ந்திருப்பதாக அறிக்கை வெளியிட்டுள்ளது.

திபெத் பிராந்திய வறுமை ஒழிப்பு அலுவலகம் வெளியிட்டுள்ள அந்த புள்ளி விபர அறிகையில், மத்திய மற்றும் மாநில அரசுகளின் முயற்சிகளால், திபெத் சுயாட்சி பிராந்தியத்தியத்தில் வறுமையில் வாடிய மக்கள் தொகையில் கடந்த ஆண்டு 1.30 இலட்சம் குறைந்திருக்கிறது. 2010ஆம் ஆண்டு 8.33 இலட்சமாக இருந்த ஏழை மக்களின் எண்ணிக்கை 2012இல் 5.83 ஆக குறைந்தது. இந்த ஆண்டு மேலும் 1.28 இலட்சம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது.வறுமை ஒழிப்பு திட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சி முகாம்கள் போன்ற நடவடிக்கைகளால் திபெத் பகுதியில் வறுமை குறைந்திருப்பதாக வறுமை ஒழிப்பு அலுவலக இயக்குநர் தெரிவித்தார்.

# அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு இருவர் பலி; விமான சேவைகள் இரத்து





அமெரிக்காவின் கிரேட் மற்றும் மிட்வெஸ்ட் போன்ற பகுதிகள் கடும் பனிப்பொழிவால் பாதிக்கப்பட்டுள்ளன. பனிப் புயல் தாங்கமல் இருவர் உயிரிழந்துள்ளதால் வீடுகள் மற்றும் சாலைகள் மேல் உறைந்திருக்கும் பனியை அகற்றும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.இதை தொடர்ந்து, ரயில் தண்டவாளங்கள் மூடப்பட்டுள்ளதால் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதையடுத்து பள்ளிகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளன. மேலும், விமான சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. மற்றும் பல இடங்களில் மின் தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளது.

டெக்சாஸ், ஜார்ஜியா பகுதியில் இடி முழக்கத்துடன் பனிப் புயல் வீசியது. கான்சாஸ் பகுதியில் பல இடங்களில் 38 சென்ரி மீற்றர் அளவிற்கு பனிபொழிந்தது. கான்சாஸ் சிட்டியில் மணிக்கு 2-3 அங்குலம் பனி கொட்டியது. இதன் காரணமாக சாலைகளில் பல அடி உயரத்துக்கு பனி கொட்டி வாகன போக்குவரத்து பாதிக்கப்பட்டது. சில இடங்களில் கார்கள் பனிக்கட்டிக்குள் புதைந்து கிடக்கின்றன.

மேலும் அங்குள்ள விமான நிலையம் மூடப்பட்டு, சுமார் 350 விமான சேவை இரத்துச்செய்யப்பட்டன. கடும் மூடுபனியினால் ஏற்பட்ட விபத்துகளில் 19 வயது பெண்ணும், மற்றொரு வாலிபரும் இறந்தனர். மேலும் இந்த பனிப்புயல் வார இறுதியில் கிழக்கு கடற்கரை பகுதிக்கு நகர்ந்து சென்று நியூ, இங்கிலாந்து, கனெக்டிக்கட், மைனி ஆகிய இடங்களில் பனி கொட்டக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# அபிவிருத்தி செயற்திட்டங்கள் ஊர்காவற்றுறையில் அங்குராப்பணம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திசார் செயற்திட்டங்களின் அங்குரார்ப்பண நிகழ்வுகள் நாளை பிற்பகல் 1.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதன்பிரகாரம் ஊர்காவற்றுறை பொதுச்சந்தைக் கட்டட அடிக்கல் நாட்டல், நகர எழுச்சித் திட்டத்தில் புனரமைக்கப்பட்ட ஊர்காவற்றுறை கொத்திக்குள இணைப்பு வீதி, நாரந்தனை கணேசா பாடசாலை வீதி, நாரந்தனை உதாரப்பிட்டி வீதி ஆகிய வீதிகள் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

மேலும் வீதி விளக்குகள் கையளிப்பு மற்றும் மெலிஞ்சிமுனை கிராம மின்விநியோக அங்குரார்ப்பண நிகழ்வு, கடற்றொழிலாளர்களுக்கான பொது மண்டபத் திறப்புவிழா ஆகியன இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுகள் ஊர்காவற்றுறைப் பிரதேசசபை தவிசாளர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளதுடன், இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி சிறப்பு விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கே.கமலேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

# அமைதிப்படை வீரர்களுக்கு பலாலியில் அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

1987ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த ஆயிரத்து 300 இந்திய அமைதிப்படை வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று பலாலியில் இடம்பெற்றது.

பலாலி விமானப்படைத் தலைமையகத்தில் அமைந்துள்ள இந்திய அமைதிப்படை வீரர்களின் நினைவுத் தூபியில் இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தா மற்றும் அவரது துணைவியார் சாலினி காந்தா, யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மகிந்த ஹத்துருசிங்க ஆகியோர் தலைமையில் இந்த நிகழ்வு நேற்றுக்காலை 8.30 மணிக்கு இடம்பெற்றது.

1987ஆம் ஆண்டு காலப்பகுதியில், யாழ். பல்கலைக்கழக வளாகத்திற்குள் பரசூட்டில் வந்து தரையிறங்கிய ஆயிரத்து 300 இந்திய அமைதிப்படையினர், யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் வைத்து விடுதலைப் புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

உயிர் நீத்த இந்திய அமைதிப் படையினருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக பலாலி விமானப்படைத் தலைமையகப் பகுதியில் நினைவுத் தூபி அமைக்கப்பட்டு நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

இந்நிகழ்வில், இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதுவர் வே.மகாலிங்கம், உட்பட யாழ். மாவட்ட முப்படையினரும் கலந்து கொண்டனர். (25)

## ஆறாயிரம்...

னால் அரச நிறுவனங்கள் முழுமையாக செயற்பட வேண்டும்.

படைகளின் செயற்பாடு மக்களின் அமைதியை மேம்படுத்துவதற்கு பயன்படுகிறது. அதற்காக எமது படையினர் பாடுபடுகின்றனர். ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், மக்களின் காணிகளை இராணுவம் சுவீகரிப்பதாகக் கூறி மக்களைப் போராட்டத்திற்கு அழைத்து பூச்சாண்டி காட்டுகின்றார்.

அத்துடன், அரசியல்வாதிகள் இனக்குரோத்தினை ஏற்படுத்தி அமைதியை குலைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் படையினரின் கீழ் இருந்த 11 ஆயிரத்து 284 ஏக்கர் காணிகளில் 5 ஆயிரத்து 282 ஏக்கர் காணிகள் மக்களிடம் மீண்டும் கையளிக்கப்பட்டுள்ள ன. ஐந்து கட்டங்களாக இந்தக் காணிகள் கையளிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, 2000 வீடுகளும் கையளிக்கப்பட்டுள்ளன.

மிகுதியாக இருக்கும் 6 ஆயிரம் ஏக்கர் காணியில் 80 சதவீதமான காணிகளுக்குள் அரச காணிகளும், தனியார் காணிகளும் உள்ளடங்குகின்றன. உயர்பாதுகாப்பு வலயமொன்று யாழ். மாவட்டத்தில் இல்லை. அவ்வாறு இல்லாத உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள காணிகளை இராணுவம் சுவீகரிப்பதென்பது பொய்யான கருத்து.

தனியார் காணிகளில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் நிறைவடையாதுள்ளதால் மக்களை மீள்குடியமர்த்த முடியாதுள்ளது. கண்ணிவெடி அகற்றிய பின்னர் மக்களை மீள்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன், ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய, காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு யாழ். மாவட்டத்தில் தற்போது காணி விற்பனை செய்யும் விலையினை நஷ்டஈடாக வழங்குதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இராணுவத்தால் சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு பதிலாக வேறு இடங்களில் காணியுடன் வீடுகளும் வழங்கப்படும்.

தனியார் காணிகளில் இருந்த இராணுவத்தினர் அக்காணிகளை விட்டு வெளியேறியுள்ளனர். இதன் காரணமாக பலாலிப் பகுதியில் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்றும் யாழ். கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க மேலும் கூறினார். (25)

## முச்சக்கர...

க்க தீர்மானிக்கப்பட்டுள்ள அதேவேளை, 50 ரூபா கட்டணத்தை அறவிடும் பிரிவினர் அதனை 60 ரூபாவாக அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டியில் பயணிப்பதற்கு முதல் கிலோ மீற்றருக்கு தற்போது 35 ரூபா முதல் 38 ரூபா வரை அறவிடப்படுவதாகவும் அந்தத் தொகை நாளை முதல் 40 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அகில இலங்கை முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக் தெரிவித்தார்.

இதேவேளை, பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் தனியார் பஸ் கட்டணங்களும் அதிகரிக்கும் என்று அகில இலங்கை தனியார் போக்குவரத்துச் சங்கம் அறிவித்துள்ளது.

எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கலந்துரையாடப்பபடுவதாகவும் இது தொடர்பில் கூட்டறிக்கையொன்று வெளியிடப்படும் என்றும் அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

## எரிபொருள்...

டுள்ளார். இந்த நிலையில் மக்களுக்கு குறைந்தபட்ச தாக்கம் ஏற்படும் வகையில் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சில அரச நிறுவனங்கள் பெருந்தொகைப் பணத்தைச் செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை மின்சார சபை 38 பில்லியன் ரூபாவையும், ரயில்வே திணைக்களம் ஐந்து பில்லியன் ரூபாவையும் செலுத்தவேண்டியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரசியல்...

தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதிவு விடயம் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டபோது உயர்பீடம் அமைக்கும் தீர்மானம் ஐந்து கட்சிகளினாலும் ஏகமானதாக எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கட்சியிலிருந்தும் தலா மூவர் இணைக்கப்படும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த உயர் பீடம் அமைக்கப்படவுள்ளது. உயர்பீடம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில், மாவட்ட ரீதியிலும் குழுக்களை அமைப்பதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தில் தமிழரசுக்கட்சி சார்பாக அக்கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் ஆகியோரும் ரெலோ அமைப்பின் சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், கோ. கருணாகரம் (ஜனா), சிவாஜிலிங்கம் ஆகியோரும் ஈ.பி.எல்.ஆர்.எப். அமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் ஆனந்தசங்கரியும், புளொட் அமைப்பின் சார்பில் பவான், ஆர்.ராகவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கில் மக்களை அணிதிரட்ட வேண்டிய ஒரு சூழல் தோன்றியுள்ளதால் த.தே.கூ.பின் கட்டுமானப் பணிகளை விரைவாக முடித்து மக்களை அணிதிரட்டுவதற்கான பணிகளை விரைவாக முன்னெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. மீண்டும் மார்ச் மாதம் 30ஆம் திகதி கூடுவதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

## பிளாஸ்ரிக்...

சிறிய பந்து ஒன்றை எடுத்து வாய்க்குள் வைக்கவே அது குழந்தையின் தொண்டைக்குள் சென்று இறுகிக்கொண்டது. இதனையடுத்து குழந்தை மூச்சுத் திணறி கீழே விழுந்து மயக்க முற்றது. இதனையடுத்து பெற்றோர் குழந்தையை உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றதனை அடுத்து குழந்தைக்கு வைத்தியர்களால் தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு தொண்டையில் இருந்த பந்து வெளியே எடுக்கப்பட்டது.

இருந்தும், மயக்கமுற்ற நிலையில் குழந்தை தொடர்ந்தும் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

## பாலச்சந்திரனின்...

போது காட்சிப்படுத்தப்படவுள்ளது. இதேவேளை, குறித்த புகைப்படங்கள் மூலம் ஜனநாயகத்துக்காக போராடும் இலங்கையின் சிங்கள தமிழ் ஊடகவியலாளர்களால், இலங்கையின் உண்மையான நிலவரங்களை வெளிக்காட்டும் வகையில் தம்மிடம் கையளிக்கப்பட்டதாக நோ பயர் சோன் தயாரிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

சுயாதீன ஆய்வின்படி பாலச்சந்திரன் தொடர்பான புகைப்படங்கள், இலங்கையில் இறுதியுத்தம் இடம்பெற்ற 2009 ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி ஒரு மணித்தியாலம் 45 நிமிட இடைவெளிகளில் எடுக்கப்பட்டுள்ளன. பாலச்சந்திரன் உயிருடன் உள்ள புகைப்படம் முற்பகல் 10.14 க்கு எடுக்கப்பட்டுள்ளது. அவருடைய இறந்த உடல் கிடக்கும் காட்சியைக்கொண்ட படம் 2009, மே 19 ஆம் திகதி பகல் 12.02க்கு எடுக்கப்பட்டுள்ளது. எனவே இந்தப் படங்களின் மூலம் பாலச்சந்திரன் போரின் போது இடையில் சிக்கி உயிரிழக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதாக நோ பயர் சோன் தயாரிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

## பாதுகாப்பை...

டுள்ளனர். இவ்வாறான சம்பவங்கள் குறித்த இரகசிய தகவல்களை உடனடியாக பெற்றுக்கொள்வதற்காக தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கு தேவையான அதிநவீன கருவிகள் ஏற்கனவே இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கருவிகள், அரசாங்கத்தின் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் தனியார் தொலைபேசி நிறுவனம் ஆகியவற்றின் ஊடாக கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, எந்த நாடும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் சமயத்தில் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பது அந்த நாடுகளின் அரசாங்கங்களின் பொறுப்பு எனவும் அது வழமையான நடவடிக்கையே எனவும் கூறியுள்ளார்.

இதனால் வெளிநாட்டு சக்திகள் இலங்கையின் நற்தோற்றத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் எவ்வாறான

நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் அதனை எதிர்கொள்ளும் பலம் அரசாங்கத்திடம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டிற்கு...

நிலைமையை உலக சமூகத்திற்கு எடுத்துரைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் சமரசிங்க தெரிவித்துள்ளார். ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் கலந்து கொள்ளும் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவிற்கு அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமை தாங்கவுள்ளார்.

எதிர்வரும் 25 ஆம் திகதி இலங்கைப் பிரதிநிதிகள் குழு ஜெனிவாவிற்கு விஜயம் செய்யவுள்ளது. எதிர்வரும் 27 ஆம் திகதி இலங்கை நேரப்படி மாலை 4.20 மணியளவில் அமைச்சர் மகிந்த சமரசிங்க மனித உரிமைப் பேரவை மாநாட்டில் உரையாற்றவுள்ளார். மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளுக்கு பதிலளிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

## 13ஆவது...

என்பதால், 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை தொடர்ந்தும் இதேவகையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமா அல்லது அதிகாரங்களை குறைக்க வேண்டுமா அல்லது அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமா என்பது குறித்து தீர்மானிக்கும் அதிகாரத்தை மக்களிடம் ஒப்படைப்பது மிகவும் சிறந்தது எனவும் அவர் கூறியுள்ளார்.

அவ்வாறான வாக்கெடுப்பு நடத்தப்படும் போது, இலங்கையில் செயற்படும் அரசியல் கட்சிகள், அமைப்புகள் தமது நிலைப்பாடுகளை மக்கள் மத்தியில் முன்வைத்து, மக்களின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் கோத்தாபய குறிப்பிட்டுள்ளார்.

## தமிழர்...

அரசிடம் இருந்து தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்வதும், அதே நேரத்தில் அந்த உதவிகளை ஈழத்தமிழர்களுக்குப் பயன்படுத்தாமல், சிங்களவர்களுக்கே பயன்படுத்தி வருவதாகவும் கருணாநிதி கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனை கைது செய்து இந்தியாவுக்கு கொண்டுவரவேண்டும் என்று சட்டசபையில் தீர்மானமியற்றிய ஜெயலலிதா, தற்போது அவரின் மகன் பாலச்சந்திரன் கொலை செய்யப்பட்டதற்காக கண்ணீர் வடிப்பதாக கூறுவது கேழ்வரகில் நெய் வடிகிறது என்று கூறத்தானே தோன்றும் என்றும் கருணாநிதி கேட்டுள்ளார்.

# வட, கிழக்கில் இராணுவ ஆட்சியை நீக்கு;

# மட்டக்களப்பில் கையெழுத்து வேட்டை



“வடக்கு, கிழக்கில் இராணுவ ஆட்சியை நீக்கு” என்ற தொனிப் பொருளில் நேற்று மட்டக்களப்பு நகரில் பொதுமக்களிடமிருந்து கையொப்பங்களை திரட்டும் போராட்டமொன்று நடைபெற்றது.

சம உரிமை இயக்கம் என்னும அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், பெண்கள் உட்பட பலரும் தமது கையொப்பங்களை பதிவு செய்தனர்.

பொது மக்களின் கையொப்பங்களைப் பெறுவதற்காக, “வடக்கு- கிழக்கில் இராணுவ ஆட்சியை நிறுத்து'' என்ற தொனிப் பொருளிலான பதாகையில், வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்வுரிமையை உறுதிப் படுத்தும் வகையிலும் சிறைகளிலுள்ள அரசியல் கைதிகளின விடுதலையை வலியுறுத்தும் வகையிலும் வாசகங்கள் காணப் பட்டன

கைதுகள் மற்றும் காணாமல் போதல் போன்ற சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டிருந்தன தமது இந்தப் போராட்டம் தொடர்பாக சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான பழனிவேல் ரிச்சர்ட் யுத்தம் முடிவடைந்து விட்டாலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களின் வாழ்வுரிமை இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை, அவர்களின் வாழ்விடங்களில் தொடர்ந்தும் இராணுவம் நிலை கொண்டுள்ளது என்றார்.

— சண்டேலீடர் ஊடகவியலாளர் மீது சூடு —

# சந்தேகநபர்களின் வரைபடங்களை வெளியிட்டனர் பொலிஸார்



(கொழும்பு)

சண்டேலீடர் பத்திரிகையின் ஊடகவியலாளர் மீது துப்பாக்கிச்சூடு நடாத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்களது வரைபடங்களை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் வழங்கிய தகவலின் அடிப்படையில் இரு சந்தேகநபர்களது உருவங்கள் வரையப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த வரைபடத்தில் உள்ளவர்களை அடையாளம் காணும் பட்சத்தில் பொலிஸ் தலைமையகத்தின் 011 266 2323, 011 273 8088 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து தகவல் தெரிவிக்க முடியும்.

சண்டேலீடர் பத்திரிகையின் ஊடகவியலாளர் அஸ்கர் பராஸ் கடந்த 15 ஆம் திகதி இனந் தெரியாத நபர்களால் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மலத்தியோன் உட்கொண்டவர் மந்திகை வைத்தியசாலையில்

(துன்னாலை)

தடைசெய்யப்பட்ட மலத்தியோன் கிருமி நாசினியை உட்கொண்ட குடும்பப்பெண்ணொருவர் சிகிச்சைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோயில் சந்தை துன்னாலையைச் சேர்ந்த கரன் மேகலா (வயது 22) என்ற ஒரு பிள்ளையின் தாயாரே குடும்பத்தகராறு காரணமாக கிருமிநாசினியை உட்கொண்டவராவார். (116)

# காங்கிரஸ் அலுவலகம் சென்னையில் முற்றுகை

(சென்னை)

இலங்கைக்கு உதவியதாக குற்றம் சாட்டி, சென்னையில் உள்ள தமிழக காங்கிரஸ் அலுவலகமான சத்தியமூர்த்தி பவனை மே 17 இயக்கத்தினர் நேற்று முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிக்கட்ட போரின்போது, ஈழத் தமிழர்களை கொன்றொழிக்க உதவியதாக மத்திய காங்கிரஸ் அரசை கண்டித்து, சென்னை அண்ணா சாலையில் உள்ள தமிழக காங்கிரஸ் அலுவலகமான சத்திய மூர்த்தி பவனை, மே 17 இயக்கத்தினர் நேற்று முற்றுகையிட்டனர்.



அப்போது காங்கிரஸ் மற்றும் பிரதமர் மன்மோகன் சிங், முன்னாள் அமைச்சரான பிரணாப் முகர்ஜி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கே.நாராயணன், வெளியுறவுத் துறை செயலர் சிவசங்கர மேனன் உள்ளிட்டோரை கண்டித்து அவர்கள் முழக்கங்களை எழுப்பினர்.

அண்ணா சாலையிலிருந்து, சத்திய மூர்த்தி பவனை நோக்கி சென்ற அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தி, கைது செய்தனர். முன்னதாக சத்திய மூர்த்தி பவனிலிருந்த காங்கிரசாரும் பதிலுக்கு கோஷம் எழுப்பியதோடு, வீதியில் அமர்ந்து போட்டி போராட்டம் நடத்த முயன்றனர். ஆனால் அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தி உள்ளே அனுப்பினர்.

# ஊடகவியலாளர்களின் சொத்துக்களும் திரட்டப்படும்

## - அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் ஊடகவியலாளர்கள் சொத்து விபரங்களை வெளியிட வேண்டுமென ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

எவ்வாறான சொத்துக்கள் குறித்த தகவல்களை திரட்டுவது என்பது குறித்து ஆராய்வத்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால் ஊடகவியலாளர்கள் அனைவரும் சொத்து விபரங்களை வெளியிட வேண்டிய நிர்பந்தம் ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார். எதிர்வரும் மூன்று மாதங்களில் இந்தத் திட்டத்தை அமுல்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

கடந்த காலங்களில் அரசியல் வாதிகளின் சொத்து விபரங்களை வெளியிடுமாறு ஊடகங்கள் கோரிவந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் சுமார் 3000 ஊடகவியலாளர்கள் பதிவு செய்து கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மாகாண ஊடகவிலாளர்கள், முழு நேர ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனையோர் என்ற வகையீட்டின் அடிப்படையில் தகவல்கள் திரட்டப்பட உள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டுள்ளார்.

## இனந்தெரியாதோர் தாக்கி குடும்பஸ்தர் படுகாயம்

(கரணவாய்)

கரவெட்டி குடவத்தைப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் அடிகாயங்களுக்கு இலக்காகிய நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 6.30 மணியளவில் குறித்த நபரின் வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் அவரின் இரண்டு கைகளிலும், முகத்திலும் தாக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

மேற்படி விடயம் தொடர்பாக அவரின் மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப்பதிவு செய்துள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (18)

# மதுபோதையில் சென்ற மூவருக்கு அபராதம்

(அச்சுவேலி)

அச்சுவேலி - பருத்தித்துறை வீதியில் போக்குவரத்துக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரின் சைகையினை ஏற்காது மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்ற மூன்று நபர்களை பொலிஸார் தம்பானைப் பகுதியில் வைத்து மடக்கிப் பிடித்துள்ளனர்.

இவர்கள் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்திற்காகவும், கட்டளையினை மீறிச் சென்ற குற்றத்திற்கு எதிராக கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் ஆஜரப்படுத்தியவேளை மூவருக்கும் தல 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதமும், 6 மாதங்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரத்தினையும் ரத்து செய்து தீர்ப்பு அளிக்கப்பட்டதாக பொலிஸ் சார்ஜன்ட் சுமலசூரிய தெரிவித்தார். (15)

NALIN Information Technologies Pvt Ltd

NALIN IT

உத்தரவாதத்திற்கும்,சேவைக்கும் முன்னுரிமை அளித்துவந்த நாம் தற்போது விற்பனைக்கும் முன்னுரிமை அளித்து அனைத்து பொருட்களுக்குமான விலைகளையும் குறைத்துள்ளோம்.

புதிய வகை HP ,DELL laptops
மிக குறைந்த விலையில்
எம்மிடம் மட்டுமே

C/2502

அனைத்து புதிய விலைகளையுமு உடனுக்குடன் எமது உத்தியோகபூர்வ சமூக வலைத்தளத்திலும் பார்வையிடலாம்

www.facebook/nalinit.com

NALIN INFORMATION TECHNOLOGIES PVT. LTD
195/2, Palaly Road, Parameswara Junction, Jaffna
TP-0212221121
0777667975

# தலைமைத்துவ பயிற்சிக்கு பதிவு செய்ய கால அவகாசம்

(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற தலைமைத்துவ பயிற்சி திட்டத்தில் கலந்துகொள்கின்ற மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் தம்மை பதிவு செய்துகொள்வதற்காக மார்ச் 20 ஆம் திகதி முதல் ஒரு வார காலம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதென உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தலைமைத்துவ பயிற்சியில் ஈடுபடுகின்ற காலப் பகுதிக்குள் பல்கலைக்கழகங்களில் தம்மை பதிவு செய்துகொள்ளுமாறு ஒருசில மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற தலைமைத்துவ பயிற்சி திட்டத்தின் நான்காம் கட்டம் அடுத்த மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதில் மூவாயிரத்து 600 மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளதுடன், திருகோணமலை, மாதுரஓயா, மின்னேரிய, தியத்தலாவ, எம்பிலிப்பிட்டி, பூஸா, தொம்பகொடை மற்றும் ரன்டம்பே ஆகிய பயிற்சி முகாம்களில் தலைமைத்துவப் பயிற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 பெப்ரவரி 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.